www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**ரீவியில் தலையாட்டி!**
புலிக்கு வலைவீசும் பொலிசுக்கும் ஆமிக்கும்
தலையாட்டி ஆட்காட்டுந் தலையாட்டி - தலையாட்டும்
ஆட்டமென்ன கதிர்காமர் அம்மா அருகிருந்து
ஆட்டிவிட்ட ஆட்டத்தின் முன்!

—ஈழமோகம்

இதழ் - 133 ஒக். 23 - நவ. 05, 1997 விலை ரூபா 10.00

# கொழும்புக் குண்டு வெடிப்பும், புலித் தடையும் !



## கிழக்குச் சூறாவளி

## முஸ்லிம் கட்சியின் 'அந்தர் பெல்ட்டி' !

## வட - கிழக்கு இணைப்பு: யாருக்கு லாபம்?

# வன்னியில் புதிய படைப்பிரிவு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமித்த நாட்டிலே"
-பாரதி

**ஆசிரியர் குழு**
பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ.எம்.றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=
வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
**ஆசிரியர்**
**சரிநிகர்**
**4, ஜயரத்ன வழி,**
**திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு - 05.**

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தில் பிரதி செய்தோ அனுப்பி வைக்கவும்.

## ஆலங்கேணி: எருது கோபிக்கின்றது !

கடந்த செப். 26ம் திகதி காலை பத்தரை மணியளவில் ஆலங்கேணி என்ற கிராமத்திலுள்ள பொலிசாரின் காவலரணொன்று விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டுள்ளது. இதில் சஹாப்தீன் என்ற ஊர்காவற் படையைச் சேர்ந்தவர் உயிரிழந்தார். இவருக்குத் திருமணமாகி ஆறு மாதங்களே என்றும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பொலிசார் பதில் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். சுட்டவர்களைக் கண்டு நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் சம்பவம் நடந்த இடத்தைச் சுற்றியுள்ள பொதுமக்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

சம்பவம் நடந்த இடத்துக்கு ஷெல் ஏவியதன் பலனாக மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். வைரமுத்து நாகலிங்கம் என்ற குடும்பஸ்தர் பலத்த காயங்களுக்குள்ளாகி தற்போது கண்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தருமராஜன் செல்வநாயகி என்ற கைம்பெண்ணும் சிவசம்பு வரதராஜா என்ற இளைஞரும் கிண்ணியா மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுள்ளனர். சிவிலுடையில் வந்த கும்பலொன்று ராஜ் என்பவரின் வீட்டுக்குள் புகுந்து கண்ணில் பட்டதையெல்லாம் அடித்து நொறுக்கி வெறியாட்டம் ஆடிச்சென்றிருக்கிறார்கள். இவரது தொலைக்காட்சிப் பெட்டி, டெக், தையல் இயந்திரம் போன்றவை நொறுக்கப்பட்டுள்ளன. ஏறச் சொன்னால் எருது கோபிக்கிறது. இறங்கச் சொன்னால் முடவன் கோபிக்கிறான்.' என்ற நிலைதான் ஆலங்கேணித் தமிழ் மக்களுக்கு!

**திரிபுரன்**

## கேட்காத கேள்வி !

அண்மையில் கைதடியில் பொதுசன ஐக்கியமுன்னணி அரசின் தீர்வுப்பொதி பற்றிய விளக்கக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மனோரஞ்சன், பத்திரான ஆகியோர் உரையாற்றினர். இவர்கள் உரையாற்றி முடிந்ததும் கேள்வி கேட்பதற்கு சபையினருக்கு 15 நிமிட நேரம் அவகாசம் அளித்தனர். அப்போது ஒரு முதியவர் எழுந்து ''தம்பி, இந்த மண்டபத்தில் பல கூட்டங்கள் நடைபெற்றுவிட்டன. நானும் பங்கு பற்றியிருக்கிறேன். எனினும் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக இம்மண்டபத்தில் நடைபெறும் மூன்றாவது கூட்டம் இது'' என்றார்.

''1981ல் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்ட சபைகளை ஏற்றுக்கொண்ட போது மாவட்ட சபைதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என அமிர்தலிங்கம் அவர்கள் வந்து இம்மண்டபத்தில் பேசினார். பின்னர் இந்திய இராணுவ காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் வந்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் தான் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்றார். இம்மண்டபத்தில் இப்போது நீங்கள் வந்திருக்கிறீர்கள் '' என்றார்.

**பரமர்**

## காவலாளி புலியான கதை !

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மகா வித்தியாலயத்தில் தீர்வுத்திட்டம் பற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற ஏற்பாடு. நீதி அரசியல் விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் சிலர் இதில் உரையாற்ற ஏற்பாடு. முதல் நாள் (செப். 20ம் திகதி) அப்பகுதியெங்கும் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இப்பாடசாலையின் காவலாளி நாகராசா ஆனந்தராசா (22) வழமைபோல கடமைக்கு வந்தார். அவர் வந்தது அப்பகுதியில் இருந்த படையினருக்கு தெரியும். இரவு நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் காவலாளி மரணம். சடலம் பொலிசாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

படையினர் இச்சம்பவம் பற்றி யாழ் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர். அதில் காவலாளியின் பொக்கற்றில் கிறனேட், இருந்தது. சாரம் உடுத்தியிருந்தார். உள்ளே காற்சட்டை. அவர் ஒரு புலி என பொருத்தமாக்கி விட்டனர்.

**மரியான்**

## லைசென்ஸ் இல்லாத வியாபாரம்

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெற்று வருவதாக அரசு பிரச்சாரம் செய்து வருகிறது. ஆனால் அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) பெற்று நடாத்தப்பட வேண்டிய இரு தொழில்கள் யாழ்ப்பாணத்தில் அனுமதியின்றி நடைபெற்று வருகின்றன. ஒன்று மது விற்பனை, மற்றையது மருந்து விற்பனை. இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

புலிகளின் ஆட்சிக்காலத்தில் யாராவது ஏதாவது வியாபாரம் செய்ய விரும்பினால், நூறு ரூபா செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற

-பா19

## சீருடை வியாபாரிகள் !

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகர்களுடன் போட்டியாக இப்போது சீருடையினரும் வர்த்தகத்திலீடுபட்டு வருகின்றனர் இவர்கள் யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை தமது செயல்கள் மூலம் நிரூபித்து வருகின்றனர். இவர்கள் கூடுதலாக ஈடுபடுவது வெற்றிலை, சிகரெட் வியாபாரம் என்பவற்றில்தான்.

இவர்கள் தினம் தினம் அன்றைய சந்தை நிலைவரத்தை அறிந்தே பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். வெற்றிலை சில வேளைகளில் சந்தையில் 6 ரூபா என்றால் இவர்கள் வெற்றிலையை கொண்டு வந்து வைத்துக்கொண்டு 7 ரூபா சொல்வார்கள். சிகரெட்டுக்குத் தட்டுப்பாடு என்றால் கடைக்காரர்களிடம் போய் 6 ரூபாவுக்கு சிகரெட் வேண்டுமா என்று கேட்டுக்கொடுத்து விட்டுப் போய்விடுவார்கள். பிறகு சிகரெட் வாங்க வரும் சீருடையினர் சிகரெட்டின் கட்டுப்பாட்டு விலை 5ரூபா தானே, ஏன் கூட விற்கிறீர்கள் என கடை உரிமையாளர்களை மிரட்டுவார்கள். பாவம் இந்த யாழ்ப்பாணக் கடைக்காரர்கள்!

**பரமர்**

## புங்குடுதீவுக்கும் தடை !

புங்குடுதீவில் செப். 17இல் படையினர் இரு புலிகளைச் சுட்டுக் கொன்றனர். சுட்ட பின் இருவரின் சடலங்களை ஆத்திரம் தீர கட்டி இழுத்துச் சென்று ஒரு இடத்தில் வைத்து மக்கள் பார்க்க வைத்தனர். புங்குடுதீவு சம்பவத்தையடுத்து புலிகள் பதிலடியாக மறுநாள் இரவு குறிகட்டுவான் பகுதிக்கு கடல் வழியாக வந்து தாக்கினர். மறுநாள் யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவு சென்ற பயணிகள் குறிகட்டுவான் துறைக்கு முன்னராக உள்ள இடத்தில் நீலச்சீருடையினரால் தாக்கப்பட்டனர். ஒருவரின் வாய்க்குள் ஆயுதம் ஒன்றை வைத்தும் மிரட்டினர்.

அது மட்டுமின்றி புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு பகுதிக்கு செல்வோர் யாழ்ப்பாணத்தில் இருந்து 2 கிலோ உணவுப் பொருட்களை கொண்டு செல்லவே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீவுப்பகுதி 1990க்கு பிறகு படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பகுதி என அரசு அடிக்கடி கூறிவருகிறது.

ஆனால், இந்தத்தீவுப்பகுதிகளில் உள்ள வர்த்தகர்களும் தமது கடைகளுக்கு பொருட்களை எடுத்துச் செல்ல முடியாத நிலை.

இதேபோல், காரைநகரில் இருந்தும் பொருட்களை வெளியே எடுத்துச் செல்ல தடை. காரைநகரில் இன்னும் மக்கள் முழுமையாக குடியேறவில்லை.

இதேபோல் வடமராட்சிப்பகுதியின் கிழக்கிலும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 500 ரூபாவே ஒருவர் கொண்டு போகலாம். மருந்துக்கும் தடை.

இப்படியாக குடாநாட்டின் உள்ளே சில சில இடங்களில் பொருளாதாரத் தடைகள். ஏன் இராணுவ கட்டுப்பாடான யாழ்ப்பாணத்துக்கு சில பொருட்களை எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி பெறவேண்டும். வடமராட்சி கிழக்கில் வைத்திய வசதிகள் இல்லை. அம்பன், மருதங்கேணி வைத்திய சாலைகளே உள்ளன.

இவர்கள் மாந்திகைக்கு வரவல்லிபுரக்கோயில் படையினர் தடை விதிக்கின்றனர். பளைக்குப் போக தாளையடி படையினர் தடை.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல தொண்டர் நிறுவனங்கள் வடமராட்சி மக்களின் நிலையை கவனிப்பார்களா? சுகாதார வசதிகளையாவது செய்வார்களா?

**வடமராட்சியான்**

## அப்பாவிகள் பற்றி என்ன அக்கறை ?

கிளிநொச்சியில் 3ஆம் திகதி வீடுபார்க்கப்போனபோது மறைந்திருந்த படையினரிடம் 22 பேர் சிக்கினர்.

படையினர் இவர்களை ஆனையிறவில் வைத்திருந்து 6ம்திகதி காங்கேசன்துறைக்குக் கொண்டு வந்து 7ம்திகதி யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

தற்போது விடுவிக்கப்பட்ட இவர்கள் கப்பல்மூலம் மன்னார் சென்று பின்னர் வன்னிக்கு அனுப்ப யாழ் அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

1977 இனக்கலவரங்களால் வன்னிப்பகுதியில் குடியேறிய மலையக தோட்டத்தொழிலாளர்களே இந்த 22 பேரும் அப்பாவிகள் என்று தெரியும். ஆனால், படையினருக்கு அப்பாவிகள் பற்றி என்ன அக்கறை!

**ஜெயந்தியூரான்**

## யாழ்ப்பாண நிருவாகம் யாரிடம் ?

யாழ்ப்பாணத்தில் தற்போது சிவில் நிர்வாகம் செயற்பட்டு வருகின்றது. அரச அலுவலகங்கள், நீதிமன்றம், பொலிஸ் என்பன செயற்பட்டு வருகின்றன. எனினும் நிர்வாகம் யாரிடம் உள்ளது என்பதில் குழப்பமான நிலையே காணப்படுகிறது. குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை தண்டிக்கும் வேலையில் பொலிஸ், நீதிமன்றம் என்பன ஈடுபட்டுள்ளன. இராணுவத்தினரும், குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைத் தண்டித்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் அலுவலகங்களைத் திறந்துள்ள தமிழ்க்குழுக்கள் சிலவும் குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்குத் தண்டனை வழங்கி வருகின்றன. இதனால் யாழ்ப்பாணத்தில் இப்போது யாரின் நிர்வாகம் நடைபெற்று வருகின்றது என புரியாமல் உள்ளது.

**பரமர்**

## மணிகளும், ராஜாக்களும் !

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் சேவையில் அடுக்கு மொழியில் பெயர்களைக் கொண்ட நேயர்களே விரும்பிக் கேட்கிறார்கள்(?)போல் தெரிகிறது. உதாரணம் தம்பிராஜா, செல்வராஜா, துரைராஜா, ஸ்கந்தராஜா, மனோன்மணி, அன்புமணி, கண்மணி, செல்வமணி, என்று நீண்ட பட்டியலைச் சொல்லலாம்.

கடந்த ஒக்.7ம் திகதியன்று யாழ் சேவையில் நேயர் விருப்பத்தில் ஒரு பாடலை ஒலிபரப்பிய ஒலிபரப்பாளர் அந்தப் பாடலை பெரியம்மா, பெரியமம்மி, ஆகியோர் விரும்பிக்கேட்டதாகச் சொன்னார். அம்மா என்றால் யார்? மம்மி என்றால் யார்? எமக்குப் புரியவில்லை. புரிந்தவர்கள் யாராவது விளக்கம் அளிப்பார்களா? ஒலிபரப்பாளர் வாயில் வந்த பெயர்களையெல்லா வற்றையும் சொல்வாரோ?

**பரமர்**

www.tamilarangam.net




# ஜயசிக்குறுவிற்கு புதிய படைப்பிரிவு!

-டிசி

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்கு பகுதியினுள் செல்கின்ற அனைத்துப் பாதைகளையும் துண்டித்து புலிகளை அந்தப்பிரதேசத்தினுள் தனிமைப்படுத்தி நசுக்கும் நோக்குடன் ஜயசிக்குறு நடவடிக்கை மீண்டும் முனைப்படைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பிராந்தியத்தினுள் செல்வதற்கு மூன்று பிரதான தரைப் பாதைகள் உள்ளன. பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத்தீவு செல்கின்ற பாதை. மாங்குளத்திலிருந்து ஒட்டிசுட்டான் ஊடாக முல்லைத்தீவு செல்கின்ற பாதை. புளியங்குளத்திலிருந்து நெடுங்கேணியூடாக முல்லைத்தீவு செல்கின்ற பாதை.



நன்றி: வசந்த சிறிவர்தன

இதில் புளியங்குளப் பாதையையும் பரந்தன் பாதையையும் இராணுவம் ஏற்கெனவே அடைத்து விட்டது. மிஞ்சியிருந்த மாங்குளம் ஒட்டிசுட்டான் பாதையைக் கைப்பற்றி அங்கு படைகளைக் குவிக்க இம்மாத ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்தின் 53வது படைப்பிரிவால் எடுக்கப்பட்ட முயற்சிகள் படுதோல்வியில் முடிந்தன.

இம்முயற்சியில் இறங்கிய படைகள் மீது விஞ்ஞானகுளத்திலும், கரப்புக் குத்தியிலும் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

இந்த மோதல்களின் போது கரிபட்ட முறிப்பில் புலிகளின் சுற்றிவளைப்புக்குள் மாட்டியிருந்த 600 படையினரும் மீட்கப்பட்டனர்.

இவர்களுடன் மாங்குளம் பாதையில் வந்துகொண்டிருந்த போது படையினரால் கைது செய்யப்பட்ட லொறிச்சாரதிகள், உதவியாளர்கள் சில பொதுமக்கள் ஆகியோரும் கொண்டு வரப்பட்டனர்.

இதன் பின்னர் இம்மாதம் 10ம்திகதியளவில் படையினர் மீண்டும் ஒட்டிசுட்டான் மாங்குளம் பாதையை நோக்கி முன்னேறிச் சென்று கரிபட்டமுறிப்பில் மீண்டும் ஒரு பெரும் விநியோகத் தளத்தை அங்கு நிறுவுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்விடத்தில் விநியோகத்தளம் ஒன்றை நிறுவுவதன் மூலமாக மாங்குளம் நோக்கிய ஒரு படையெடுப்பிற்கோ அல்லது ஒட்டிசுட்டான் ஊடாக முல்லைத்தீவு நகரினை நோக்கிய ஒரு பெரும் படையெடுப்பிற்கோ அரசு தயாராகிறதென்பது புலிகளுக்கு தெளிவாகத் தெரிந்தது.

குறிப்பாக கனகராயன் குளம் பாதையினூடாகவும், ஒலிமடுவூடாகவும், மாங்குளத்தை நோக்கி முன்னேறுவதைவிட படைகள் ஒட்டிசுட்டான் பாதையில் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருப்பது பின்வரும் நோக்கங்களுக்காக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

1. ஒட்டிசுட்டான் பாதையில் ஒரு பெரிய விநியோகத் தளத்தை நிறுவிக் கொண்டு அங்கிருந்து கிழக்காக ஒரு படையணியும், அதே சமயம் நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள 53படைப்பிரிவின் வேறு அணிகள் வடக்கு கிழக்காகவும், ஒரே சமயத்தில் நகர்ந்து ஒட்டிசுட்டானைக் கைப்பற்றுதல்.

2. ஒட்டிசுட்டானிலிருந்து நேர் பாதையூடாகவோ காட்டுப்பாதைகளினூடாகவோ முல்லை நகரை நோக்கி நகருதல்.

3. இந்த நகர்வுடன் பொருந்தக் கூடிய வகையில் தெற்குத் தொடுவாயிலிருந்து அலம்பில் ஊடாக இன்னொரு படை நகர்த்தலை மேற்கொள்ளல்.

4. முல்லைத்தீவு நகரையும் கரையோரத்தையும் இதன் மூலம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருதல்.

5. புதுக்குடியிருப்பு வழியாக புளியம்பொக்கனை, வட்டக்கச்சி, பரந்தன் ஊடாக யாழ்ப்பாணத்துக்காக தரைவழிப் பாதையைத் திறத்தல்.

இந்த வகையில் பார்த்தால், முல்லைத்தீவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிழக்குப் பகுதியையும் அதன் கரையோரத்தையும் வெலிஓயாவின் ஒரு பிராந்தியத் தொடர்ச்சியாக மாற்றி விடலாம் என்ற கணிப்பும் அரசிடம் உள்ளது.

இதன் மூலம் புலிகளினுடைய சர்வதேச ரீதியிலான ஆயுத இறக்குமதியையும் முற்றாகவே துண்டித்து விடலாம் என்பதும், இராணுவத்தின் நோக்கமாக இருக்கலாம்.

முல்லைத்தீவு - அலம்பில் கரையோரத்தின் ஊடாகவே புலிகளினுடைய அனைத்து வெளிநாட்டு இராணுவத் தளபாடங்களும் ஏனைய பொருட்களும் வந்து சேருகின்றன என்று இராணுவம் கூறிவருவது தெரிந்தது.

இவ்வாறான ஆபத்தான சாத்தியப்பாடுகளை கணக்கில் எடுத்த புலிகள் கடந்த ஒக்டோபர் 13ம்திகதி கரிபட்ட முறிப்பில் மீண்டும் ஒரு பெரும் ஒரு தாக்குதலைத் தொடுத்தனர்.

அதேவேளை அவர்களுடைய இன்னொரு அணி பெரியமடுவில் பல காப்பரண்களையும், மினி முகாம்களையும் நிறுவி தம்மைப் பலப்படுத்திக் கொண்டிருந்த 53ம் பிரிவின் மீதும் ஏனைய சில படைகள் மீதும் தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலில் லெப்டினன் கேர்ணல் சந்திரகாந்தன் உட்பட 84 புலிகள் பலியாகினர். எனினும் இராணுவம் மீண்டும் தன்னை அப்பகுதியில் பலப்படுத்தி வருகிறது. இதேவேளை வன்னிப்போர் முனைக்கு அனுப்புவதற்கென இவ்வாரம் 56ம்பிரிவு எனும் புதிய படைப்பிரிவை உருவாக்கி முடித்துள்ளது. இதில் 9000 படையினர் உள்ளனர்.

வன்னிக்களத்தில் இலங்கை இராணுவம் தற்போது ஒவ்வொன்றும் 9000 கொண்ட 53, 55 ஆகிய படையணிகளை ஈடுபடுத்தியுள்ளது.

புலிகள் இவ்வாறு விரிந்து செல்லும் வன்னி போர்க்களத்தில் எவ்வாறு முகம் கொடுக்கப் போகிறார்கள் என்பது வருகின்ற வாரங்களில் தெரியும். ○

## மாலை நேரத் தேனீர் விருந்து!

யார் இந்த கண்டன ஊர்வலத்தை நடாத்துகிறார்கள் என்று பார்க்காமல், என்ன நோக்கத்திற்காக இது நடக்கிறது என்று பார்த்து இந்த ஊர்வலத்தில் இணைந்து கொள்ளுங்கள் என்ற கோரும் துண்டுப்பிரசுரம் ஒன்றை ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் (புதிய) மாணவர் அமைப்பான ஜனநாயக மாணவர் அமைப்பு (D.S.U.) வவுனியாவில் வெளியிட்டிருந்தது.

ஒன்றிணைவோம், போராடுவோம் என்ற முழக்கத்துடன் சிங்கள கொமிசன் அறிக்கையை எதிர்த்து வெளியிடப்பட்ட இத்துண்டுப் பிரசுரம் அண்மையில் வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எப்பால் நடாத்தப்பட்ட கண்டன ஊர்வலத்தில் பங்குபற்றுமாறு மாணவர்களுக்கு அறைகூவல் விடுத்திருந்தது.

பெருமளவு மக்கள் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்திற்கு மக்களைத் திரட்ட வெளியிட்ட இந்த பிரசுரத்தில் 'யார் செய்கிறார்கள்' என்ற பாராமல் எது செய்யப்படுகிறது என்று பார்த்து பங்குபற்றுமாறு எழுதிய விசித்திரம் தொடர்பாக இருவர் பேசிக்கொண்டவை இவை:

''தங்கடை பேரைச் சொல்லிக் கேட்டால் சனம் வராதெண்டு அவங்களே நினைக்கிறாங்கள் போலை''

''ஈ.பி.ஆர்.எல்.எப். கூப்பிட்டால் அது ஏதேனும் புலிக்கெதிராக அல்லது அரசாங்கத்திற்கு ஆதரவான ஊர்வலம்தான் எண்டு நினைச்சு சனம் வராமல் விட்டாலும் விட்டிடும் எண்டு தான் அப்பிடிப் போட்டிருக்கினம் போலை...''

''கன காலமா மக்களோட்டை தொடர்பில்லாமல் இருந்திட்டு, இப்ப தொடர்பு கொள்ள வரேக்கை இப்பிடி தயக்கம் இருக்கத் தான் செய்யும்... நாள் போகப்போகச் சரியாயிடும்...''

''ஓமோம்.. சனம் நியாயமான போராட்டத்துக்கு எப்பவும் ஆதரவு தரும் எண்டதை அடிக்கடி மறக்கிறவைக்கு கொஞ்சம் பயம் இருக்கத்தானே செய்யும்.. சிங்களக் கொமிசனுக்கு எதிராக போராட இந்தியப்படை வராது எண்டு வடிவாத் தெரிஞ்சதுக்குப் பிறகு வேறை வழியில்லை எண்டு இறங்கியிருக்கினம்... அப்ப பயம் இருக்கும் தானே...''

''போதாக்குறைக்கு புளொட்டின்ரை ஹர்த்தால் வேறை வெற்றிகரமா நடந்திருக்கேக்கை.. பயம் வராமலே இருக்கும்...''

''ஆனாலும் ஒரு சந்தேகம்... இந்த மாதிரி அரசாங்கத்தோடை மிண்டாத, அரசாங்கத்துக்கு நெருக்கடி குடுக்காத போராட்டங்களை மட்டுந்தான் இவை செய்வினமோ என்னவோ?''

''பின்னை? அரசாங்கத்தின்ரை மட்டுமென்ன, அங்கையிருக்கிற மக்களின்ரை, வியாபாரிகளின்ரை, பொது நிறுவனங்களின்ரை அன்றாட நடவடிக்கையள் ஒண்டையும் பாதிக்காத மாதிரித் தானே அவை போராட்டம் நடத்துவம் எண்டு சொல்லுகினம்...''

'அப்ப ஈ.பி.ஆர்.எல்.எப். இன்றை புரட்சி நல்ல அருமையான புரட்சிதான்.. நோகாமல் பிள்ளைப் பெறுகிற மாதிரி...''

''ஓமோம்...'மாலைநேர தேனீர் விருந்து' மாதிரி...''

## பாதுகாப்பு இல்லாமல் போன நட்சத்திர இரவு!

இன்னுமொரு வன்னிக்கதை:

ரெலோ இயக்கத்தின் ஆதரவில் 'யங் ஸ்டார் ஸ்போட்ஸ் கிளப்' என்ற ஒரு அமைப்பு, வன்னித் தமிழ் மக்கள் கண்டு களிக்கவென ஒரு 'நட்சத்திர இரவு' நிகழ்ச்சியொன்றை ஒழுங்கு செய்திருந்தது.

இந்நிகழ்ச்சிக்கு நிழல்கள் ரவி, மனோ என்று பல தென்னிந்திய நட்சத்திரங்கள் வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ரூ.500/=, ரூ1000/= பெறுமதியான டிக்கட்டுக்கள் அடிக்கப்பட்டு வவுனியா முழுவதும் விற்பனை செய்யப்பட்டன.

கிட்டத்தட்ட ரூ. 4லட்சம் மட்டில் சேர்ந்திருக்கும் என்று சொல்கிறார்கள் அங்குள்ளவர்கள்.

டிக்கட்டுகள் பல இடங்களில் பலவந்தமாக கூட விற்கப்பட்டன.

எப்படியோ நட்சத்திர இரவுக்கான நாளும் நெருங்கியது.

ஆனால், திடீரென்று பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்நிகழ்ச்சியை தாம் பிற்போட்டுள்ளதாக அறிவித்தார்கள் இவர்கள். நிகழ்ச்சி மாதங்கள் பல கடந்தும் இன்னும் நடக்கவே இல்லை.

'அது இனி நடக்காது...' என்ற முடிவுக்கு இப்போது எல்லோருமே வந்துவிட்டார்கள்.

ஆனால் கேள்வி இதுதான். வவுனியாவில் ரிக்கட் விற்கும் போது இல்லாத புதிய பாதுகாப்புப் பிரச்சினை திடீரென்று எப்படி நட்சத்திர இரவு நிகழ்ச்சியன்று மட்டும் வந்தது?

ரெலோவுக்குத்தான் வெளிச்சம்.

## குரலெழுப்புவது யார்?

''கைது செய்தவர்களை விடுதலை செய்''

''அகதி முகாம்களில் மக்களைச் சிறை வைக்காதே...''

''காணாமல் போனவர்கள் எங்கே?''

''பாஸ் கெடுபிடிகளை நீக்கு'' போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் கடந்த ஒக்.13ந் திகதியன்று புளொட் ஒரு கடையடைப்பையும், ஹர்த்தாலையும் நடாத்தியது.

நூற்றுக்கு நூறு வெற்றி என்று சொல்லுமளவுக்கு இந்த ஹர்த்தால் வெற்றிகரமாக நடந்தது.

இதை வெற்றி பெறச் செய்ய, ஒரு சில இடங்களில் மிரட்டல்கள், கைதுகள் என்று சில 'இயக்க நடவடிக்கைகளில்' புளொட் ஈடுபட்டிருந்தாலும் கூட இந்த ஹர்த்தால் வெற்றி தான்.

ஏனென்றால் அவர்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைகளுக்கு மக்களின் தார்மீக ஆதரவும் ஓரளவுக்கு இருந்தது.

ஆனால், காணாமல் போனவர்களை விடுதலை செய்யுமாறு இவர்கள் கோரிய போது இன்னொரு முணுமுணுப்பும் அங்கு எழுந்ததை மறுக்க முடியாது.

இவர்களால் கடத்திச் செல்லப்பட்டவர்களுக்காக யார் குரலெழுப்புவது என்பதுதான் அந்தக் கேள்வி.

ஒருவர் குற்றம் செய்தவர் என்பதற்காக, நியாயத்துக்காக குரல் எழுப்பக் கூடாது என்றில்லைத் தான்.

ஆனால், அந்தக் குரலில் ஒரு தார்மீக பலவீனம் இருக்கத்தான் செய்யும்...

புளொட்டுக்கு இது புரிந்தால் சரி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# முஸ்லிம்களின் வெளியேற்றம்: ஏழாண்டு நிறைவு

-பீ.ஏ.எஸ்.சுபியான்

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை ஏனைய இடம் பெயர்ந்தோர்களின் பிரச்சினையிலிருந்து வேறாக நோக்கப்பட வேண்டும்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளின்போது விடுதலைப் புலிகள் முக்கியமானவர்கள் என்பதால் இம்மக்களை வெளியேற்றியவர்கள் அவர்கள் என்பதாலும் முஸ்லிம்களின் வெளியேற்றம்பற்றியும் - மீள்குடியேற்றம் பற்றியும்பேசப்பட வேண்டும்.

வடக்கில்முஸ்லிம்களின்மீள்குடியேற்றம் பாதுகாப்புடனும் இம் முஸ்லிம்கள் அடையாளப்படுத்தியிருக்கும்உரிமைகள் அபிலாஷைகள் அனைத்தும் கிடைப்பதற்கான உத்தரவாதத்துடன் இடம்பெற வேண்டும்.

மீண்டும் வெளியேற்றப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதம் தேசிய சர்வதேசிய மட்டத்தில் அளிக்கப்பட வேண்டும்.

சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு முற்றாக வேரறுக்கப்பட்டவர்கள் என்ற கண்ணோட்டத்தில் மறுசீரமைப்பு புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பின் செயலாளர் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ''வடமாகாண முஸ்லிம்கள் 1990 ஒக்டோபரில் தமது பாரம்பரிய வாழ்விடத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக ஆயுத முனையில் வெளியேற்றப் பட்டார்கள்.

வடமாகாணத்திலுள்ள மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்து எண்பதுக்கும் அதிகமான முஸ்லிம் கிராம, நகரக் குடியிருப்புகளிலிருந்து பதினைந்தாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுடைய ஒரு இலட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

இவ் வெளியேற்றத்தினால் வடமாகாண முஸ்லிம்கள் 128 பள்ளிவாசல்களையும் 26 புனிதஸ்தலங்களையும், 189 அரபு ஆரம்ப போதனா கூடங்களையும் 48 ஆரம்ப மத்திய சிரேஷ்ட பிரிவுகளைக் கொண்ட முஸ்லிம் பெரும்பான்மை பாடசாலைகளையும் மற்றும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு மேற்பட்ட விவசாயக் காணிகளையும் 1400 க்கும் மேற்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனங்களையும் 15000 க்கும் மேற்பட்ட வீடுகளையும் வீட்டு உபயோகப் பொருட்களையும் இழந்துள்ளனர். இவற்றைவிட ஆடு மாடு கோழி போன்ற வீட்டு வளர்ப்பு மிருகங்களையும் பறவைகளையும் விட்டு விட்டே வந்துள்ளனர். மேற்கூறப்பட்ட மொத்த இழப்புக்களின் மதிப்பீடு பத்தாயிரம் மில்லியன் ரூபாய்களை விட அதிகமானதாகக் காணப்படுகின்றது.

அப்பாவிகளான இம் முஸ்லிம் மக்களை வெளியேற்றியதற்கான காரணத்தை புலிகள் இதுவரை கூறவில்லை. உடுத்திய உடையோடு வெறுங்கையோடு சகல உடமைகளையும் விட்டு விட்டு உடனடியாகவே வெளியேறிவிட வேண்டும். இல்லையெனின் அதற்கான விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் எனக்கூறி குறுகிய கால அவகாசத்தில் வெளியேற்றப்பட்ட இம்முஸ்லிம்கள் வெளியேறுமாறு இடப்பட்ட கட்டளையை மீளாய்வு செய்யுமாறும் கால அவகாசத்தை அதிகரித்துத்தருமாறும் முஸ்லிம்கள் வேண்டிய பொழுதும் புலிகள் அதை ஏற்க மறுத்துவிட்டார்கள்.'

வெளியேறறப்பட்டு ஏழு வருடங்கள் முடிந்தும் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் பெரும்பான்மையானோர் புத்தளம், அனுராதபுரம், குருநாகல், கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் அதிகளவில் மிகவும் துயரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

1995ம் ஆண்டு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களில் ஏறத்தாழ 200 அகதி முகாம்களில் 12,500 குடும்பங்களும், அகதி முகாம்களுக்கு வெளியே 5420 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர்.

வடக்கிலிருந்து வெறுங்கையுடன் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தற்பொழுது ஓலைக் குடிசைகளில் சமைப்பதற்கும் உறங்குவதற்கும் மட்டும் தேவையான சில உடமைகளோடு வாழ்ந்து வருகிறார்கள். ஏழு வருடங்களுக்கு முந்திய நிலையோடு இதனை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது ஒரு பாரதூரமான சமூக ஆரோக்கிய வீழ்ச்சியை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கி அளிப்பதிலும், புனர்வாழ்வு வழங்குவதிலும் கவனம் செலுத்தும் இக்கால கட்டத்தில் தமது அடிப்படை வாழ்விட உரிமையைக்கூட அரசியல் மட்டத்தில் உத்தரவாத மற்றவர்களாகக் காணப்படுபவர்கள் இந்நாட்டிலே வடமாகாண முஸ்லிம்கள் மாத்திரம்தான், வாக்காள அடிப்படையில் குறைவான எண்ணிக்கை கொண்டவர்களாகையால் இம்மக்களின் எண்ணக் குரல்கள் தேசியமட்ட அரசியல் சீர்திருத்தப் பேச்சுவார்த்தைகளில் முக்கியத்துவம் பெறாமல் இருப்பது ஆச்சரியத்துக் குரியதல்ல.

இம்மக்களுக்கு விமோசனம் ஒன்று கிடைப்பதானால் தனித்துவமான இவர்களின் பிரச்சினைகள் சரியான முறையில் அணுகப்பட வேண்டும்.

இன்று இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளிலெல்லாம் வட - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சிங்கள மக்களின் பிரச்சினைகளும் முன்னுரிமை பெற்று வருகின்றன.

நாட்டின் பல பகுதிகளில் பாரிய இனக்கலவரங்கள் முன்னர் இடம் பெற்றிருக்கின்றன. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாக இடம் பெயர்ந்த பொழுதிலும் பின்னர் அவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்குச் சென்று மீண்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வடக்கு முஸ்லிம்கள் தங்களது தாயக மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு ஏழு வருடங்களாகியும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு செல்ல முடியாமல் இருக்கின்றனர். அரசாங்கப் படைகள் வடமாகாணத்தின் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பொழுதிலும் இம்முஸ்லிம்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லும் நிலை உருவாகவில்லை. சில இடங்களில் தேவைகளின் நிர்ப்பந்தங்களினால் சென்றவர்களும் அச்சத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டது மாத்திரமன்றி அவர்களது தார்மீக உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டிற்குள் தங்களது பூர்வீக இருப்பிட உரிமை மறுக்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் கௌரவத்துடனும் தன்மானத்துடனும் வடக்கில் மீண்டும் வாழும் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 7வது ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள்

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு(NMRO) வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இம்மாதத்துடன் ஏழு ஆண்டுகள் முடிவடைவதையிட்டு வடக்கிலுள்ள ஏனைய இருபத்தைந்து அமைப்புகளுடன் இணைந்து வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினையை தேசிய சர்வதேசிய மயப்படுத்தும் நோக்கோடு ஒக்டோபர் 24ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

24ம் திகதி வெள்ளிக்கிழமை நாட்டிலுள்ள சகல ஜும்ஆப் பள்ளிவாசல்களிலும் அகதி முஸ்லிம்களின் அவல வாழ்வு எடுத்துரைக்கப்பட்டு அவர்களின் நல்வாழ்விற்கான பிரார்த்தனையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. அன்றிரவு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் குத்பா பிரசங்கம் ஒலிபரப்பப்படுவதுடன் 27ம் திகதி கலந்துரையாடலும் ஒலிபரப்பாகும்.

24 - 31ம் திகதி வரை கொடி வாரமாகப் பிரகடனப்படுத்தப்படுவதுடன், கொழும்பிலும் புத்தளத்திலும் அகதிகள் தொடர்பான கண்காட்சியும் நடைபெறும்.

25ம் திகதி சனிக்கிழமை காலை ரூபவாஹினியில் ஆய்போவன் நிகழ்ச்சியில் நேர்காணலும், ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு அகதிகள் தொடர்பான முப்பது நிமிட வர்ணனை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

புத்தளம் இப்னு பதூதா மண்டபத்தில் 30ம் திகதி வியாழக்கிழமை மாபெரும் எழுச்சிக் கூட்டமும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும், ஒலிப்பதிவு நாடா வெளியீடு, நூல் வெளியீடு ஆகியவையும் இடம்பெறும்.

மேலும், சர்வதேச பத்திரிகையாளர் மாநாடு, வட - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூட்டாகச் சந்திப்பு, வெளிநாட்டுத் தூதுவர்கள், சர்வதேசிய ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து மகஜர் வழங்குவதுடன், ஐ.நா. செயலாளர், நாட்டின் ஜனாதிபதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகியோருக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்படும்.

# வேண்டும் போது வெளிவரும் கோலங்களும், குணங்களும்!

-ஸிராஜ் மஷ்ஹூர்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சாரப் பத்திரிகையான 'நம்நாடு' ஒக். 1997 இதழில் வழக்கத்துக்கு மாறாக வெளிவந்திருக்கும் 'நம்நாடு' எனும் கொட்டை எழுத்துக்களைப் பார்க்கும் எவருக்கும் அது பழைய 'முஸ்லிம் கட்சி' பத்திரிகையை ஞாபகப்படுத்தினால், அது ஒன்றும் அவ்வளவு ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. ஏனெனில், இது தற்செயலாக நிகழ்ந்ததல்ல, 'முஸ்லிம் கட்சியை' ஞாபகப்படுத்த வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு என்பது தான் வெகு சுவாரஸ்யமான விடயம்.

இந்த நம்நாடு இதழை (மலர் 02 : இதழ் 01) முஸ்லிம் கட்சித்தலைவர் சேகு இஸ்ஸதீன் பொறுப்பேற்று செய்திருப்பது நன்கு புலப்படுகிறது. முன்பக்கத்திலேயே 'வேதாந்தியின் 'தேசகீதம்' எனும் கவிதை வெளியாகியிருக்கிறது. சேகு இஸ்ஸதீன் தான் வேதாந்தி என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வேதாந்தி என்ற பெயரில் இவரின் கவிதைத் தொகுதியொன்று 'இருளின் நிழலில்' எனும் பெயரில் மூன்றாவது மனிதன் வெளியீடாக வெளிவந்துள்ளது. உள்ளே 'இனவாதத்துக்கு இரை போடும் தனி அலகு' என்ற கட்டுரையை ஹம்ஸா என்பவர் எழுதியிருக்கிறார். இது முழுக்க முழுக்க தென்கிழக்கு மாகாண சபைக்கு எதிராக சேகு இஸ்ஸதீன் முன்வைக்கும் அதே கருத்துக்களை அச்சொட்டாய் பிரதிபலிப்பதோடு புள்ளி விபரங்களின் உதவியுடன் அதை ஆதார்பூர்வமாக நிறுவ முற்படுகிறது.

இரண்டாம் பக்கத்தில் முஸ்லிம் கட்சியின் உபதலைவர் சட்டமுதுமானி நிஸாம் றஸ்ஸாக்கின் பெயரில் வெளியாகியுள்ள 'பதமலர்த் தட்டும் பல மதப் பற்றும்' என்ற கட்டுரை தீகவாபியில் அமைச்சர் அஷ்ரஃப் மலர்த்தட்டு ஏந்தியது தொடர்பாக விமர்சிக்கிறது. அபூஸூஃபியா, அஸ்ஸுஹூர் போன்ற பெயர்களும் அப்பெயர்களும் வெளிவந்துள்ள, கவிதைகளும் சேகு இஸ்ஸதீனையே ஞாபகப்படுத்துகின்றன.

கடைசிப் பக்கத்திலுள்ள ஆசிரியர் கருத்து 'ஏடிட்டோரியல்' என்ற பெயரில் வெளிவந்த (Editorial) ஏடிட்டோரியல் என்று அழகாகவும் பொருள் சிதையாமலும் தமிழ்ப் படுத்தியதை முன்னைய 'முஸ்லிம் கட்சி' இதழ்களிலேயே நாம் கண்டு ரசித்தோம்.

இவை எல்லாவற்றையும் பார்க்கிற போது முஸ்லிம் கட்சி ஐ.தே.கவினுள் சங்கமமாகி விட்டதோ என்ற எண்ணமே ஏற்படுகிறது. ஒரு கட்சிக்காரர் பிறிதொரு கட்சிப் பத்திரிகையில் எழுதக்கூடாது என்பதல்ல. ஆனால் நம்நாடு பத்திரிகை கணிசமான அளவு முஸ்லிம் கட்சியினரின் செல்வாக்குக் குட்பட்டுள்ளது.

ஐ.தே.க. போன்ற பழம்பெரும் அரசியல் கட்சிக்கு தமிழில் பத்திரிகை நடாத்த நிலவும் தகுதியான ஆட்களின் பற்றாக்குறை தான் முஸ்லிம் கட்சியினரின் இந்தத் திடீர்ப் பிரவேசத்திற்குக் காரணம் எனவும் சொல்லப்படுகிறது.

இதிலிருந்து மிகத் தெளிவாகவே எழுப்பப்பட வேண்டிய கேள்வி தான் முஸ்லிம் கட்சியும், முஸ்லிம் லீக் போல ஐ.தே.கவிற்கு சொறிந்து கொடுத்துக் கொண்டிருக்கப் போகிறதா என்பது தான். ஆனால் இதிலுள்ள முரண் நகையான விடயம் என்னவென்றால், 1993 மார்ச் 'முஸ்லிம் கட்சி' இதழில் இதே சேகு இஸ்ஸதீன் 'ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள் எதிரணிகளுக்கு ஆதரவளியுங்கள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள வேண்டுகோளில் ஐ.தே.க. பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தமைதான்.

*''இன்னும் ஆறேழு வருடங்கள் ஐ.தே.கட்சி இந்த நாட்டை ஆளுமானால் குட்டிச் சுவராய் போய்க் கொண்டிருக்கும் இந்த நாடு ஒரேயடியில் பிணக்காடாகவே மாறிவிடும்''*

*''இந்த நாட்டு மக்களிடம் தேசாபிமானம் வளர்க்கப்படுவதற்குப் பதிலாக சமூகப் பிரிவுக் கோஷம் வளர்க்கப்பட்டுள்ளது. இதற்கான இன்றைய முழுப்பொறுப்பும் ஐ.தே.கவையே சார்ந்ததாகும்''*

இன்று ஐ.தே.கவை ஆதரிக்க முனைவது பிழைப்பு வாதமேயன்றி வேறென்ன? நிலைப்பாடுகள் இல்லாத நிலைமை முஸ்லிம் காங்கிரசுக்கும் அஷ்ரஃபுக்கும் மட்டுமே உரிய ஒன்றல்ல. அது முஸ்லிம் அரசியல் கட்சிகளை வழி நடாத்தும் எல்லோருக்குமே உள்ள பொதுவான ஒரு இயல்பு என்பதற்கு இதைவிடவும் வேறு ஆதாரங்கள் வேண்டுமா?

சேகு இஸ்ஸதீனின் முஸ்லிம் கட்சியும், எம்.ஐ.எம். முஹியத்தீன் காலத்து முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் ஒரு வகை தனிநபர் கட்சிகளாகவே செயற்பட்டு வந்துள்ளன. மு.ஐ.முன்னணி இப்போது அரசியற் களத்தில் அவ்வளவு தூரம் முக்கியத்துவமற்ற கட்சியாகவே உள்ளது.

எம்.ஐ.எம்.முஹியத்தீன் முஸ்லிம் காங்கிரசின் கருவறைக்கள் புகுந்து இன்று தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தினை நிர்மாணிக்கும் கொந்தராத்துக்காரராக இருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸ் தனிநபர் கட்சியாக இல்லாத போதிலும் ஒரு வகையான 'வ[illegible]மான் ஷோ'வும் அஷ்ரஃப் மாயையும் தான் அக்கட்சியினுள் இன்று வரை ஆதிக்கம் செலுத்துகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் மாற்றுக் கருத்துக்களைச் சகிக்க முடியாத இயல்புக்குப் பலிக்கடாவாக்கப்பட்டு, அக்கட்சியை விட்டே வெளியேற்றப்பட்ட சேகு இஸ்ஸதீன் முஸ்லிம் அரசியற் களத்தில் முஸ்லிம் காங்கிரசுக்கு பலமான ஒரு மாற்று சக்தியாக உருவெடுப்பார் என அப்போது பலரும் நம்பினர். அதற்கான பல்வேறு வாய்ப்புகளும் அவருக்கு இருந்தன. ஆயினும் அவர் மீதிருந்த நம்பிக்கையை அவரது தவறான அரசியல் நிலைப்பாடுகளும், வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கட்சிக்கு இருக்க வேண்டிய குறைந்த பட்ச அடிப்படைகள் கூட இல்லாது இயங்கிக் கொண்டிருக்கும் அவரது முஸ்லிம் கட்சியும் கடுமையாக்ச் சிதைந்து விட்டன.

முஸ்லிம் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து ஒரு வகை 'அஷ்ரஃப் எதிர்ப்பு' அரசியலையே சேகு இஸ்ஸதீனும் அவரது முஸ்லிம் கட்சியும் மேற்கொண்டு வருகின்றனர், இந்நிலைமையில் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு மாற்று அரசியல் சக்தியாக வளரும் பலமும் பக்குவமும் இவர்களுக்கு அறவே இல்லையென்பதையே இந்த ஐ.தே.கவுடனான சங்கமும் நமக்கு உணர்த்துகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பொ.ஐ.மு.வுடன் இணைந்ததிலிருந்தே சேகு இஸ்ஸதீன் ஐ.தே.கவுடன் தொடர்புகளை அதிகரித்து வந்தமை பரவலாக அறியப்பட்ட ஒன்றுதான். ஐ.தே.க தேர்தல் பிரச்சார மேடைகளில் அவர் பேசினார் தான். ஆயினும் ஐ.தே.க. பத்திரிகையையே நடாத்துமளவுக்கு அது வலுவடைந்திருப்பது அரசியல் களங்களில் எப்படியான அந்தர் பல்டிகளும் நிகழ முடியும் என்பதையே நமக்கு உணர்த்துகிறது.

1997மார்ச் 'முஸ்லிம் கட்சி' ஏடிட்டோரியலில் சேகு இஸ்ஸதீன் பின்வருமாறு எழுதியிருந்தார்.

''எமது விடுதலையின் கணிசமான ஒரு பகுதியை எமது பேனா மையினால் வெல்ல முடியும் என்பது எமது நம்பிக்கை. அதுதான் இந்த மாத ஏடு. ஆனால் நமது இலட்சியம் ஒரு ஏட்டுக்குள் மட்டும் அடங்கிவிட்ட ஒரு மந்திரமல்ல. அதற்கு வேறு கோலங்களும் குணங்களும் உண்டு. வேண்டும் போது அவை வெளிவரும்.

ஆம். இப்போது அந்த விடுதலையும் இலட்சியமும் 'நம்நாடு' வடிவில் வெளிவந்துள்ளது. வேண்டும்போது அவை எந்தக் கோலத்திலும் குணத்திலும் வெளிவரும். கைகட்டி வாய் பொத்தி மௌனிகளாக பார்த்திருப்பதே நமது பணி போலும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மூன்றும் மூன்றும் முடிவும்!



''இது நிச்சயமாக ஒரு கோழைத் தனமான செயல்தான்'' என்று ஆத்தி ரத்துடன் கூறினார் பாதுகாப்புச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா.

'ஜயசிக்குறு' நடவடிக்கை காரணமாக பலவீனமடைந்துள்ள புலிகளால், யுத்தமுனையிலிருந்து இராணுவத்தின் கவனத்தை திசைதிருப்ப செய்யப் பட்ட ஒரு நடவடிக்கை இது... கோழைத்தனத்தின் கடைசிப்புகலிடம் இது...' என்கிறது பாதுகாப்பு வட்டாரம்.

கொழும்பு உலக வர்த்தக நிலைய குண்டு வெடிப்புக் குறித்து வெளிவந்த பல்வேறு எதிர்ப்புக்களில் சில இவை.

இத்தகைய குண்டு வெடிப்புத் தாக்கு தல்கள் மூலம் புலிகள் நாட்டின் பொருளாதாரத்தை முடக்கி விட நினைக்கிறார்கள். இதன் மூலம் நாடு யுத்தத்தை நடாத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விடும் என்பது புலிகளது கணிப்பு... சமாதானத்தை விரும்பாத புலிகள், சமாதானத்திற்காக நடக்கும் இன்றைய முயற்சிகளையும், யுத்தத் தையும் திசைதிருப்பி விட முயல் கிறார்கள்... ஆனால் அவர்களின் இந்த முயற்சி வெற்றி பெறப்போவ தில்லை. அரசாங்கமும் படைகளும் இந்த விடயத்தில் மிகவும் உறுதியாக உள்ளன'

- இதுதான் அரசாங்க தரப்பினதும் இராணுவ மேல்மட்டங்களினதும், செய்திப்பத்திரிகைகளினதும் அபிப் பிராயங்களின் சுருங்கிய வடிவம்.

அரசாங்கத்தரப்பு வீராப்புப் பேசிய போதும், ஜனாதிபதி அவர்கள் செய்தி யாளர் மாநாட்டில் வைத்து தெரிவித்த ஒரு கருத்து, அரசாங்கத்தின் பலவீன நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

'புலிகள் சமாதானத்தில் நம்பிக்கை தெரிவித்து வருவார்களாயின், நாம் யுத்தத்தை நிறுத்தி விட்டுப் பேசத் தயாராக இருக்கிறோம்' என்று அறிவித்திருக்கிறார் அவர்.

பேச்சுவார்த்தைக்கான மறைமுகமான ஒரு அழைப்பு இது.

'ஆயுதங்களைக் கீழே போட்டால் தான் பேச்சு' என்ற மாதிரியான பழைய எகத்தாளமான அறிவிப்பாக இது இல்லை.

உண்மையில் இந்தத் தாக்குதலின் சேதம் மத்தியவங்கித் தாக்குதலின் போது ஏற்பட்டதை விட அதிகமானது என்று கூறப்படுகிறது. அரசாங்கம் இந்தத் தகவலை வெளியிட மறுத்த போதும், இந்த நிலையத்தைத் திறந்து வைத்த ஒரு வாரத்துக்குள்ளேயே நடாத்தப்பட்ட இவ்வாறான ஒரு தாக்குதல் அரசாங்கத்தை நிலை குலைய வைத்துத் தான் இருக்கிறது.

கடந்த ஒரு சில வாரங்களாக செய்தித் தொடர்பு சாதனங்கள் அனைத்திலும், அரசாங்கம் தாம் யுத்தகளத்தில் வெற்றிபெற்றுவருவதாகக் கூறிவரு கின்றபோதும் உண்மைகள் அதற்கு நேர்மாறாகவே இருந்து வருகின்றன. ஜயசிக்குறு நடவடிக்கை நாளுக்கு நாள் புதை சேற்றில் கால் வைத்த யானையைப் போல புதைந்து கொண்டிருக்கிறது. ஆயுதங்களும் ஆட்பலமும் பறிப்போய்க்கொண்டி ருக்கின்றன. வடக்கிலிருந்து கிழக்கின் தென்கெல்லைவரை பரவலாக சிறிதும் பெரிதுமாக பல தாக்குதல்களை புலிகள் நடாத்திக் கொண்டு வருகி றார்கள். கிழக்கிலே பல முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன. பொலிஸ் நிலையங்கள் இழக்கப்படுகின்றன. நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் ஒருவர் புலிகளின் வானொலியை 'இடை மறித்து' பாதுகாப்பு வட்டாரம் சொல்லும் செய்திகளை நம்ப முடியாதவராக இருக்கிறார். நாள் தோறும் சாகும் புலிகளதும், காயப் படும் புலிகளதும் எண்ணிக்கைப் புற்றிய அரசாங்கத் தகவலை நம்பினால் புலிகள் என்ற இயக்கமே இல்லளவுக்கு இல்லாமல் போயிருக்க வேண்டும். ஆனால் மாறாக கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் பலம் வளர்ந்து வருவதாகவே தெரிகிறது. இந்த உண்மை வெளிப்படையாக தெரிவிக் கப்படா விட்டாலும் உள்ளூர அரசாங்க உயர் மட்டத்தினரை பயமு றுத்திக் கொண்டு தான் இருக்கிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு.

புலிகளைப் பொறுத்தவரை அவர்க ளது யுத்த நடைமுறைகள் மூன்று வடிவங்களில் நடப்பதாகத் தெரிகிறது. ஒன்று இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நிலைகளைத்தாக்கு வது. கொலன்னாவை எண்ணைக் குதத் தாக்குதல் முதல் உலக வர்த்தக நிலையத் தாக்குதல் வரை அது தொடர்ந்து நடந்து வருகிறது.

இரண்டாவது யுத்தமுனைகளிலும் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலும் தற்காப்பு நிலையெடுத்து நின்று கொண்டு திடீர் கெரில்லாத் தாக்குதல் முறைகளினூடாக எதிரிக்கு முடிந்த ளவு சேதத்தை விளைவிப்பதும், முடிந் தளவு போர்த் தளபாடங்களை சேகரிப் பதும் ஆகும். இந்த ஜயசிக்குறு தொடங்கியதன் பின் புலிகளிடம் யுத்த முனையில் வைத்தே கிட்டத்தட்ட 20 கோடிக்கு மேற்பட்ட தளபாடங்களை யும் படையினர் பறிகொடுத்திருக் கிறார்கள்.

மூன்றாவது, முடிந்தளவுக்கு முன் னேறித் தாக்கி, படையினர் முகாம் களை அகற்றுவது அல்லது அகற்ற வைப்பது. ஏற்கெனவே கிழக்கு மாகாணத்தில் சில காவல் நிலையங்க ளும் இராணுவ முகாம்களும் அகற்றப் பட்டு விட்டன.

இந்த மூன்று நடவடிக்கைகட்குமான ஆட்பலம், நிதிப்பலம் என்பவற்றை தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வைத்திய வசதி இல்லை, பிரபாகரன் ஒடித்தப்ப முயல்கிறார், புலிகளுக்கு ஆட்கள் சேர்வதில்லை போன்ற எடுகோள்களுடன் (இவற் றில் பலவற்றுக்கு எந்த ஆதாரமும் இல்லை)

யுத்தத்தை நடாத்தும் அரசாங்கமும் மூன்று வழிகளில் தனது தாக்குதலை நடாத்தி வருகிறது.

ஒன்று, சர்வதேச ரீதியாகப் புலிகளை அம்பலப்படுத்துவது, சர்வதேச அரசு கள் மூலம் அவர்களை கட்டுப்படுத்தி அவர்களுக்கான நிதி மூலங்களை இல்லாதொழிப்பது. இதன் மூலம் புலிகளை தொடர்ந்து யுத்தம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளுவது. புலிகள் மீதான அமெரிக்கத் தடையும் இவ்வாறான முயற்சிகளில் ஒன்றே!

இரண்டு,தமது முழு சக்திகளையும் குவித்து அழிவுத்தனமான பாரிய தாக்குதல் ஒன்றின் மூலமாக அவர் களை முன்னேறித்தாக்குவது. யுத்த நெருக்கடிகளை அதாவது உணவுத் தட்டுப்பாடு, அகதிகள் உருவாக்கம், புலி உறுப்பினர்களும், மக்களும் காயப்படுதல் என்பவற்றினை ஏற்ப டுத்துவதனூடாக புலிகளை மக்களின் எரிச்சலுக்குரியவர்களாக மாற்றுதல்.

மூன்று, அரசியல் தீர்வு சமாதான முயற்சி போன்ற அழகான விடயங்க ளைப் பற்றிப் பேசுவதன் மூலமாக அவர்களை அரசியல் நெருக்கடிக்குள் ளாக்குதல். புலிகளை அரசியல் ரீதியாக மக்களிடமிருந்து அந்நியப் படுத்துதல்.

இந்த மூன்று வழிகளிலும் அரசாங்கம் மிகவும் தீவிரமாக தனது சக்திகளை பயன்படுத்திய போதும், அதன் எடு கோள்கள் ஆதாரம் அற்றவை என்ப தால் குறித்த பயனை அது பெற முடியாமல் போய்விடுகிறது. புலிகள் மீதான சர்வதேச அழுத்தம் பெரிய வெற்றியைத் தரவில்லை. அமெரிக்கா வின் புலிகள் மீதான தடை அவர் களுக்கு உலக மக்களின் நெருக்க டியை விட அவர்களின் அனுதாபத் தையே அதிகளவில் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், அமெரிக்கா இதுவரை தடை செய் துள்ள 30க்கும் மேலான இயக்கங்க ளில் பெரும்பாலானவை அந்தந்த நாடுகளில் மக்களது ஆதரவு பெற்ற தீவிரமான விடுதலை இயக்கங்கள். தவிரவும், அமெரிக்க தானே ஒரு சர்வதேசப் பயங்கரவாதியாக இருந்து கொண்டும் ஆயுதங்களை உற்பத்தி செய்து கொண்டும் இந்தத் தடையை விதிக்க எந்தத் தார்மீக உரிமையும் அற்றதென்பது பலருக்குத் தெரிந்த உண்மை. அமெரிக்காவுக்கு பயங்கர வாதத்தை அடக்குவதை விட தனது அரசியலுக்கான லாபமே முக்கியமா னது என்பதற்கு அதன் இஸ்ரேலுட னான உறவு மட்டுமே போதுமான உதாரணமாகும். அமெரிக்காவின் தடையை குறைந்த பட்சம், பிற ஐரோப்பிய நாடுகள் கூட பின்பற்ற வில்லையென்பது இலங்கை அரசுக்கு 'இதெல்லாம் பெரிய லாபம் தரப் போகும் விடயங்கள் அல்ல' என்ற செய்தியையே வழங்கியுள்ளன.

தனது முழு சக்தியையும் ஓரிடத்தில் குவித்து புலிகளை ஒடுக்கும் அரசாங் கத்தின் யுத்தத்திட்டம் கூட பெரிய வெற்றியைத் தரவில்லை. குடாநாட்டு வெற்றி, அங்கிருந்து புலிகள் பின் வாங்கியதையும், சேர்த்து நோக்கப்பட வேண்டிய ஒரு வெற்றியாகும். குடா நாட்டில் புலிகளுடனான ஒரு பாரிய யுத்தம் நடக்கவே இல்லை. அங்கு ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் புலிகள் மீது மக்களுக்கு எதிர் பார்த்தளவு வெறுப்பை கொடுத்ததாகக் கொள்ள முடியாது. உண்மையில் மக்களுக்கு ஏதாவது வெறுப்பு புலிகள் மீது ஏற்பட்டிருக்கக் கூடுமென்றால், அது அவர்களை வெளியேறுமாறு புலிகள் நிர்ப்பந்தித்ததால் ஏற்பட்ட ஒன்றாக இருக்க முடியுமே அன்றி, பாரிய யுத்தத்தினை நடத்தியதால் ஏற்பட்ட தாகக் கொள்ள முடியாது என்பதை அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின் றன. புலிகள் தாம் அங்கிருந்து பின் வாங்கியதற்கு காரணமே ஒரு பாரிய அழிவை தவிர்க்கத் தான் என்றும் தெரிவித்திருந்தார்கள்.

மூன்றாவதான தீர்வுப்பொதி, சமாதான முயற்சி என்பனவும் இன்று வெறும் ஏட்டுச் சுரைக்காய் விவகாரங் களாகி விட்டன. அவை எப்பவாவது நடைமுறைக்கு வருமா என்ற சந்தேகமே பரவலாக எல்லோரிடமும் நிலவுகிறது. மாறாக அவை அரசாங் கத்திற்கு (இனவாதிகளால்) புதிய அரசியல் நெருக்கடிகளையும் ஏற்ப டுத்தி விட்டுள்ளன.

ஆக, மொத்தத்தில் அரசின் திட்டங் கள் புலிகளிடம் பெரிதாக வெற்றி பெறவில்லையென்றே சொல்ல வேண்டும்.

இது ஜனாதிபதிக்கு ஓரளவு புரிந்தி ருக்கிறது. தனது 'மதி'மந்திரிகளதும், சரத்முனசிங்க போன்ற முழுப்பூசனிக் காயை சோற்றுக்குள் புதைக்கும் இராணுவப் பேச்சாளர்களையும் நம்பினால், தனது நிலை அம்போ வாகி விடும் என்பது அவருக்கு ஓரளவு தெரிந்தும் இருக்கிறது. இதனால் தான் அவர் பேச்சுவார்த்தை பற்றி எந்த நிபந்தனைகளையும் விதிக்காமல் பூடகமாக அறிவித்தி ருக்கிறார்.

உண்மையில் இவ்வாறான புரிதல் ஒரு நல்ல சகுனம் தான். ஜனாதிபதி இந்த விடயத்தை தீவிரமாக யோசித்து யுத்த நிறுத்தத்திற்கு இறங்குவது பற்றி பேசுவது பயனுள்ளதாக இருக்கும்.

முன்பு போல இழுத்தடிப்பு, சுத்துமாத்து, சம அங்கீகாரம் வழங் காமை போன்ற நிலைமைகள் தோன்றாமல் பேசுவதற்கு உரிய நிலைமைகளை அவர் தோற்றுவிக்க வேண்டும்.

அப்போதுதான் பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமையும். இன் னொரு பாரிய யுத்தம், உயிரிழப்பு, சொத்தழிப்பு என்று நிலைமை மோசம டையாமல் சமாதான முயற்சியில் வெற்றி பெற முடியும்.

செய்வாரா?

அல்லது, இன்னும் இன்னும் தீராத அழிவுகள நடக்கக்காரணமாக இருப்பாரா?

அவர்தான் சொல்ல வேண்டும்!

நேசமுப்பான்:

www.tamilarangam.net



# முஸ்லிம் ஊர்காவல் படை: தவிர்க்க முடியாத தோற்றமும், பாதகமான விளைவுகளும்!

முஸ்லிம் ஊர்காவற்படை சம்பந்தமாக சரிநிகர் 123, 124 இதழ்களில் பிரசுரமாகியிருந்த நெற்றிக்கண்ணனின் கட்டுரை தொடர்பாக மேலும் சில விளக்கங்களைத் தரும் பொருட்டே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

முஸ்லிம் ஊர்காவற் படைதொடர்பான வாதப்பிரதிவாதங்கள் பத்திரிகைகளில், அதிலும் சரிநிகர் பத்திரிகையில் தொடர்ந்து பிரசுரமாகிக் கொண்டு வருவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. முஸ்லிம் ஊர்காவற் படையினரை விடுதலைப் புலிகளின் தேடியளிக்கும் நடவடிக்கையினால், தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள அச்ச நிலையும் நம்பிக்கையற்ற நிலையுமே ஊர்காவற்படை தொடர்பான விமர்சனங்கள் தேசிய ரீதியில் மேலோங்கியிருப்பதற்கான அடிப்படைக் காரணமாகும்.

யுத்த நோய் பீடித்துள்ள இந்த சின்னஞ்சிறிய தீவில் சகல சமூகத்திலுமுள்ள தீய சக்திகளினால் வன்முறைகளும், காட்டுமிராண்டித்தனமும் தலைவிரித்தாடுவதை வாய் திறந்து சொல்ல முடியாமல் இருக்கின்றது. நாட்டின் நாலாதிசைகளிலும் புதைகுழிகள் தோண்டப்பட்டு வருவதிலிருந்து எமது நாடு எந்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த துர்ப்பாக்கிய நிகழ்வு எதனால் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? என்பது பற்றி தொடர்பூடகங்கள் வாயிலாக நிறையவே அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்நிலைமையில் தேசிய இனப் பிரச்சினையில் முஸ்லிம் ஊர்காவற் படையினர் என்ன பங்களிப்பை செய்தனர் என்பதை விளங்கிக் கொள்ளும் பொருட்டு கடந்த கால நிகழ்வுகளை மீட்டிப்பார்ப்பது பொருத்தமென நினைக்கின்றேன். ஊர்காவற்படையின் தோற்றம் 1983ம் ஆண்டாக இருந்தபோதும், அதன் செயற்பாடு ஒரு ஸ்திரமான நிலையில் இருக்க வில்லை. தொழிலில்லாமல் அன்றாட வாழ்க்கையைக்கூட கொண்டு செல்லமுடியாத ஏழைக் குடும்பங்களிலிருந்து தமது வறுமையைப்போக்கிக்கொள்ளவே குறைந்தளவிலான முஸ்லிம் இளைஞர்கள் இப்படையில் இணைந்து கொண்டனர். அக்காலகட்டத்தில் அரசுக்கெதிரான ஆயுதப்போராட்டம் முனைப்புப்பெற்றிருந்த போதும், தமிழ் இயக்கங்களின் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் அவ்வளவு தூரம் இடம்பெறவில்லையென்றே சொல்லலாம். இக்காலகட்டத்தில் முஸ்லிம் ஊர்காவற்படை என்று ஒரு படை இருக்கிறது என்பதே கவனத்தில் கொள்ளப்படாத விடயமாகவே இருக்கின்றது.

1984ம் ஆண்டளவில் இலங்கை இராணும் தமிழ் இயக்கங்களை கொடூரமான முறையில் அடக்க முற்பட்டது. அக்காலகட்டத்தில் முஸ்லிம் இளைஞர்களும், தமிழ் இயக்கங்களுடன் இணைந்து ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகளால் ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களும் முஸ்லிம் இளைஞர்களும் தலைமறைவாகத் தொடங்கியிருந்தனர். இலங்கை அரசுக்கெதிரான தமிழ் இயக்கங்களின் போராட்டம் நியாயமானது என்பதை அங்கீகரித்திருந்த முஸ்லிம்கள், இயக்கங்களுக்கு பல வழிகளிலும் உதவி வந்தனர். நெருக்கடியான நிலையிலும் கூட தமிழ் இளைஞர்களை வீட்டின் முகடுகளிலும், நெல்லுப்பட்டறைகளிலும் ஒழித்து வைத்துப் பாதுகாத்தனர். பிற்காலத்தில் இந்த உதவிகளை தமிழ் இளைஞர்கள் மறந்துபோனதுதான், முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் இன்றுவரை நீடித்திருக்கும் இனப்பகைக்கான அத்திவாரம் என்பதை அடித்துச் சொல்லலாம். இக்காலகட்டத்தில் இயக்கங்கள் முஸ்லிம் பிரதேசங்களில் கொள்ளைகளில் ஈடுபடத்தொடங்கின. அக்கரைப்பற்று முஸ்லிம் மகாவித்தியாலயம், சம்மாந்துறை தொழில்நுட்பக்கல்லூரி போன்ற கல்விநிறுவனங்களில் நடாத்தப்பட்ட கொள்ளைகள் பற்றி நெற்றிக்கண்ணனின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அக்காலகட்டத்தில் தமிழ் பிரதேசங்களிலோ, தமிழ் கல்விநிறுவனங்களிலோ அல்லது மக்கள் நலன்பேணும் நிறுவனங்களிலோ எவ்வித கொள்ளை நடவடிக்கையிலும் இயக்கங்கள் ஈடுபடவில்லை என்பதை சுட்டிக்காட்ட மறந்து விட்டார். தமிழ் ஆயுதக்குழுக்களின் சமூகரீதியான இந்த அடக்குமுறை முஸ்லிம்களை மிகவும் புண்படுத்தியது. தொடர்ச்சியாக முஸ்லிம்களின் உடமைகள் பறிக்கப்பட்டன. (தமிழ் மக்களின் உடமைகள் பறிக்கப்படவில்லை) இது பற்றி இயக்கங்களிடம் வினவினால் அது நாங்களல்ல, வேறு இயக்கம் என்று கூறி மறுத்துவிடுவார்கள். இயக்கங்களிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்களிடம் இது பற்றிக்கேட்டபோது அவர்கள் தண்டனைக்குட்படுத்தப் பட்டார்கள். அல்லது கொலை செய்யப்பட்டார்கள். இயக்கங்களின் இந்தப்போக்கின் காரணமாக ஆயுதமேந்திய முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் இயக்கங்களிலிருந்து படிப்படியாக விலக ஆரம்பித்தனர்.

1984 ஏப்ரல் மாதத்தில் காரைதீவு - மாளிகைக்காடு ஊர்களுக்கிடையே இன வன்முறைகள் ஏற்பட்டன. இலங்கை இராணுவத்தின் உதவியுடன் முஸ்லிம்களால் காரைதீவு கிராமம் தாக்கப்பட்டது. அவ்வேளை காரைதீவு மக்களுக்கு சம்மாந்துறை மக்கள் உதவி வழங்கினர். ஒரு சில முஸ்லிம்கள் மாவடிப்பள்ளி பாலத்தடியில் வைத்து ஒரு தமிழரை பெற்றோல் ஊற்றி கொளுத்த முற்பட்டனர். அவ்வேளை சம்மாந்துறை முஸ்லிம்கள் அந்த ஈனச்செயலை தடுத்து நிறுத்தினர். காரை தீவு மக்களின் நூற்றுக்கணக்கான ஆடுமாடுகளை சக கிராமத்து முஸ்லிம்கள் சம்மாந்துறையூடாக சாய்த்துக்கொண்டு சென்றபோது மர்ஹூம் முஸ்டாக் அலி (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.அப்துல் மஜீத் அவர்களின் சகோதரர்) வந்தவர்களை விரட்டிவிட்டு மாடுகளைச் சாய்த்துக் கொண்டு வீரமுனைக்கோயிலில் ஒப்படைத்தார். இதனால் சக முஸ்லிம் கிராமத்தின் எதிர்ப்பையும் சம்பாதிக்க வேண்டியிருந்தது. இப்படியெல்லாம் உதவிய மக்களுக்கு செய்த கைமாறுதான் மிகக் கேவலமாக அமைந்திருந்தது. மர்ஹூம் முஸ்டாக் அலி அவர்கள் எந்த தமிழ் மக்களுக்கா கப்பாடு பட்டாரோ அதே தமிழ் மக்களிலிருந்து தோற்றம் பெற்ற ஒரு இயக்கத்தினரால் 1989இல் அவரது இளம் மனைவியும் பிஞ்சுக் குழந்தைகளும் கதறக்கதற சுட்டுக்கொல்லப் பட்டனர்.

இந்தியப்படை இலங்கைக்கு வந்த போது முஸ்லிம்களின் கண்ணீரும் இரத்தமும் ஆறாய் ஓடியது. புளொட் இயக்கத்தின் சார்பில் டக்ளஸ் என்பவரும் அவரது குழுவும் மல்வத்தையில் முகாமிட்டுக் கொண்டு ஒவ்வொரு ட்ரக்டர் வண்டிக்கும் தலா 5 நெல் மூடைகள் வீதம் பலாத்காரமாக பறித்து வந்தனர். மேலும் உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பனவும் பறிக்கப்பட்டன. இப்படியான நிகழ்வுகள் கிழக்கு மாகாணத்தின் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களிலும் கச்சிதமாய் நடந்தேறியுள்ளன. முஸ்லிம்களின் பெருநாள் தினத்தில் கூட ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசங்களில் வலியுறுத்தியவர்கள் ஈழ விடுதலைப் போராளிகள் என்று கூறிக்கொள்ளும் இன்னொரு இனத்தின் உணர்வுகளை மதிக்கத்தெரியாத இந்த இயக்கக்காரர்கள்தான்.

1988ம் ஆண்டு காலப்பகுதியில் நஜிமுதீன், அமீரலி, ஜலால் போன்ற சம்மாந்துறை இளைஞர்கள் படுகொலைசெய்யப்பட்டார்கள். இவர்கள் செய்த குற்றமென்ன? ஒரு காலத்தில் தமிழ் இயக்கங்களுடன் இணைந்து போராடிய இவர்கள் தமது இனத்துக்கு எதிரான வன்முறைகளைச் சகிக்க முடியாமல் அவ்வியக்கங்களில் இருந்து வெளியேறியதே அவர்கள் செய்த குற்றமாகும்.

இந்தியப்படை நிலைகொண்டிருந்த காலத்தில் கிழக்கு முஸ்லிம்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். நாளுக்கு நாள் சிறுகச் சிறுக முஸ்லிம்கள் கொன்று குவிக்கப்பட்டனர். சொத்துக்களைக் கொள்ளையிட்டனர். முஸ்லிம்களின் மத உணர்வுகளை கொச்சைப்படுத்தினர். இவர்களின் ஈவு இரக்கமற்றத் தன்மையை வெளிக்காட்டுவதற்கு இன்னொரு சிறந்த உதாரணம், 1989.05.04ம் திகதி நோன்பு மாதத்தில் கலையார்வம் கொண்ட எம்.எம்.நஜீம், ஏ.எல்.ஜஃபர் ஆகிய மாணவர்கள் சம்மாந்துறைக்கு அண்மையில் வீடியோ நாடக ஒளிப்பதிவு செய்து கொண்டிருக்கும் போது கொடூரமாக கொலை செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம். அதே போல் இன்னும் எத்தனையோ சம்பவங்களை இங்கு கூற முடியும்.

இப்படியான அக்கிரமங்கள் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் போதுதான் 14.05.1989ம் திகதி நெயினா காட்டு வயலில் உழவு வேலைக்குச் சென்றவர்களைக் கொன்றுவிட்டு உழவு இயந்திரத்தை கந்தன்வெளி, மல்கம்பிட்டி, அல்லிமுல்லை வழியாக கார்த்திகேசு, பெரியதம்பி எனும் வன்முறையாளர்கள் காரைதீவுக்கு எடுத்துச் சென்றனர். இறந்தவர்களின் மையித்து (சடலம்) பொலிஸ் மூலம் மறுநாளே கிடைக்கப்பெற்றது. பெண்கள் கதறியழுதனர். எல்லோர் மனங்களிலும் சினப்புகை தீயாய்க் கனையத் தொடங்கியது. ஆத்திரம் கொண்ட சில முஸ்லிம்கள் கந்தன்வெளியில் நின்று கொண்டிருந்த கந்தன்வெளி வட்டவிதானையையும் இன்னொருவரையும் கொலை செய்தார்கள்.

சம்மாந்துறைப் பிரதேசத்தைப் பொறுத்தவரை தமிழ் இயக்கங்களின் அட்டூழியங்களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் எதிராக செய்யப்பட்ட முதலாவது வன்முறை முயற்சி இதுவேயாகும்.

> "முஸ்லிம் ஊர்காவற்படையின் வரலாற்று நிகழ்வுகளை எடுத்து ஆராயும் போது அதன் தோற்றம் தவிர்க்க முடியாதது என்பதையும், அதேவேளை, அதனால் முஸ்லிம் சமூகத்திற்கு பூரண பாதுகாப்பை வழங்கமுடியாது என்பதையும் மறுக்க முடியாதுள்ளது. இனரீதியாக முஸ்லிம் ஊர்காவற்படையால் தமிழ் சமூகத்துக்கு பாதகங்கள் ஏற்பட்டுள்ளதையும் அதேவேளை தமிழ், முஸ்லிம் இன உறவின் விரிசலுக்கு தனியே ஊர்காவற்படை தான் காரணமென்பதை மேலுள்ள ஆய்வுகளிலிருந்து ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்பதையும் கூறித்தான் ஆக வேண்டும்."



ஜெயம்மே. நிஸாம்.

இந்த நிலையில் முஸ்லிம் ஊர்காவற் படை, தமிழ் மக்களுக்கெதிராகவோ, அல்லது தமிழ் இயக்கங்களுக்கெதிராகவோ ஏதும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. முஸ்லிம் ஊர்காவற் படை என்ற அமைப்பு 1983ல் தாபிக்கப்பட்டபோதும் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவில் விரிசலைத் தோற்றுவிக்க கூடிய எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. கிழக்கு முஸ்லிம்கள் மிகவும் பொறுமையுடனும், நிதானத்துடனும் வாழ்ந்து வந்தார்கள் என்பதில் யாரும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. இருந்த போதும் 1989க்குப் பிற்பட்ட காலத்தில் முஸ்லிம் ஊர்காவற் படையினரின் அத்துமீறல்கள் தமிழ் மக்கள் மீதும் திணிக்கப்பட்டது. வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். இருந்தபோதும் தமிழ் ஆயுதக்குழுக்களின் அத்துமீறல்களுடன் ஒப்பிடும் கால் பங்கு கூட இருக்காது. தொடர்ச்சியான ஆக்கிரமிப்புக்கொள்ளை முஸ்லிம்களைச் சினமூட்டியதன் காரணமாக ஊர்காவற் படையில் சேர்வதில் இளைஞர்கள் ஆர்வம் காட்டினார்கள். எந்த இனம் ஆக்கிரமிப்புக்கு உட்படுகின்றதோ அந்த இனம் எப்போதாவது ஒரு நாள் சீறியெழும் என்பதற்கொப்பவே தமிழ் கிராமங்களும் தாக்குதலுக்கு உட்பட் →

www.tamilarangam.net



டன. இதனால் அப்பாவித் தமிழ மக்களே பாதிக்கப்பட்டனர். முஸ்லிம்கள் மீது நிரந்தரக்கறையை ஏற்படுத்தக்கூடிய கீழ்த்தரமான செயல்கள் நிகழ்ந்தேறுவதற்கு தமிழ் இயக்கங்களின் சினமூட்டல் நடவடிக்கையே காரணமாயிருந்தது. அதற்காக அப்பாவித்தமிழர்கள் பாதிக்கப்பட்டதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. மனிதர்கள் எல்லோரும் மகான்களல்லர். எல்லா சமூகத்திலும் குறைந்த வீதத்தினரே நியாயத்தை உணரக்கூடிய தன்மையுள்ளவர்கள் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

1989.05.17ம் திகதி சம்மாந்துறைக் கிராமம் இயக்கங்களின் கொடூர தாக்குதலுக்கு உட்பட்டதைக் கூறுவது பொருத்தமென நினைக்கிறேன். ஏற்கெனவே சம்மாந்துறைப் பிரதேசத்தில் முஸ்லிம்களில் நிகழ்த்தப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கையைப்பற்றி குறிப்பிட்டேனல்லவா? இது நடந்த மறு தினமே சம்மாந்துறை எரிக்கப்பட்டும், கொள்ளையிடப்பட்டும் இருப்பதிலிருந்து நாம் சற்று அழுத்தமாகச் சிந்திக்க வேண்டும். ஒரு சிறுபான்மையினரின் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு இத்தனை வருடங்கள் வரை முஸ்லிம்களால் எப்படி பொறுமையாக இருந்திருக்க முடிந்தது? என்பதைப்பற்றித்தான்.

மேலும்

அன்றைய தினத்தில் பிரஜைகள் குழு தலைவராக இருந்த ஆர். இராஜேந்திரன் மாஸ்டரின் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஆடம்பர வீடு கூட கொள்ளையடிக்கப்பட்டதும், வீரமுனை கோயில் ஒலிபெருக்கி மூலம் கொள்ளையில் ஈடுபட்ட இயக்கக்காரர்களை வழிநடாத்தியதும் தமிழ் இனத்தின் மீதே முஸ்லிம்களுக்கு அவநம்பிக்கையினைத் தோற்றுவிப்பதற்கு கால்கோளாய் அமைந்தது எனலாம். அன்று மட்டும் சுமார் 250 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டு சேதமாக்கப்பட்டது. இந்தியப்படை வந்ததிலிருந்து வெளியேறும்வரை நாசமாக்கப்பட்ட சொத்து அல்லது கொள்ளையிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சுமார் 1063.5 மில்லியன் ரூபாயாகும். 20.484- 08.08.1991 வரை சம்மாந்துறையில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை 132ஆகும். காயமடைந்தோர் 54 ஆகும். (இவை ஈழத்தின் இன்னுமொரு மூலை புத்தகத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகளாகும்.)

இந்தியப்படை நாட்டை விட்டு வெளியேறியதன் பிற்பாடு வடகிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் குடிகொண்டது. அவர்களும் முஸ்லிம்களைக்கொன்று குவிக்கத்தொடங்கினர். காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல்? ஏறாவூர் படுகொலைகள், சம்மாந்துறை பள்ளிவாசல் தாக்குதல் என்று கிழக்கின் நாலா திசைகளிலும் வன்முறைகள் தலைதூக்கியதோடு வடக்கு முஸ்லிம்களும் உடுத்த உடையுடன் வெறுங்கையோடு துரத்தப்பட்டனர். எனவே முஸ்லிம்கள் விடயத்தில் சகல இயக்கங்களும் தவறிழைத்துள்ளதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அந்த வகையில் முஸ்லிம்களோடு நல்ல உறவைப்பேணிக் கொள்ள கிடைத்துள்ள வாய்ப்பே முஸ்லிம் ஊர்காவற்படையின் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கையாகும். கட்டுரையாளர் (நெற்றிக்கண்ணன்) தனது சொந்த நலனுக்காக, சாதாரண மக்களையே தாக்கும் புலிகளிடமிருந்து ஊர்காவற் படையைத் தாக்கக்கூடாது என கோருவது கேலிக்குரிய விடயமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனை நோக்கும் போது ஊர்காவற் படையை புலிகள் தாக்கத்தான் வேண்டும் என அவர் ஆதங்கப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். சில வருடங்களாக புலிகள் முஸ்லிம்களுக்கு எவ்வித தொந்தரவும் செய்யாமல் இருந்தது இரு சமூகங்களின் இணைப்புக்கும் ஒற்றுமைக்கும் உறுதியான அத்திவாரமாக இருந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் அண்மைக்காலமாக புலிகள் முஸ்லிம் ஊர்காவற் படையைத் தாக்க ஆரம்பித்திருப்பது மீண்டும் இனப்பதட்டத்தை தோற்றுவிப்பதற்கு கால்கோளாய் அமைகின்றது. அதனால் தான் புலிகளும் முஸ்லிம்கள் விடயத்தில் முன்னரைப்போல் அல்லாமல் நிதானமாக நடந்து கொள்ள எத்தனித்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். அந்நிலையில் சற்று ஆழமாகச் சிந்தித்து தமிழ், முஸ்லிம் சமூகங்களின் எதிர்கால நன்மை கருதி தமது கொள்கையை சிலவேளை பரிசீலிக்கவும் கூடும். இது தமிழ் முஸ்லிம் மக்களுக்கு நிம்மதி தரும் விடயமல்லவா? இப்படியான ஒரு எதிர்பார்ப்பை எப்படி கேலிக்கூத்தாகக் கொள்ள முடியும்?

விடுதலைப்புலிகள் முஸ்லிம்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குவார்களேயானால் முஸ்லிம் ஊர்காவற் படையின் அவசியம் இல்லாமல் போய்விடும். இருந்த போதிலும் ஊர்காவல் படையினரால் பூரண பாதுகாப்பை வழங்க முடியும் என்ற கருத்தியலுக்கு நான் உடன்பட்டவனல்ல. ஆனால் புலிகளின் தாக்குதலிலிருந்து முஸ்லிம் பொது மக்களை காத்துக்கொள்ள (தற்போது பொது மக்கள் மீதான தாக்குதல் குறைவென்றே சொல்லலாம், இருந்த போதும் கப்பம் பெறும் நடவடிக்கை தொடர்வதாக அறிய முடிகிறது.) ஓரளவு தாக்கத்தைச் செய்ய முடியும் என்பதை மறுப்பதற்கில்லை.

1989.11.17ம்திகதி (இந்திய இராணுவம் அம்பாறை மாவட்டத்திலிருந்து விலகிக்கொண்ட காலகட்டம்) அம்பாறை மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள் ஒரேநேரத்தில் தமிழ் தேசிய இராணுவத்தால் தாக்கப்பட்டது. அவ்வேளை காரைதீவு உப பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு அதிகாரி உட்பட 62 பொலிசாரில் 44 முஸ்லிம் பொலிசார் தமிழ் தேசிய இராணுவத்தினால் கொல்லப்பட்டனர். மீதியானோர் தமிழர்கள் என்ற காரணத்திற்காக விடுதலை செய்யப்பட்டனர். இதிலிருந்து இன ஒடுக்கல் கொள்கையை இயக்கங்கள் எவ்வளவு தூரம் கையாண்டுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்நிலையில் முஸ்லிம் ஊர்காவற் படையை மட்டும் இனம் பிரித்து எப்படி தாக்காமல் இருக்க முடியுமென கட்டுரையாளர் வினவுவது வேடிக்கைக்குரிய விடயமாகும்.

முஸ்லிம் ஊர்காவற் படையின் வரலாற்று நிகழ்வுகளை எடுத்து ஆராயும் போது அதன் தோற்றம் தவிர்க்க முடியாதது என்பதையும் அதனால் முஸ்லிம் சமூகத்திற்கு பூரண பாதுகாப்பை வழங்க முடியாது என்பதையும் மறுக்க முடியாதுள்ளது. இனரீதியாக முஸ்லிம் ஊர்காவற் படையால் தமிழ் சமூகத்துக்கு பாதகங்கள் ஏற்பட்டுள்ளதையும் அதே வேளை தமிழ், முஸ்லிம் இன உறவின் விரிசலுக்கு தனியே ஊர்காவற் படைதான் காரணமென்பதை மேலுள்ள ஆய்வுகளிலிருந்து ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்பதையும் கூறித்தான் ஆக வேண்டும்.

எனவே, இந்த தேசத்தில் சகல இன மக்களும் சமமான அடிப்படை உரிமையையுடையவர்கள் என்பதை ஏற்று நடந்தால் வருங்காலமாவது இனப்பூசலற்ற தேசமாக மாற்றமடையாதா என்பதே நம் எல்லோரினதும் ஆதங்கமாகும். ●

## வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்-04

# கிழக்கில் சுழன்ற சூறாவளிகள் !

--அலியார் மவ்சூக்

கிழக்கு மாகாணத்துக்கு யாழ் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் கட்டம் கட்டமாகவே வந்தனர். முதலில் த.வி.கூ.யின் போர்வையில் வந்த வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, ஈழவேந்தன் போன்றவர்கள் மேடையில் நின்று கர்ஜிப்பதுடன் தங்கள் அரசியலை நிறுத்திக் கொண்டனர். ஆனால் 1978இல் கிழக்கில் அடித்த மாபெரும் சூறாவளியை அடுத்தே யாழ் அதிரடித் தம்பிமார் இங்கு வரத் தொடங்கினர். சூறாவளியின் அனர்த்தம் பார்க்க வந்த தம்பிமார் கிழக்கு மாகாண இளைஞர்களின் நாடியையும் பிடித்துப் பார்த்து விட்டுச் சென்றனர்.

இக்காலகட்டத்தில் தான் சூறாவளியுடன் சூறாவளியாக ''சாம் தயாளன்'' என்ற சோஷலிசவாதி இங்கு வந்தார். நிறையக் கதைகள் சொன்னார். நிறைய அரசியல் வகுப்புக்கள் செய்தார். (அண்ணர் தற்போது அவுஸ்திரேலியா முழுக்'குடி'மகன்) மற்றைய கிழக்கு மாகாண இளைஞர்கள் அவரது கருத்தை ஏற்றுக்கொண்டார்களோ என்னவோ ஆனால் நான் முழுக்க முழுக்க இவரது கருத்துக்களை ஏற்றுக் கொண்டேன். இவரைத் தொடர்ந்து தேவா (டக்ளஸ் தேவானந்தா), பாலா (கபூர்), செழியன் என பல புதுமுகங்கள் இங்கு வந்தன. பாட்டாளி வர்க்க புரட்சி, சோஷலிச ஜனநாயக பாணியில் அமைந்த ஈழம் என்ற விடயங்களில் தான் வகுப்புகள் நடந்தன. விவசாயிகள், மாணவர்கள், கல்விமான்கள் என பலரைச் சந்தித்தோம், விவாதித்தோம்.

இக் காலகட்டத்தில் நான் குறைந்தது மாதத்துக்கு ஒரு முறையாவது யாழ் போய்வந்தேன்.(தங்குமிடம் 750, பலாலி றோட், திருநெல்வேலி.) அங்கு தோழர் பத்மநாபா, ரமேஸ், (தற்போதைய யாழ். பா.உறுப்பினர் நடராசா அற்புதராஜா) சுகு(திருநாவுக்கரசு சிறீதரன்), றொபேட்(சுபோதரன்), ஈழமணி(மு.டேவிட்சன்) போன்றோரைச் சந்தித்தேன். பத்மநாபாவுடன் சேர்ந்து புரட்சிகர இஸ்லாமிய மக்கள் விடுதலை முன்னணி (ஆர்.ஐ.பி.எல்.ஓ) என்ற ஒரு அமைப்பை கட்டுமுகமாக யாழ் ஒஸ்மானிய கல்லூரி ஆசிரிய, மௌலவிகள் சிலரைச் சந்தித்து ஆலோசனை செய்தோம். யாழ்ப் பாணத்தில் தோழர் பத்மநாபா தவிர வேறு எந்த இளைஞர்களும் ''சிங்கிள் பிளேன்டீ'' கூட வாங்கித் தந்ததாக சரித்திரம் இல்லை. பசிவரும் போதெல்லாம் யாழ். கன்னாதிட்டியில் நகை வேலைகள் செய்து கொண்டிருந்த மட்டக்களப்பு இளைஞர்களின் கடைகளில் வந்து சாப்பிடுவேன். விதிவிலக்காக செந்தில்(குன்சி குணசேகரம்) யாழ் தின்னவேலிச் சந்தியில் இரண்டு நாள் தோசை, வடை வாங்கித் தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இவ்வளவு இறுக்கமாக நடந்து கொண்ட இவர்கள் கிழக்கில் நடந்து கொண்ட விதங்களைக் கேட்டால் தலைசுற்றும்.

தோழர் செழியன் இங்கு 1980 ஏப்ரலில் வந்தார். சோஷலிசம் பேசினார். சிறிலங்கா அரசின் பாடசாலைகளில் படிப்பதே பாவம் என்றார். அரச உத்தியோகம் பார்ப்பது ஈழத்தேசத் துரோகம் என்றார். லெனின், மார்க்ஸ், ஏங்கல்ஸ் துதிபாடினார். மாணவர்கள் படிப்பை தூக்கி வீசிவிட்டு ஈழப் புரட்சிக்கு வெளிக்கிட்டனர். வங்கியில் வேலை செய்துகொண்டிருந்த எனது நண்பனொருவன் வேலையை உதறிவிட்டு சோஷலிசம் பேசினான். மேலும் பலர் அன்றாட தொழில்களையும் வீசிவிட்டு களத்தில் இறங்கினர்.

ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினர் மட்டும் தான் கிழக்கு மாகாணத் தமிழரைத் தமது சவாரிக்கு தேர்நதெடுத்தார்கள் என்றில்லை. ஈரோஸ், புளொட் போன்ற அமைப்புகளும் சூறாவளியை அடுத்து கிழக்கில் கவனம் செலுத்தின. ஈரோஸ் அமைப்பு திருகோணமலையிலும், புளொட் அமைப்பு மட்டக்களப்பிலும் புது முகங்களை இறக்கி அரசியல் வியாபாரங்களை களை கட்டச் செய்தன. (வைத்தி, கிருபா, மகேஸ்வரி ரீச்சர், பதூர்காக்கா, டி.சிவராம், கபூர் மாஸ்டர், நாகபடை, பரமதேவா, மட்டக்களப்பு கச்சேரி துப்பாக்கிக் கொள்ளை, செங்கலடியில் நடந்த செஞ்சோற்றுக் கடன் இவையெல்லாம் பின்னர் விபரமாக தருவேன்.)

அரசியல் வியாபாரம் களைகட்டக் கட்ட போட்டியும், பொறாமையும் கூடியது. கிழக்கில் ஒன்றாக இருந்த தமிழரும் முஸ்லிம்களும் யாழ் தம்பிகளின் வரவால் மூன்று, நாலாகப் பிரிந்தார்கள். இவர்களால் பிரிக்க வைக்கப்பட்டார்கள்.

நாங்கள் அரசியல் செய்கின்றோமோ இல்லையோ, ஆனால் வாராவாரம் G.U.E.S அல்லது EPLF என்ற பெயரில் வீதிகளில் உள்ள சுவர்களில் போஸ்டர்கள் ஒட்டத்தயங்க மாட்டோம். இவ்வாறு தொடர்ந்து போஸ்டர் ஒட்டுவதால் ''பசைவாளிகள்' என்ற ஒரு செல்லப் பெயரும் எங்களுக்கு உண்டு.

நாங்கள் பசைவாளிகள் அல்ல, நாங்களும் குட்டிக்கரணம் அடிப்பவர்களே என்பதை போல் ஒரு சம்பவம் எங்கள் காலடியில் நடந்தது.

ஒருநாள் பிற்பகல் 2மணிபோல் திருக்கோயில் மக்கள் வங்கி கொள்ளையடிக்கப் பட்டுவிட்டதாகவும், கொள்ளையிட வந்தவர்களில் ஒருவர் தப்பியோடிவிட்டதாகவும், இருவர் திருக்கோயிலில் இருந்து இரண்டு மைல் தொலைவில் பொது மக்களினால் விரட்டிப் பிடிக்கப்பட்டதாகவும் பொது மக்கள் கூறினார்கள். சுமார் நான்கு மணி போல் கருணாநிதி என்ற இளைஞர் ஓடிவந்து கொள்ளையர்கள் அக்கரைப்பற்று பொலிசுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அனைவரும் நம்மைச் சந்திக்கும் இளைஞர்கள் என்றும் சொன்னார். நான் அக்கரைப் பற்று பொலிஸ் நிலையம் சென்று பார்த்தேன். அங்கு பாஸ்கரன் (நற்பிட்டிமுனை), குமார் (பாண்டிருப்பு) இன்னுமொரு லெபனான் பயிற்சியாளர் என மூவர் இருந்தனர். எனக்குத் தலை சுற்றியது. அக்கரைப்பற்றில் மூட்டை தூக்கிப் பிழைப்பவரும், சதா சர்வகாலமும் கஞ்சா அடித்துக் கொண்டு திரிபவரும் நடக்கவே சக்தி அற்றவருமான ''சகாப்தீன்'' என்ற இளைஞரினால் இந்த லெபனான் பயிற்சியாளர் பிடிபட்டதானது ஜீரணிக்கவே முடியாமல் போய் விட்டது.

இன்னுமொரு லெபனான் பயிற்சியாளர் தான் கொண்டு வந்த துப்பாக்கியை தவறுதலாக வெடித்து, தனது காலை உடைத்துக் கொண்டு மட்டக்களப்பு வாகரைக்காட்டில் ஆறுமுகம் என்பவரது வயல் காணியில் தஞ்சமடைந்தார். ''எழுத்தோடும் போதேபைற்'' என்ற தமிழ்ப்பட பாணியில் அமைந்த இவர்களது இந்த நடவடிக்கை முஸ்லிம் இளைஞனான என்னுள் நிறையக்கேள்விகளை எழுப்பியது.

ஏழுகடல் தாண்டி, ஏழு மலை கடந்து, பாழும் குகைக்குள் சென்று; கொடிய விஷப்பாம்புகளை தன் உடைவாளுக்கு இரையாக்கி விட்டு நிமிர்ந்து நிற்கும் விக்கிரமாதித்தர்களாகவே இதுவரை இந்த லெபனான் பயற்சியாளர்களை நினைத்திருந்தேன். இவர்கள் சிறுபிள்ளைத் தனமான எந்தவித திட்டமிடுதலுமின்றி நடந்து கொண்ட விதங்களைப் பார்த்த போது லெபனானில் என்ன ஆயுதப்பயிற்சி அளித்தார்களா? அல்லது ஆசிரமம் நடாத்தினார்களா என எண்ணத் தோன்றியது.

இதுவரை திருகோணமலையில் தங்கள் திருமுகங்களைக் காட்டிக் கொண்டிருந்த ஈரோஸ் அமைப்பினர் நேரடியாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு இறக்குமதியாகினர். ஈ.பி.ஆர்.எல்.எப் (G.U.E.S EPLF) செய்த திட்டமிடப்படாத திருக்கோயில் வங்கிக் கொள்ளையைச் சுட்டிக் காட்டி எங்கள் முகங்களில் கரிபூசத் தொடங்கினர். இதுவரை வீதிகளில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பசைவாளிகளுடன் நடமாடிய நாங்கள்; தெருக்களில் முகத்தில் வெள்ளைச்சீலை போர்த்தாத குறையாக நடமாட வேண்டி ஏற்பட்டது. ஆம், இங்கும் ஈரோஸ், ஈ.பி.ஆர். எல்.எப். உரசல் ஆரம்பமாகத் தொடங்கியது. யார் சுத்தம்? நீ சுத்தமா..!? நான் சுத்தமா..!?

ஈரோஸ் தலைவர் ரட்ணசபாபதி மூக்கு முட்டக் குடிப்பாராமே என்பதில் தொடங்கி ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவுக்கு உறுதி போதாது என்பது வரை விவாதங்கள், கருத்து மோதல்கள் உரசல்கள் தொடங்கியது.

இவ்வாறு ஒவ்வொரு இயக்கமும் செய்த பிழைகளைச் சுட்டிக்காட்டி மற்றைய இயக்கங்கள் தங்களை புனிதர்களாகக் காட்டி ஆதரவு தேடினர். இதுவரை தானும், தன்பாடும் ஐந்து வருடத்துக்கொரு முறை த.வி.கூட்டணியின் தாலாட்டும் என இருந்த கிழக்குத் தமிழர்; யாழ் கட்ட மண்களின் வரவால் இரண்டாயினர், மூன்றாயினர், அப்புறம் நாலாகினர். இறுதியில் உள்வீட்டுக்குள்ளேயே அண்ணன் ஒரு இயக்கம், தம்பி ஒரு இயக்கம், அப்பா த.வி.கூ ஆதரவாளர் என பலப்பலவாயினர்.

இக்கால கட்டங்களில்தான் நாங்களும் (முஸ்லிம்கள்) மூளையைக் கொஞ்சம் கசக்கிக் கொண்டு கண்ணுக்குள் விளக்கெண்ணை போடத் தொடங்கினோம்.

(தொடருவேன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நப்ரா (NAFTA) என்று அழைக்கப்படுகின்ற வட அமெரிக்க தாராள வர்த்தகக் கூட்டமைப்பு (North American Free Trade Arrangement) அமெரிக்கா கனடா ஆகிய வடஅமெரிக்காவின் செல்வந்த நாடுகளின் அரசியல், பொருளாதார வயலத்துள் மெக்ஸிக்கோ, பிரேசில் போன்ற லத்தீனமெரிக்க நாடுகளை முற்றாக இழுத்துக் கொள்வதற்கென உருவாக்கப்பட்டது.

வறிய லத்தீனமெரிக்க நாடுகளை மேலும் சுரண்டுவதற்கும், அந்நாட்டு உழைப்பு வளத்தை மலிவாகக் கறந்தெடுப்பதற்கும் வழி செய்யும் இக்கூட்டமைப்புக்கு எதிராகவும், மெக்ஸிக்கோ ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், கிளர்ந்தெழுந்த அமைப்பு 'சபாற்றிஸ்ராக்கள்' எனப் பொதுவாக அழைக்கப்படும் EZLN. (ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த வறிய கூலி விவசாயிகளின் தலைவரான சபாற்றா (ZAPATA) என்பவரின் நினைவாகவே இப்பெயர் வைக்கப்பட்டது)

மாயாஸ் (Mayas) எனப்படும் பூர்வீக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மெக்ஸிக்கோவில் சிறுபான்மையான பூர்வீக மக்கள் அல்லாதவர்களிடமே ஆட்சி, இராணுவ அதிகாரங்கள் உள்ளன. இச்சிறுபான்மையினர் ஸ்பானிய மற்றும் கொலோனித்துவ ஆட்சியாளர்களின் வழித்தோன்றல்கள் ஆவர். பல நூற்றாண்டுகளாக மாயாஸ் மக்களிடம் இருந்து நிலங்களும், வளங்களும் பறிக்கப்பட்டிருந்தன. குவாத்தாமாலா, எல்சல்வடோர், பெரு, கொலம்பியா போன்ற பிற லத்தீனமெரிக்க நாடுகளிலும் பூர்வீக மக்களைப் பொறுத்தவரை இது தான் நிலைமை. சபாற்றிஸ்ராக்கள் இந்தப் பூர்வீக மக்களிடமிருந்து கிளம்பிய ஒரு விடுதலை இயக்கமாகும்.

இவ்வியத்தின் பெண்கள் பிரதிநிதியான றமோவினதும், பெண்கள் இராணுவ அணிக்குத் தலைவியான அனா மரியாவினதும் நேர்காணலை 'Ya Basta' என்ற ஜேர்மன் மொழியிலான நூலிலிருந்து நிருபா தமிழாக்கியுள்ளார். பெண்கள் சந்திப்பு மலரில் வெளியான இந்நேர்காணலை நன்றியுடன் இங்கே தருகிறோம்.

ஆ-ர்

**சபாற்றிஸ்ரா தேசிய விடுதலை இயக்கத்தில், பெண்களின் பங்களிப்பு எவ்வாறு ஆரம்பமாகியது?**

*றமோனா:*

ஆரம்பத்தில் கிராம மக்களிடையே இப்போராட்டம் பற்றிப் பேசப்பட்ட போது பெண்களின் பங்களிப்புப்பற்றி பேசப்படவேயில்லை. நூற்றாண்டு காலமாக நடந்து கொண்டிருக்கும் இவ் அடக்குமுறை ஓர் வழக்கமாகி விட்டது. ஆயினும் கிராம மக்கள் தங்களைப் படிப்படியாகப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளத் துவங்கிய போது, பெண்கள் தங்கள் பங்களிப்புப்பற்றி புரிந்து கொள்ளத் தொடங்கியதுடன், தாங்களும் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கொண்டனர். இறுதியில் ஆண்களைப் போன்று தாமும் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கினர். ஆரம்பத்தில் பெண்கள் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்வதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை. பின்பு பெண்கள் ஒன்றிணைந்து விடுதலை இயக்கத்தில் தமது பங்களிப்பை எடுத்துக் கொண்டனர். தொடர்ச்சியான அவர்களது போராட்டத்தினால் பெண்களுக்கெனப் புரட்சிகரச் சட்டமொன்றையும் கோரினார்கள்.

*அனா மரியா:*

ஆண்களும், பெண்களும் இணைந்த இப்போராட்டத்தின் முக்கிய கோரிக்கை நாம் வாழும் மண்ணை எமக்குச் சொந்தமாக்குவதேயாகும். எமது கோரிக்கைகளுள் விசேடமான ஒன்று பெண்கள் பற்றியது. ஏனெனில், ஆண்கள் தம் சார்பாகச் சிந்திப்பதாலும், பெண்களின் கருத்துக்களை கவனத்திலெடுத்துக் கொள்ளாததாலும் அவர்களுக்கும் பெண்களுக்குத் தேவையான சில விடயங்கள் புரிவதில்லை. இதனடிப்படையிலேயே எமது கோரிக்கைகள் உருவாகின. அவையான: பெண்களுக்கான விஷேட பாடசாலை - வயதுபோனவர்களாகவிருந்தாலும், பலர் எழுத வாசிக்க விரும்புகின்றனர். பிரசவ விடுதி- இங்கே பிரசவத்தை இலகுவாக்க முடியும். வீட்டில் நடைபெறும் பிரசவத்தின் போது தூசுகள் படிந்த நிலத்தில் குழந்தையைப் பெற்றெடுப்பதுடன், ஆண்கள் வேலைக்குப் பாவிக்கும் மசேட்ட கத்தியால் (காலங்காலமாக செவ்விந்தியர்கள் பாவித்து வரும் கத்தி) தொப்புள்கொடி வெட்டப்படுகிறது. பிரசவத்தின் பின் தாயையும், பிள்ளையையும் கவனித்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச மருத்துவத் தேவைகள் கூட இங்கில்லை. பெண் மருத்துவர்கள் உடன் தேவைப்படுகிறார்கள். அத்தோடு கைவேலைகள், பின்னல் வேலைகளை இலகுவாக்குவதற்கு தொழிற்பட்டறைகளையும், சில இயந்திரங்களையும் கோருகிறோம். நகர்ப்புற முதலாளிகள் நியாயமற்ற முறையில் இவர்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதைத் தடுக்கவும், இவர்கள் தமது உற்பத்திகளைத் தாமே சந்தைப்படுத்துவதற்கும் சந்தைகளை உருவாக்குமாறு கோருகின்றனர். செவ்விந்தியப் பெண்கள் கொடூரமாக நடத்தப்படுவதோடு நீதியின்மை, பாகுபாடு, இனவாதச் செயல்களாலும் பாதிக்கப்படுகின்றனர்.



**"சமத்துவத்தையும் நீதியையம் நிலைநாட்ட போராடுவதைத் தவிர வேறுவழியில்லை!"**

*- சபாற்றிஸ்ரா தேசிய விடுதலை இயக்கத் தலைவிகள்*

மேலும் சில கோரிக்கைகள்; சிறுவர்களுக்கான பாடசாலைகள், ஆரம்பப் பாடசாலைகள், பட்டினியால் வாடும் குழந்தைகளுக்கு உணவு போன்றவையாகும்.

தற்போதைய அரசியல் யாப்பில் பெண்கள் நிலத்திற்குச் சொந்தக்காரராக இருக்க முடியாது. எம்முடைய புதிய சட்டத்தில் அதற்கான சட்டமுண்டு. இவ்வுரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். எமக்கென நல்ல விவசாய நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டும்.

இத்தேசிய அமைப்பிற்குள் பெண்களுக்கான சட்டம் இல்லாமலிருந்ததால், நாம் எதிர்ப்புத் தெரிவித்ததோடு, சில தோழியர்கள் இணைந்து ஓர் மாதிரிச் சட்டத்தை எழுதி, அமைப்புக்குழுக் கூட்டத்தின் போது வாசித்தவேளை ஒருவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதன்பின்னர் இம்மாதிரிச் சட்டம் கிராம மட்டத்திலான குழுக்களிடையே விவாதிக்கப்பட்டு ஆலோசனைகளும், கருத்துக்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டு பெண்களுக்கான சட்டம் உருவாக்கப்பட்டது.

**செவ்விந்தியப் பெண்களின் வாழ்க்கை நிலை பற்றி உங்களால் கூற முடியுமா?**

*அனா மரியா:*

பெண் ஓய்வின்றி நாள் முழுவதும் உழைக்கிறாள். அவள் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து ஆண்களுக்கு காலை உணவு தயாரிப்பதற்காக கைக்குழந்தையை முதுகில் அல்லது நெஞ்சில் சுமந்து சென்று விறகும் சோளமும் சேகரித்து வருகிறாள். பின்னர் பகல் முழுவதும் வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறாள். இப்படியே கிழமை முழுவதையும் கழிக்கிறாள். ஆனால் ஆண்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் கூட தமது பொழுது போக்குகளைக் காட்ஸ் விளையாடுவதிலும், கூடைப்பந்தாட்டம் விளையாடுவதிலும் கழிக்கின்றனர். பெண்ணுக்கு பொழுது போக்குவதற்கு நேரம் கிடையாது.

*றமோனா:*

பெண்களுக்கு பாடசாலைக்குப் போவதற்கோ அல்லது பொழுது போக்கைக் கழிப்பதற்கோ அனுமதி கிடையாது. சிறுவயதிலிருந்தே நாங்கள் எங்கள் தம்பிமாரை காவிக்கொண்டு திரிய வேண்டும். சோளம் அரைப்பதற்கும் ரோற்றீலாஸ் (Tortillas) - சோளத்தில் அரைத்துச் செய்யப்படும் ஒருவகை உணவு-உதவ வேண்டும். வீடு கூட்டிக் கழுவ வேண்டும். தாய் வீட்டில் குழந்தையை விட்டுச் செல்லும் போது, குடும்பத்தின் மூத்த பெண்பிள்ளை அவர்களைப் பார்க்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். அதனாலேயே அவளது பாடசாலை வாழ்வு மறுக்கப்படுகிறது. இதே போன்று தான் எனக்கும் நேர்ந்தது.

பெண்கள் குடும்பத்தினராலோ அல்லது சம்பிரதாய முறைகளுக்கு இணங்கவோ பதின்மூன்று அல்லது பதின்நான்கு வயதிலேயே திருமணஞ் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எமது சமுதாயத்தில் ஆணுக்கு ஒரு பெண்ணைப் பிடித்துப்போய்விட்டால் அந்தப் பெண்ணிடம் சம்மதம் கேட்பதற்குப் பதிலாக, பெண்ணின் தகப்பனாருக்கு மதுபானம் அல்லது உணவு ஏதும் எடுத்துச் சென்று கொடுக்கிறான். தகப்பனார் அதனை ஏற்றுக் கொண்டு விட்டால் பெண்ணின் விருப்பம் கேட்கப்படாமலேயே திருமணம் நிச்சயமாக்கப்படும். பல பெண்கள் அழுதபடியே மாப்பிள்ளையின் வீட்டிற்கோ அல்லது தேவாலயத்திற்கோ செல்கின்றனர்.

கிராமத்தில் திருமணமாகாமல் இருவர் இணைந்து வாழ்வதென்பது முடியாத விடயம். அத்துடன் அது ஒரு வழமைக்கு எதிரான செயல். அப்படி யாராவது நடந்து கொண்டு விட்டால் அவர்களுக்குச் சிறைத் தண்டனை அல்லது கூடைப்பந்தாட்டம் விளையாடும் மைதானத்தில் கட்டிவைக்கப்பட்டு, கிராமத்து மக்கள் அவர்களுக்குத் தண்டனை வழங்கிய பின் போது மென்று முடிவுக்கு வந்த பின்னரே விடுவிக்கப்படுவர். இதனாலேயே ''சுதந்திரமான துணையைத் தெரிவு செய்யலாம்'' என்று எழது சட்டத்தில் உண்டு.

**நீங்கள் சபாறிஸ்ரா தேசிய விடுதலைஇயக்கத்தில் எவ்வாறு இணைந்து கொண்டீர்கள்?**

*றமோனா:*

கிராமத்திலிருந்த வறுமை நிலையிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள நான் நகரத்திற்கு வந்த பின்னர் தான் எனக்குப் பெண்களின் உண்மையான நிலை பற்றிப் புரியத் தொடங்கியது. நாங்கள் நகரங்களில் கவனிப்பாரற்றும், தேவையற்றோராகவும், கணக்கிலெடுக்கப்படாததையும், எமது உற்பத்திகள் மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதையும் கண்டுகொண்ட நான், இதற்கெதிராக நாம் இணைந்து போராட வேண்டிய தேவையை உணர்ந்து கொண்டேன்.

*அனா மரியா:*

நான் மிக இளம்வயதிலேயே சபாறிஸ்ரா தேசிய விடுதலைஇயக்கத்தில் சேர்ந்து கொண்டேன். அப்போது எனக்கு பதின்நான்கு வயது. அனுபவம் நிறைந்த தோழர்கள் எங்களுக்கு ஆரம்பக் கல்வியை மேற்கொண்டனர். எழுதவும், வாசிக்கவும் கற்றுத் தந்தனர். பின் ஆயுதப் பயிற்சியும் தந்தனர். அரசியல் பேசுவதற்கும், போராட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பற்றி விளக்குவதற்கும் வகுப்புகள் எடுத்தனர். இவ்வாறு நான் படிப்படியாகக் கற்றுக் கொண்டேன். அது ஒரு நீண்ட கதை. சிறுமியாகவிருந்த போதே எனது பெற்றோருடன் இணைந்து அரசியல் போராட்டத்தில் பங்கெடுத்தேன். நாங்கள் அடிக்கடி கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் போனோம். எனது பெற்றோரும், வேறு பலரும் அமைப்பொன்றில் இருந்தனர். பிள்ளைகளாகிய நாங்களும் அவர்களுடன் போனோம். எனது எட்டாவது வயதிலிருந்தே அகிம்சைப் போராட்டத்தினால் கோரிக்கைகள் ஒன்றும் நிறைவு செய்யப்படாத பட்சத்திலேயே நாம் பலவந்தமாக நிலங்களைக் கைப்பற்றிக்கொண்டோம். அதன் பின்னர் இராணுவத்தினர் வந்து எம்மை பலவந்தமாகத் தாக்கியதுடன், சித்திரவதையும் செய்து, கொடுமைப்படுத்தி வெளியேற்றினர். இப்படியான அகோரமான அடக்குமுறை, பலாத்காரத்தின் பின்னரேயே நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் தரிப்பது என்ற முடிவுக்கு வந்தோம். அரசானது அமைதியான தீர்வொன்றை விரும்பாத பட்சத்தில் அதனை ஆயுதப் போராட்டத்தினூடாகக் காண்போம் என்று முடிவெடுத்தோம். இப்படித்தான் பத்து வருடங்களுக்கு முன்னர் நாங்கள் முதன் முதலாக இரு பெண்கள் இயக்கத்தில் மாக எட்டு முதல் பத்துப்பேர்வரையிலேயே இருந்தனர். இதனையறிந்த மற்றப் பெண்களும், காலத்திற்கு காலம் வந்து இணைந்து கொண்டதுடன், அவர்களது பெண் பிள்ளைகளுக்கும், சகோதரிகளுக்கும், பேத்திகளுக்கும் போராட்டத்தின் அவசியம் பற்றி எடுத்துக் கூறினர். இப்படியே சபாறிஸ்ரா தேசிய விடுதலை இயக்கத்தில் 30 வீதமானோர் பெண்களானார்கள்.

**நீங்கள் விடுதலை இராணுவத்திற்கும், றமோனா அரசியற் பிரிவிற்கும் பிரதிநிதிகள். இவை இரண்டிற்கும் இடையேயான வித்தியாசம் என்ன?**

*அனா மரியா:*

விடுதலை இராணுவத்தில் இருப்பவர்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து விடுதலைக்காகவும், போராட்டத்திற்காகவும் தம்மை முழுதாக அர்ப்பணித்துச் செயற்படுபவர்கள். அவர்கள் தங்கள் குடும்பத்திற்கு உதவி செய்ய முடியாது. ஆனால் றமோனா கிராமத்திலேயே இருந்து பல அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறாள். அங்கேயே அவளுக்கு அரசியல் வேலையும் இருக்கிறது.

**இந்த தேசிய விடுதலை இயக்கத்தில் பெண்களாகிய நீங்கள் ஓர் போராட்டத்தினை நடத்தி உங்கள் கோரிக்கைகளுக்கு எவ்வாறு அங்கீகாரம் பெற முடிந்தது?**

*றமோனா:*

பெண்கள் சந்திப்புகளிலும், கூட்டங்களிலும் பங்கெடுத்துக் கொள்வது தடை செய்யப்பட்டிருந்தும், கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படாமலிருந்த போதும் நாம் இதற்கெதிராக என்ன செய்யலாமென யோசித்தோம். படிப்படியாக சேர்ந்து செயற்படுவதிலும், கூட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் ஈடுபட்டோம். பெண்களின் நிலைமையைப் புரிந்து கொண்ட நாம் பெண்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்பட்டோம். நாங்கள் எமது செயற்பாடுகளில் முன்னேறுவதையும், எம்மால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்ற நம்பிக்கையையும் பெற்றோம். அதனடிப்படையிலேயே செவ்விந்தியர்களின் இரகசிய விடுதலை இராணுவக் குழுவின் (CCRI) பெண்கள் பிரதிநிதியாகச் செயற்படுகிறேன். என்னுடைய பங்களிப்பு, செய்தி தகவல் சேகரிப்பு, பெண்களை அமைப்புமயப்படுத்தல் போன்றவற்றை எனது மொழியில் செயற்படுத்துவதாகும்.

*அனா மரியா:*

எமது அமைப்பில் ஆண்களும், பெண்களும் சமமாக நடந்து கொள்கின்றனர். ஆனால் கிராமங்களில் இன்னமும் ஆணாதிக்கம் நடைமுறையிலுள்ளது. எமது விடுதலை இயக்கத்தில் ஆண்களும், பெண்களும் உயர்பதவிகளில் பொறுப்பு வகிக்கின்றனர். புதிய தோழர்கள் எமது இராணுவத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் அவர்களுக்குக் கட்டுப்பாடு, கூட்டுறவு முறை என்பன கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்படிப் பயிற்றப்பட்ட நாங்கள் கிராம மக்களிடம் சென்று அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்கு சமவுரிமை, கூட்டுறவு, மற்றும் பெண்களிற்கு மறுக்கப்பட்டு வரும் உரிமைகள் பற்றிப் பேசுவதுடன் அவர்களைப் படிப்பதற்கும் தூண்டுகிறோம். றமோனா இம்மக்களின் மொழியை சரளமாகப் பேசக் கூடியவள். அதனால் அவள் மக்களுடன் இலகுவாக கதைத்துக் கொள்ள முடியும். ஆனால் அவளுக்கு ஸ்பானிய மொழி நன்றாகத் தெரியாது. சான் கிறிஸ்ரோவில் நடந்த அரசு போராளிகள் பேச்சுவார்த்தைக்குச் சென்ற குழுவில் நானும் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தேன்.

**உங்கள் அமைப்பில் பெண்களின் செயற்பாடுகள் பற்றிக் கூற முடியுமா?**

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*அனாமரியா:*

ஆரம்பத்தில் பாதுகாப்பு விடயத்தில் பெண்கள் பெரும் பங்காற்றினர். ஒவ்வொரு கிராமத்திலும் தொடர்பு சாதனங்களை வைத்திருந்தோம். கிராமத்தினுள் இராணுவம் ஊடுருவும் போது வீட்டுப் பெண்கள் தொடர்புசாதனக் கருவிகள் மூலம் எமக்கு அறிவித்தனர். நாம் நகரங்களைத் தாக்கிய போதும் அவர்கள் அப்படியான உதவிகளைச் செய்தனர். இவர்கள் தமது கிராமத்தையும், குழந்தைகளையும் பாதுகாத்தது மட்டுமல்லாமல், போராட்டக் களத்திலிருந்த அவர்களது பிள்ளைகளையும் இராணுவத்திடமிருந்து பாதுகாத்தனர்.

ஓர் இராணுவத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் நாமே செய்கிறோம். ஆயுதங்கள், கைக்குண்டு போன்றவற்றைத் தயாரிப்பதிலும் பெண்கள் ஈடுபட்டனர். இப்படியான வேலைகளை எல்லோரும் செய்யலாம். இங்கு எல்லாமே சமத்துவம். ஒரு நாள் ஆண்கள் சமைத்தால் மறுநாள் பெண்கள். இப்படியே நடை பெறுகிறது.

***உங்களது மரணத்தைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?***

*றமோனா:*

சமத்துவத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேறுவழியில்லாததால் போராட வேண்டியுள்ளது. இப்போராட்டத்தில் இறக்க நேரிட்டால் அதை ஏற்றுக் கொள்வேன். ஏனெனில், எனது மக்களின் விடுதலைக்கு இப்போராட்டம் அவசியமானது.

*அனா மரியா:*

எனது மரணத்தைப் பற்றி என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஏனெனில், எனது மரணத்தை நினைக்கும் போது என்னால் எதையுமே உணர முடியவில்லை. அது நாம் உயிர்வாழ்ந்தும் வாழாதவர்கள் போல இருந்ததே காரணமாக இருக்கலாம். நாம் சமாதானமாகப் போராடிய போதும், பலர் கிராமங்களில் இறந்தனர். பலர் பட்டினியாலும், நோய் வாய்ப்பட்டும் இறந்தனர். அப்போதும் போர் நடப்பது போன்று தான் பலர் இறந்தனர். இப்போது போராட்டத்தில் பலர் கொல்லப்படுகின்றனர். இந்த நாட்டில் நடைமுறையில் இல்லாத சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் பெறுவதற்குப் பலர் உயிர்களைக் கொடுத்துப் போராட வேண்டியது அவசியத் தேவையாகும். போராட்டத்தில் தெளிவுள்ள எமக்கு மரணம் என்பது பெரிதாகப் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஆனால் உணவு இல்லாமல், தீராத நோய்களினால் எமது குழந்தைகள் இறக்கும் போது எமது இதயங்களில் அது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. என் கைகளில் இரு குழந்தைகள் இறந்தனர். எம்மால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. முதலில் அவர்களது தாய் இறந்தாள். பின்பு குழந்தைகள் உணவின்றி இறந்தனர். இப்படியே ஆயிரக் கணக்கான குழந்தைகள் இறக்கின்றனர். பல பெண்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். ஏனெனில், அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு, கல்வி மறுக்கப்பட்டு, வீட்டிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பலர் நியாயமற்ற முறையில் தண்டிக்கப்படுவதுடன் சுரண்டப்படுகின்றனர். பெண்களைப் போலவே ஆண்களும் சுரண்டப்பட்டாலும், மேலும் ஆண்களாலேயும் பெண்கள் சுரண்டப்படுகின்றனர். இதுவே கிராமத்திலும் நகரத்திலும் பெண்களின் நிலைமை. இதுவரை காலமும் எங்களுக்கும் சில காரியங்களைச் செய்ய வல்லமையிருந்தும், சந்தர்ப்பமும் உரிமையும் தரப்படாமல் இருந்தது, தற்போது எம்மாலும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் அவற்றை நாமே கையில் எடுத்துச் செய்யத் துணிந்து விட்டோம்.

●

# தமிழர்களும் மனித உரிமையும் !

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவின் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் கடந்த ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் அமெரிக்கா, கனடா, ஆகிய நாடுகளில் தங்கியிருந்து இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் யுத்தங்கள், அவலங்கள் பற்றியும், அரச அதிகாரிகளுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் விளக்கமான தகவல்களைத் தந்தார். கனடாவின் வெளியுறவு அமைச்சரையும், பரராஜசிங்கம் சந்தித்தார். அமெரிக்காவின் செனட் உறுப்பினர்கள் பலரையும் வேறு முக்கிய வெளியுறவு அதிகாரிகளையும் சந்தித்தார். கனடாவின், தொறன்ரோ மாநகரில் அகதிகளுக்கான வழங்குரைஞர்கள் சங்கமும் (Refugee Lawyers Association) அகதிகள் நலனுக்கான கனடாவின் சபையும் (Candian Council for Refugees) ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்திலும் இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி உரையாற்றினார்.

மொத்தத்தில், மிகவும் பயனுள்ளதான, இலங்கையில் பாதிக்கப்படும் தமிழ் மக்கள் மீதான கவனத்தைத் திருப்புவதற்கு இந்நாடுகளின் அதிகாரிகளைத் தூண்டுவதாகவும் அவருடைய பயணம் அமைந்திருந்தது.

அவருடைய மென்மையான சுபாவமும் விஷயங்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி எடுத்துரைக்கும் முறைமையும் அவருடைய வட அமெரிக்கப் பயணத்திற்கு மிகுந்த ஒத்தாசையாக இருந்த போதும், இலங்கையில் மனித உரிமை மீறல்களைப் பற்றிப் பொதுவாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பாகவும் பேசுகிற போது பேணப்பட வேண்டிய ஒரு அடிப்படை நடுநிலைமையை அவர் பெருமளவுக்குப் பேணத் தவறி விட்டார் என்ற குற்றச்சாட்டை முன்வைக்க வேண்டியிருக்கிறது.

அவர் பங்குகொண்ட எல்லாக்கூட்டங்கள், சந்திப்புகள் பற்றிய விவரங்கள் தெரியாத போதும், தொறன்ரோ கூட்டத்தில் அவருடைய உரையையும், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவர் சுற்றுக்கு விட்டிருந்த அறிக்கையின் அடிப்படையிலுமே இந்த அவதானத்தைச் சொல்ல நேர்கிறது. ''*கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள்*'' என்ற அவருடைய அறிக்கை சுருக்கமானது என்றாலும், 1990 -1993 காலகட்டம்; 1994-95 காலகட்டம்; 1995இற்குப் பிற்பாடான மீறல்கள், முடிவுரை ஆகிய ஐந்து பகுதிகளைக்கொண்டது.

அறிக்கையின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோராகப் பின்வருவோரைக் குறிப்பிடுகிறார்.

1. இலங்கையின் பாதுகாப்புப் படைகள்.
2. முஸ்லிம் ஊர்காவற் படையினர்.
3. 'ஒரு சில தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள்''

எனினும் அவருடைய அறிக்கையில் எந்வொரு இடத்திலாவது எந்தத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களினதும், மனித உரிமை மீறல்களும் பதிவு செய்யப்படவில்லை. அவருடைய தீவிரமான தவறு என்னவெனில், 1990 - 1993க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த பாரிய மனித உரிமை மீறல்களைப் பற்றி அறிக்கையில் எழுதுகிற போது, இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் முக்கியமான படுகொலைகளைப் பட்டியலிடுவதோடு முஸ்லிம் ஊர்காவற் படையினர் புரிந்த படுகொலைகளையும் பட்டியலிடுகிறார். இதே காலகட்டத்தில் காத்தான்குடிப் படுகொலைகள் உட்பட விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்கள் மீது புரிந்த படுகொலைகளும், ஏனைய இயக்கங்களின் அட்டூழியங்களும் வசதியாகத் தப்பிப் போய்விட்டன.


அவருடைய முழு அறிக்கையிலுமே எந்தத் தமிழ்க் குழுவினதும் எந்த ஒரு மனித உரிமை மீறல் பற்றிய எந்தவொரு சிறுவிவரம் கூட இல்லை. இத்தகைய அறிக்கைகள் எவ்வகையிலும் ''தமிழ்த் தரப்பு'' நியாயப்பாட்டுக்கு உதவப் போவதில்லை.

''73% தமிழர்களும், 23% முஸ்லிம்களும், 4% சிங்கள மற்றும் பேர்கர் மக்கள் வாழ்கிற மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக்'' கூறிக் கொள்ளும் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு மற்றைய இனத்துவ மக்கள் பற்றி எந்த அளவுக்கு உணர்திறன் இருக்கிறது என்பது பெரிய கேள்வியாக எழுகிறது.

தொறன்ரோ மாநகர் கூட்டத்தில் உரையாற்றுகிற போது கடந்த பதினெட்டு மாதங்களில் விடுதலைப் புலிகள் பொது மக்களைக் கொலை செய்வது தொடர்பாகத் தன்னுடைய மாவட்ட மக்களிடமிருந்து எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லையென்று ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார். அவர் சந்திக்கிற அவருடைய மாவட்ட மக்களில் எத்தனை பேர் முஸ்லிம்கள் என்பது தெரியவில்லை. பல்லின மக்களும் செறிந்து கலந்து வாழும் ஒரு பிரதேசத்து அரசியல் வாதியாக இருப்பவரும் எதிர்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக வர வேண்டியவர் என்று பல மட்டங்களிலும் சிறப்பித்துப் பேசப்படுபவருமான ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் மேற்படி விஷயங்களைச் சில்லறை அரசியலாக ஒதுக்குவாரானால் ஏற்கெனவே பெருமளவு கறைபட்டுப் போயிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிழக்கிலிருந்தும் இன்னும் கொஞ்சம் கறை சேரும்.

கூட்டத்தோடு ஒட்டியதாகக் கனடா, உலகத் தமிழர் இயக்கத்தின் முன்னாள் பொறுப்பாளரும், கனடாவின் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் விசேட பிரிவொன்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுரேஷ் மாணிக்கவாசம் அவர்களை ஒரு 'மனச்சாட்சியின் கைதி'யாக ஏற்றுக் கொள்ளும்படி அனைத்துலக மன்னிப்புச்சபை (Ammsty International)யிடம் வேண்டுகோள் விடுக்கும் கடிதங்களில் பல பிரதிகளை வந்திருந்தோரிடம் விநியோகித்து ஒப்பம் வாங்கும் நிகழ்வும் இடம் பெற்றது. கனடாத் தமிழர்களின் சங்கங்களின் சம்மேளனம் (Federation Association of Canadian Tamils அல்லது FACT) அமைப்பைச் சார்ந்த முன்னாள் கத்தோலிக்கப் பாதிரியார் ஃபிரான்ஸிஸ் சேவியர் அவர்கள் இந்நிகழ்வுக்குப் பொறுப்பாக இருந்தார்.

உலகத் தமிழர் இயக்கமும், க.த.ச.ச.வும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்துக்குள் இருக்கிற அமைப்புக்கள். அனைத்துலக மன்னிப்புச்சபை வடக்கில் ''காணாமல் போன'' முஸ்லிம் மக்கள் பற்றியும் ஏனைய பல விடயங்கள் குறித்தும் விடுதலைப் புலிகளுக்கு எழுதியிருக்கும் கடிதங்களுக்கு எத்தகைய பதிலுமே தராதவர்கள் மன்னிப்புச் சபையிடம் வேண்டுகோள் விடுப்பது வேடிக்கை என்பது ஒரு புறம் இருக்க, கொஞ்சக் காலத்துக்கு முன்பு நிகழ்ந்த இன்னாரு கூட்டம் பற்றியும் பொருத்தப்பாடு கருதி எழுத வேண்டியிருக்கிறது.



மதுரை பேராயர் ஆரோக்கியசாமி அவர்கள் தொறன்ரோ வந்திருந்தபோது 'தமிழ் மக்களும் மனித உரிமைகளும்' என்ற பொருளில் அவருடனான உரையாடல் அரங்கொன்றைக் கனடாத் தமிழர்களின் சங்கங்களின் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்தது. தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதகமான சூழல் நிலவிய போதும் எவ்வாறு அவர்களுடைய உரிமைக்காக குரல் கொடுத்தோம் என்று விபரித்த பேராயர் மதுரையில் இந்து அடிப்படைவாதிகளான பாரதிய ஜனதாவுக்கும் அதனுடைய குண்டர் படைகளுக்கு எதிராகவும் எவ்வாறு முஸ்லிம் மக்களும், தலித் மக்களும் பிறரும் இணைந்து பணி புரிகிறார்கள் என்பதையும் விளக்கினார். கலந்துரையாடலின் போது ஒரு சந்தர்ப்பத்தில் ''இலங்கையின் வடக்குப் பாகத்தில் இருந்த முஸ்லிம்களுக்கு என்ன ஆச்சு?'' என்று அப்பாவித்தனமாக ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார் பேராயர். கூட்டத்துக்கு வந்திருந்த தமிழர்களிடம் இருந்து வந்த பதில்களில் முன்னாள் கத்தோலிக்கப் பாதிரியார் ஃபிரான்ஸிஸ் சேவியர் அவர்கள் அளித்த பதில் அற்புதமானது! பதில் இது தான்: ***''வடக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் ஷெல்லடிகள், குண்டடிகள் எல்லாவற்றுக்கும் பயந்து போய் வெளியேற ஆரம்பித்தார்கள். உடனே விடுதலைப் புலிகள் அவர்களைப் பாதுகாப்பாகத் தென்னிலங்கைக்கு அனுப்பி வைத்தார்கள்!''***

இன்னொரு தமிழ் அன்பர் (அவருடைய நல்ல நாமம் எனக்கு மறந்து போய் விட்டது) பதில் தருகிற போது முஸ்லிம்கள் தொப்பி புரட்டுபவர்கள். அவர்களை நம்ப முடியாது. எனவே தான் அவர்களைத் தலைவர் வெளியேற்ற வேண்டி நேர்ந்தது என்று குறிப்பிட்டார். (கூடவே தான் எந்த மதத்துக்கும் எதிரானவனல்லன் எனவும் தன்னுடைய கழுத்துச் சங்கிலியில் பஞ்ச தம், சிலுவை போன்ற பல சின்னங்களையும் தரித்திருப்பதையும் தூக்கிக் காட்டியது ஒரு சிறப்பம்சம்!)

சமூகமளித்திருந்த வேறு சிலர் இவர்களை மறுத்துப் பேசினர். வடக்கு முஸ்லிம் மக்களுக்கு என்ன நடந்தது என்பதை மனித உரிமைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிக்கும் பெரியவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினால் மன்னிப்புச் சபையின் பல முக்கியமான அறிக்கைகள் உள்ளன. அவற்றைப் பெற்றுப் படிக்கலாம் எனவும், கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் தத்தமது 'சொந்த' அபிப்பிராயங்களையே கூறுவதாகக் கூறியதால்' எமது 'சொந்த' அபிப்பிராயங்களைத் தவிர்ந்த ஒரு பொதுவான நடுநிலை நிறுவனத்தின் அறிக்கை பயன் மிக்கதாக இருக்கும் என்றும், கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டவராக எழுந்து நின்று எங்களுக்கு மன்னிப்புச்சபையும் தேவையில்லை, மற்றச் சர்வதேச நிறுவனங்களும் தேவையில்லை. மனித உரிமைகளை எப்படிப் பார்க்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அதற்காக மன்னிப்புச்சபையோ, வேறெவருமோ எங்களுக்கு உபதேசம் செய்ய வேண்டியதில்லை'' என்று முழங்கியவர் வேறு யாருமல்ல: முன்னாள் பிதா ஃபிரான்ஸிஸ் சேவியர் அவர்கள் தான்.

என்ன சொல்வது?

பிதாவே, இவர்களை மன்னியும். தாங்கள் செய்வது என்ன என்பதை அறியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வதா? 0

சேரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### 'தீர்வுப் பொதி தொடர்பாக பிசாசுடனும் பேசத் த'யார்"

கோட்டை குண்டு வெடிப்பு தொடர்பாக ஒக்டோபர் 17ம் திகதி கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் மேற்படி செய்தியை தெரிவித்திருந்தார். இந்த திடீர் அறிவிப்பு சந்திரிகாவின் முடிவை காட்டிவிட்டிருக்கிறது என நம்பினால் நிச்சயமாக நாம் ஏமாந்து விடுவோம். மாறாக இவ்வறிவிப்பின் பின்னால் அவசரமும், ஊசலாட்டமும், பதட்டமும் மட்டுமே இருந்ததை கூர்ந்து கவனிக்கும் எவருக்கும் புரிந்துவிடும்.

இந்த குண்டு வெடிப்பினால் புலிகளுக்கு கிடைத்துள்ள வெற்றியும் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழ்ப்பு அவரை ஆட்டங்காணச் செய்திருக்கிறதென்றால் மிகையில்லை. உலகம் முழுவதும் கேட்கும்வண்ணம் உரத்துக் கூறினார். இதற்குத் தான் தீர்வு வைத்துள்ளோம்", அது தொடர்பாக எந்த பிசாசுடனும் பேசத்தயார்" என்று கூறியதுடன் புலிகள் தான் இதனை செய்துள்ளார்கள் என சொல்லவும் தயங்கினர். "சில தீய சக்திகளின் வேலை" என்றார். வெளிநாடுகளில் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட இழப்புகளை பிரச்சாரம் செய்வதை அவர் விரும்பவில்லை. மாறாக "பொது மக்களை இலக்காக வைத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு" என்று ஆத்திரத்துடன் கூறுவதுடன் நிறுத்திக்கொண்டார்.

இவ்வாறு அவர் கூற காரணமிருக்கிறது. காரணத்தை அறிய இதன் பின்புலத்தை சற்று விரிவாக நோக்குவது அவசியம்.

அரசின் "சமாதான யுத்தம்", "தீர்வுத் திட்டம்", "அமெரிக்காவின் புலித்தடை" தனித்தனியான காரணிகளும் அதனோடு ஒட்டிய போக்குகளும் இப்பின்புலத்தை அறிய அவசியமான காரணிகளாகும்.

கூடவே இந்த குண்டு வெடிப்பு நடந்த காலம், நடந்த இடம், சமகால அரசியல், பொருளாதார சூழல், நடந்த நாள் என்பனவும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

### குண்டு வெடிப்பு

15ம் திகதி புதன் கிழமை காலை 7.10 அளவில் நடத்தப்பட்ட இந்த குண்டு வெடிப்புச் சம்பவம், அதி பாதுகாப்பு வலையமாக (High Security Zone) பிரகனடப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசம். இராணுவத் தலைமையகம், பொலிஸ், கடற்படைத் தலைமையகம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை என எல்லாமே கண்ணுக்கெட்டிய தூரத்தில் அமைந்திருக்கின்றன. அது மட்டுமல்லாது சென்ற வருடம் மத்திய வங்கி குண்டு வெடிப்பும் இதே இடத்தில் நடத்தப்பட்டிருந்ததால் "ஜனாதிபதி மாவத்தை வீதி, சதாம் வீதி என்பன பொதுப்போக்குவரத்து நடத்தமுடியாதபடி மூடப்பட்டு படையினர், சீ.ஐ.டி.யினர் என்போர் குவிக்கப்பட்டு இறுக்கமான பாதுகாப்பு போடப்பட்ட ஒரு இடமாகவும் உள்ளது.கொழும்பின் இருதயம் என சொல்லப்படக்கூடிய இந்த இடத்தில் இக்குண்டு வெடிப்பு நடத்தப்பட்டதானது அரசின் ஒட்டு மொத்த பாதுகாப்பு நடவடிக்கையை கேள்விக்குட்படுத்துகிறது. புலிகளின் தேறிய பலத்தையும் காட்டுகிறது.

ஏறத்தாழ ஒன்றரை வருடங்களாக கொழும்பில் எந்தப் பெரிய தாக்குதலும் புலிகளால் நடத்தப்படாத நிலையை அரசும், பேரினவாத தரப்பினரும் வடக்கே இராணுவ நடவடிக்கையினால் புலிகளை ஒட்ட நறுக்கியாகிவிட்டது. மீள முடியாதபடி அழிக்கப்பட்டுவருகிறார்கள். இனி ஒன்றையும் செய்ய முடியாது என்றே பிரச்சாரம் செய்தனர். தங்கள் பலத்தைப் பற்றி மிகைப்படுத்தி செய்யப்பட்ட பிரச்சாரத்துக்கெல்லாம் சேர்த்து ஒரேயடியாக விழுந்திருக்கிறது இந்த அடி. ஒன்றரை வருட கொழும்பு அமைதிக்கு தமது பலவீனமல்ல காரணம் என்பதையும் கொழும்பில் எத்தனை பாதுகாப்பு மிகுந்த சூழலிலும் கூட தமது கைவரிசையைக் காட்ட முடியும் என்பதையும் புலிகள் நிரூபித்துள்ளார்கள். இத்தனை பாதுகாப்பான பிரதேசத்திலேயே தங்களால் இவ்வளவு பெரிய சேதத்தை விளைவிக்க முடியுமென்றால் மற்றெல்லாம் சுலபம் என்பதையும் இதன் மூலம் குறிப்பாக உணர்த்தியிருக்கிறார்கள்.

### தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம்

தேர்ந்தெடுத்திருக்கிற நேரத்தை எடுத்துக்கொண்டால் 15ம் திகதி புதன் கிழமை போயா விடுமுறை தினம். சாதாரண ஞாயிற்றுக் கிழமை போன்ற விடுமுறையல்ல. பௌத்த நாட்டில் போயாவுக்கு கொடுத்துள்ள முக்கியத்துமானது, அந்நாளில் பௌத்த அனுஷ்டானங்களுக்கு தடையேற்படக்கூடாது என்பதற்காக வேலைத் தளங்களில் வேலைக்கமர்த்துவது கூட தவறு என கூறப்படுமளவுக்கு முக்கியமான நாள் (டியூசன்களைக் கூட அந் நாட்களில் நிறுத்தக்கோரி ஏலவே பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது.) இப்படிப்பட்ட ஒரு தினத்தில் செய்ததானது பாரிய உயிரிழப்பைத் தவிர்த்திருக்கிறது. கொழும்பில் அதற்கு முன் நடத்தப்பட்ட தாக்குதல்கள் எல்லாமே பலத்த உயிரிழப்புகளை ஏற்படுத்தியிருந்ததும் அத்தாக்குதல்களில் பொது மக்கள் உயிரிழப்பானது "பயங்கரவாத நடவடிக்கை" என கூறப்படுவதற்கு சாதகமாயின என்பதும் நாம் அறிந்ததே. கனடாவில் நடந்த புலிகளுக்கெதிரான வழக்கிலும் "பயங்கரவாதிகள்" என நிரூபிப்பதற்கு முன்வைக்கப்பட்ட ஆதாரங்களும் இத்தகைய சம்பவங்களே. பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா புலிகளின் பெயரையும் சேர்த்த ஒரு வார்த்திலேயே இந்த சம்பவம் நடந்தது ஏன்பதும் கவனிக்கத் தக்கது.

போயா நாளில் நடத்தப்பட்டதற்கு பேரினவாத தரப்பில் வேறு காரணமும் கூறப்படுகிறது. அதாவது "போக்குவரத்து நெருக்கடியற்ற நாள்" என்பதாலேயே அந்த நாளை தேர்ந்தெடுத்திருக்கலாம் என்றும், மக்கள் இழப்பு அவர்களுக்கு பொருட்டே இல்லையென்றும் கூறப்படுகிறது. புலிகளின் முன்னைய "கரை"களினால் இத்தகைய கருத்துக்களுக்கும் பெறுமதியில்லாமலில்லை. அதே வேளை இந்த சம்பவம் நடத்தப்பட்ட சூழலை கருத்திற் கொள்வதும் அவசியம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இடமும் முக்கியமானது. பொதுவாக "கலதாரி ஹோட்டல் குண்டு வெடிப்பு" என்றே அழைக்கப்பட்டாலும் அதிக இழப்பு "உலக வர்த்தக நிலையம்" (World Trade Centre) என்றே இனங்காண முடிகிறது. டுவின் டவர்ஸ் (twin towers) என்று அழைக்கப்படும் இந்த கட்டடம் சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் (12ம் திகதி) ஜனாதிபதி சந்தரிகாவினால் திறந்து வைக்கப்பட்டது. இலங்கையில் அதி உயரமான கட்டடம் என சொல்லப்படும் இக்கட்டடம் 39 மாடிகளைக் (162 மீற்றர் உயரம்) கொண்டது. 110 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் கட்டப்பட்ட இக்கட்டம் சிங்கப்பூரைச் சேர்ந்த "ஓவர்சீஸ் ரியாலிட்டி" என்ற நிறுவனத்துக்கு சொந்தமானது. சம்பவம் நடக்கும் வரை 49 நிறுவனங்கள் இதில் செயற்பட ஆரம்பித்திருந்தன. பெரும்பாலான நிறுவனங்கள் அந்நிய நாட்டு முதலீட்டு நிறுவனங்கள். அதிலும் குறிப்பாக அமெரிக்க சீ.என்.என் சேவை உள்ளிட்ட அமெரிக்க நிறுவனங்கள் பல இதில் அடங்கும் என்பதும் கவனிக்கத்தக்கது. ஏறத்தாழ ஐந்து வருடங்களுக்கும் மேலாக கட்டப்பட்டு வந்த இந்த கட்டடம் சென்ற ஆண்டு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பினால் சேதமாகியிருந்தது.

இம்முறை வெடித்த குண்டினால் அக்கட்டடத்தின் உள்ளுக்குள் கடுமையான சேதங்கள் ஆகியிருப்பதால் மீள புனரமைப்பதற்கு பல மாதங்கள் செல்லுமெனவும் கூறப்படுகிறது. மத்திய வங்கிக் குண்டு வெடிப்பை விட இம்முறை அதிகளவு சேதங்கள் சுற்றுவட்டாரத்தில் ஏற்பட்டுள்ளதாக ஒரு படையதிகாரி தெரிவித்தார் (லக்பிம ஒக் -19) எனவே இது புலிகளைப் பொறுத்தளவில் வெற்றிகரமானதென்றே கூறலாம்.

இதைவிட அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளனைத்தும் புலிகளுக்கு வெற்றியையே வழங்கியுள்ளன எனலாம். இதனை சூழலுடனேயே நோக்கவேண்டியுள்ளது.

குறிப்பாக தீர்வுப்பொதி, அமெரிக்காவுடனான உறவு, பல்தேசியக் கம்பனிகளின் முதலீடு, உல்லாசப் பயணத்துறை, ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை என்பன முக்கியமானது.

### தீர்வுப் பொதி

குண்டு வெடித்த அதே நாள்; நாடே பரபரப்புற்றிருந்த நேரம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் அரசாங்கத்தைச் சேர்ந்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூடி தீர்வுப் பொதியை ஏகமனதாக (ஏலவே தீர்மானித்திருந்தபடி) நிறைவேற்றினார்கள். கடந்த மூன்று வருடங்களாக இழுபறிப்பட்டு, பேரினவாதிகளின் நெருக்குதல்கள் காரணமாக வெட்டிக் கொத்தி அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, சக்கையாக இருந்த இப்பொதி, அரசாங்க உறுப்பினர்கள் மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

ஆனாலும், மூன்றாம் நாள் பொ.ஐ.மு அமைச்சர்களே, அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்வுப் பொதியில் அதிகாரங்கள் அதிகம் வழங்கிவிட்டதாக வாதம் செய்தது இன்னொரு விடயம் . (குறிப்பாக இவர்க்ளில் "சிங்கள ஆணைக்குழு" அறிக்கையை ஆணைக்குழுவுக்குச் சென்று பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக உரையாற்றியிருந்த காணி அமைச்சரும் பொ.ஐ.மு.வின் செயலாளர் நாயகமுமான தி.மு.ஜயரத்னவும், மீன்பிடி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவும், போக்குவரத்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் குறிப்பிடத்தக்கவர்கள்.)

இந்தத் தீர்வுப் பொதியை சர்வதேச அளவில் அரசு பிரச்சாரம் செய்து வந்தது. *"'தமிழ் மக்களுக்கு தீர்வுப் பொதி', 'புலிகளுக்கு யுத்தம் அரசியல் தீர்வையே அரசு விரும்புகிறது எனவே கடன் தாருங்கள், உதவி செய்யுங்கள், 'சமாதான யுத்தத்துக்கு தரவளியுங்கள் 'பயங்கரவாத புலிகளை அடக்க கைகொடுங்கள். உங்களது முதலீடுகளுக்கு உத்தரவாதமளியுங்கள்* "என அது கோரியிருந்தது. எனவே இந்த "பொதி" வழங்கப்படுகிறதோ இல்லையோபொதியை வைத்தே உலக அரங்கில் ஆதரவைத் திரட்டி விடலாம். காலத்தைக் கடத்திவிடலாம் என்பதே அரசின் எதிர்பார்ப்பு.

தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாத சக்திகளை காட்டி "இத்தனை எதிர்ப்பையும் மீறி பொதியைத் தருகிறோம். வரலாற்றில் இப்பொதி தான் முன்னேறியது. இது தான் உங்களுக்கு கிடைக்கும் இறுதி சந்தர்ப்பம்." என 1987இல் மாகாண சபையைத் திணிக்க ஜே.ஆர். அரசாங்கம் என்ன சொன்னதோ அதையே பொ.ஐ.மு. இன்று சொல்லி தமிழ் இயக்கங்களையும், கட்சிகளையும் ஏற்கச் செய்து விட்டன. கூட்டணியினரோ இப்பொதிக்காகவே கடுமையாக உழைத்து வருகிறார்கள். சில இயக்கங்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இக்குண்டுப் பேரிடி பொதிக்கு கிடைத்த பேரிடியாகும். புலிகளைத் திருப்திபடுத்தாத சிங்களப் பேரினவாதத்துக்குப் பலியான தீர்வுப் பொதியினால் எந்தப் பய்னுமில்லை என்பதை இக்குண்டு வெடிப்பு விளக்கியுள்ளது.

அதற்குமேலும் தீர்வுப்பொதிக்காக செய்யும் எந்த நடவடிக்கைகளும் பம்மாத்தாகத் தான் இருக்கமுடியும். "தீர்வுப் பொதிக்காக பிசாசுடனும் பேசத்தாயார்" என்ற ஜனாதி பதியின் அறிவிப்பும் எந்த புற யதார்த்தங்களையும் கவனத்திற் கொள்ளாத ஒன்றாகத் தான் இருக்க முடியும். ஆக ஜனாதிபதியின் அறிவிப்பு சர்வதேச ஆதரவை வேண்டிய ஒன்றாகத் தான் இருக்கமுடியுமேயொழிய நிரந்தரத் தீர்வுக்கான ஒன்றாக இருக்க முடியாது.

### அமெரிக்கா: உறவும்-பிரிவும்

இந்தக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்ட நேரம், கலதாரி ஹோட்டலில் இலங்கையின் அரச படையதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வந்திருந்த அமெரிக்காவின் FBI யின் Marine Army யின் விசேட நிபுணர் குழுவொன்று தங்கியிருந்தது தெரியவந்துள்ளது.

அதைத் தவிர இரகசியமாக வரவழைக்கப்பட்டிருந்த அமெரிக்காவின் "கிரீன் பெரட்" கொமோண்டோக்கள் 12 பேர் அதே ஹோட்டலில் தங்கி நின்று சம்பவத்துக்கு முதல் நாள் இரவு ஹோட்டலை விட்டு கிளம்பியுள்ளனர். இவர்கள் யால சரணாலயத்தில் அமைந்துள்ள வீரவில காட்டில் இலங்கை படையினருக்கு படைப் பலப்பயிற்சி அளிக்க வந்தவர்கள். முன்னர் ஒரு குழு பயிற்சியறித்து விட்டுப் போனதன் பின் இது இரண்டாம் கட்டமாக வந்துள்ள குழுவென தெரிகிறது.

குண்டு வெடிப்பின் இலக்குகளில் இவர்களும் குறி வைக்கப்பட்டார்களா என்பதையும் ஆராய்ந்து வருகிறது விசாரணைக்குழு. எது எப்படியிருந்தபோதும் அமெரிக்கா புலிகளைத் தடை செய்து சரியாக ஒரு வாரத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது முக்கியமானது.

### புலித்தடை

ஒக்டோபர் 2ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டமொன்றிற்காக அமெரிக்கா சென்றிருந்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்க இராஜங்க செயலாளர் திருமதி மெட்லின்



வாகனத்தரிப்பிடம்

## கோட்டை
## வெற்றி

ஒல்பிரைட்டைச் சந்தித்து மூன்று முக்கிய விடங்களைக் கேட்டிருந்தார். அதாவது,

1. அமெரிக்காவுக்குள் புலிகளைத் டைசெய்து பயங்கரவாதப் பட்டியலில் இடுவது.

2. அமெரிக்காவுக்குள் நிதி திரட்டும் நடவடிக்கைகளை தடை செய்வது.

3. உலகம் முழுவதும் பாடசாலை சிறார்களை போருக்கு பயன்படுத்துவதை தடை செய்வது.

அமெரிக்கா ஏற்கெனவே புலிகளை "பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடும் இயக்கம்" என்று பிரகடனம் செய்திருந்த போதும் "பயங்கரவாத இயக்கம்" எனக் கூறவில்லை. அதற்கு அமெரிக்கா கூறியிருந்த காரணங்களில் ஒன்று அமெரிக்காவுக்குள் எந்த பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பதே. ஆனால் இச்சந்திப்பின் பின் சரியாக

ஒரு கிழ...
அமெரிக்க...
பயங்கரவ...
பிரகடனப்...
ங்கள் செய...
ளில் அமை...
களே. குற...
மக்களின்...
போராடுப...

அம்மக்...
எந்த வித...
அவ்வியக்...
தடை செ...
நாட்டின் அ...
களை நிய...
வளிப்பதே...
பெரும்பா...
தன்மைஎ...
அவை இட...
மாகவோ...
இயக்கங்...
தான்.

இன்றை...
க்கும் ஏகா...
க்கும் இவ்...
வளர்ச்சிய...
வையே. எ...
முடிவில் ஆ...

I.R.A. ...
இயக்கங்க...
தற்கு கூறப்...

இரண்டும்
ஈடுபட்டுக்...
அதாவது ...
ஆகிய அ...
ளோடு சம...
அவற்றிற்கு...
ன்பதே.

### அமெ...

புலிகள...
பின்னணிய...
களும் உ...
வின் அர...
நலன்கள் ...
ங்களில்
உபகண்ட...
பலப்படுத்...
இந்தியாவி...
கொள்கை,
இடையூறா...

இன்று
"ஏவுகணை...
நிலகண்ணி...
என்பவற்றி...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ...ண்டு வெடிப்பு, புலித்தடை: ...தோல்வி யாருக்கு?

ஆம் திகதி
...பக்கங்களை
...க்கங்களாக
... இவ்வியக்க
...வ்வவ் நாடுக
...ல இயக்கங்
...ஒடுக்கப்படும்
...தலைக்காக

...க்குமுறைக்கு
...வாதமுமின்றி
...னைத்தையும்
..., அந்தந்த
...ஒடுக்குமுறை
...வதே. ஆதர
...இயக்கங்களில்
...ரின் முக்கிய
...ால் ஒன்றில்
...சிகர இயக்க
... இஸ்லாமிய
... உள்ளமை

...லக ஒழுங்கு
...வல்லரசுகளு
...பாக்குகளின்
...க்க முடியாத
...மரிக்காவின்
...வதற்கில்லை.
... ஆகிய
...செய்யப்படாத
...ரணம் அவை

பதை - அதில் கையெழுத்தே இடாத-அமெரிக்கா கண்டித்துக் கொண்டிருந்தபோதும், இந்தியாவின் தற்போதைய அரசியல் பொருளாதார கொள்கைகள் அமெரிக்காவுக்கு ஓரளவு இசைவானது.

அதே போல் இந்திய உபகண்டத்தில் கேந்திர நிலையமான இலங்கையின் அரசியல் பொருளாதார கொள்கைகளும் அமெரிக்காவுக்கு சாதகமானதே.

இரணவிலவில் அமைந்துள்ள அமெரிக்காவின் குரல் (VOA-Voice Of America) ஒலிபரப்பு நிலையமானது உளவு நிறுவனம் என்றும் தேசத்துக்கு ஆபத்தென்றும் ஆரம்பத்தில் கூறிய சந்திரிகா இன்று அதன் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளித்து வருவதுடன் மேலும் நிலங்களை ஒதுக்கிக் கொடுத்துள்ளது. (இது குறித்த மேலதிக தகவல்களுக்கு யூன் 95-சரிநிகரைப் பார்க்க)

இதைவிட கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு அமெரிக்காவின் பேர்போன நிறுவனமான "ரவன்ஸ் இன்டர்நெஷனல்" எனும் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கடனுதவியாக 110 மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா கடனுதவியாக





...ர்த்தையில்
...வ என்பதே.
..., இஸ்ரேல்
... கூட்டாளிக
...பாவிட்டால்
...ன் கதியெ

...ன்கள்

... செய்ததன்
...ல காரணங்
...அமெரிக்கா
...ருளாதார
...கடந்தகால
... இந்திய
... இருப்பைப்
...முயற்சிகள்
...அயலுறவுக்
...ன்பவற்றால்
... அறிவோம்.
... சர்வதேச
...ஒப்பந்தம்",
... ஒப்பந்தம்"
...ந்திட் மறுப்

தருவதாகவும் அத்திட்டத்தை தமது நாட்டின் நிறுவனமான ரவன்ஸ் இன்டர் நெஷனலுக்கு வழங்கும் படியும் கோரியிருந்ததைத் தொடர்ந்தே இது வழங்கப்பட்டிருந்தது. (இது தொடர்பான விரிவான கட்டுரை ஒக்டோபர் 19ஆம் திகதி லக்பிம பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இத்திட்டம் தொடர்பாக லக்ஸ்மன் கதிர்காமர், அமெரிக்க தூதர் பீடர் பேர்ல், அமெரிக்க ராஜாங்க செயலாளர் மெடலின் ஒல்பிரைட் ஆகியோருக்கு இடையில் பரிமாறப்பட்ட ஆவணங்கள் பற்றியும் விலாவாரியாக வெளியிடப்பட்டுள்ளது.)

மேலும் இலங்கையில் கிடைக்கும் இயற்கை கனியவளங்களில் இல்மனைட் ,பொஸ்பேட் என்பனவற்றின் பெரும்பகுதியை அமெரிக்காவே கொண்டு செல்கிறது.

கடந்த செப்டம்பர் 9ஆம் திகதி திருமலை புல்மோட்டைக் கடலில் இல்மனைட் ஏற்றிக்கொண்டிருந்த சரக்குக் கப்பல் மீதான கரும்புலித் தாக்குதலை அமெரிக்கா கண்டித்திருந்தது நினைவிருக்கலாம்.

அது போல அமெரிக்காவின் வர்த்தக நிறுவனமான "மெக்மொரான்" எனப்படும் கம்பனிக்கு 56 மைல் பரப்புடைய பொஸ்பேட் கனியவளத்தை விற்பது பற்றிய தீர்மானமும் குண்டு வெடிப்புக்கு அடுத்த நாள் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அக்கம்பனியுடன் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஒப்பந் தமும் கைச்சாத்திடப் படவுள்ளது.

450 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்கப்படவுள்ள இக்கனியவளம் அங்கு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு 25 வருடங்களுக்கு மேலாகிறது.

இது வடமத்திய மாகாணத்தில் குறிப்பாக அனுராதபுரத்தில் அதிகளவு உள்ளது அனுராதபுரத்தில் எப்பாவல எனும் இடத்திலேயே இதற்கான நிறுவனம் அமைக்கப் படவுள்ளது. எனவே தான் மேற்படி அமைச்சரவைக் கூட்டத்தில் அனுராதபுர மாவட்ட பாரர்ளுமன்ற உறுப்பினர் பேர்ட்டி பிலேமலால் "நீங்கள் எல்லோரும் தீர்மானமெடுத்து விட்டுப் போய்விடுவீர்கள்" எனக்கோ ஊரில் தலைகாட்ட முடியாது" என்றதும் ஜனாதிபதி சந்திரிகா "ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் நான் பார்த்துக் கொள்கிறேன்" என அதனை அடக்கினார்.

இந்தக் கனிய வளம் விவசாய உரம் தயாரிக்க பயன்படுத்த வல்ல முக்கிய மூலப்பொருள். இதன் மூலம் "சுப்பர் பொஸ்பேட்" தாயாரிக்கும் தொழில்நுட்பப் பலம் தம்மிடமில்லை யென அரசு நியாயம் கூறினாலும் நிபுணர்கள் பலர் அதனை மறுக்கிறார்கள்.

எனவே அமெரிக்கா இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கையை உயர்ந்த அதிக பட்சம் பயன்படுத்தி அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை செய்து வந்தவேளை இந்தக் குண்டு வெடிப்பு அதன் மூலதனத்துக்கே பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

லங்காதீப பத்திரிகையின் அரசியல் விமர்சகர் 'உபுல் ஜோசப் பெர்ணான்டோ இப்படிக் கூறுகிறார். "குண்டு வெடிப்பின் இலக்கு தற்போது பாதிக்கப்பட்டுள்ள American Express Bank உம் இலக்கல்லவா? அமெரிக்க உயர் ஸ்தானிகராலயத்தினர், அமெரிக்க முதலீட்டாளர்கள், அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் என்போர் தமது வங்கிக் கணக்குகள், கொடுக்கல் வாங்கல்களை இதனூடல்லவா வைத்துக் கொண்டுள்ளனர்? அவ்வங்கியும் சேதத்துக்குள்ளாகியுள்ளது அல்லவா? புலிகளது இலக்குகளில் ஒன்றாக அதுவுமாயிராதா?" என்கிறார்.

எனவே இக்குண்டு வெடிப்பு அமெரிக்காவுக்குமான ஒரு அடியென கருதலாம். அமெரிக்காவின் தேவைகளை இடைஞ்சலில்லாமல் இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்து கொண்டிருக்கையில் மறுபுறம் புலிகள் அதனை குழப்புகிறார்கள் என்று அமெரிக்க கருத இடமுண்டு. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இலங்கை முழுதுமம் சுரண்ட இந்த யுத்தம் தடங்கல் என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

இதுவரைகாலம் ஏகாதிபத்திய அரசுகளையே சார்ந்தும் முற்போக்கு விடுதலை இயக்கங்களுடனான உறவுகளில் அத்தனை அக்கறை கொள்ளாததன் விளைவுகளையும் இங்கு தான் காணமுடிகிறது. (அமெரிக்காவில் ஏற்கெனவே நடந்த குண்டு வெடிப்பு பற்றி பிரபாகரன் வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டது அறிந்ததே.) "புலிகள் இயக்கத்தை தடை செய்தது அமெரிக்க அரசியலமைப்புக்கு எதிரானது என புலிகள் அமைப்பினர் அமெரிக்காவின் புகழ்பெற்ற வழக்கறிஞர்களைக் கொண்டு வழக்கு தொடரவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கினன்றன.

ஏற்கெனவே இந்தியாவில் 1992 யூனில் (ராஜிவ் காந்தி கொல்லப்பட்டு ஒருவருடத்தில்) புலிகள் இயக்கத்தை இரண்டு வருடங்களுக்கு தடை செய்ததும், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அத்தடை நீடிக்கப்பட்டு வருவதும் நாமறிவோம். அண்மையில் கனடாவில் புலிகளுக்கு எதிரான வழக்கொன்றில் நீதிமன்றமொன்று புலிகளைத் தடைசெய்யும் தீர்பொன்றை வழங்கியிருந்த போதும் அரசு மட்டத்தில் அத்தடை யுத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

ஆனால் அமெரிக்கா புலிகளைத் தடை செய்ய இதுவும் முன்னுதாரணமாக இருந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

பிரித்தானிய அமைச்சர் லியொம் பொக்ஸ் இலங்கை வந்திருந்தபோது "எமது நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லாதபோது எப்படி தடைசெய்வது?" என ஏற்கெனவே கூறியிருந்தார்.

தம்மைப் பற்றி ஏனைய நாடுகளும் தமது பட்டியலிலுள்ள இயக்கங்களை தடை செய்யுமாறு அண்மையில் அமெரிக்கா அறிக்கை வெளியிட்டிருந்தது. ஆனாலும் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தளவில் சொல்லுமளவுக்கு "இத்தடை" பாதிக்காது என்றே தெரிகிறது. இனி அமெரிக்காவில் "விடுதலைப் புலிகள் "என இல்லாமல் உத்தியோகபூர்வமற்ற ரீதியில் செயற்பட எத்தடையும் இல்லையே.

### உல்லாசப் பிரயாணத்துறை பாதிப்பு

இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் பல்தேசியக் கம்பனிகளின் பாரிய மூதலீடுகள் ஏற்கெனவே யுத்தம் காரணமாக சிக்கல் நிறைந்திருந்த வேளையில் தற்போதைய தாக்குதல் மீண்டும் அம் முதலீடுகளை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அத்துடன் உல்லாசப் பிரயாணத்துறைக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

குண்டு வெடிப்பன்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க "உல்லாசப் பிரயாணிகள் இலங்கையில் இயற்கையை ரசிக்கவும், ஓய்வெடுக்கவும் தான் வருகிறார்களே ஒழிய. இப்படிக் காயப்பட்டு படுக்கையில் கிடக்கவல்ல" எனக் கூறியது இங்கு முக்கியமானது.

புலிகளின் கொழும்புத் தாக்குதலில் பல முதலீடுகள் மட்டுமன்றி உல்லர்சப்பிரயாணத்துறையும் இதுவரை இலக்காக இருந்திருக்கிறது என அறிய முடிகிறது. இதன் ஆரம்பம் 1984 ஜனவரி 28ஆம் திகதி ஒபரோய் ஹோட்டல் குண்டு வெடிப்பிலிருந்தே ஆரம்பமாகிறது. அதன் பின்னர் 1986 மே 13ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரித்திருந்த ட்ரை ஸ்டார் எயார் லங்கா விமானத்தில் வைக்கப்பட்ட குண்டில் 20பேர் பலியானதுடன் 41 பேர் காயமுற்றனர்.

1992 நவம்பர் 16 ஆம் திகதி காலிமுகத்திடலில் தாஜ் சமுத்திரா ஹோட்டலின் முன் கரும்புலித் தாக்குதலினால் கடற்படைத் தளபதி கிளன்சி பெர்ணாண்டோ கொல்லப்பட்டார். எக்ஸ்போ 92 (இது Expo 92) நடக்க இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்தது.

அது மாத்திரமன்றி டெஸ்ட், மெச்சுக்கென இலங்கை வந்திருந்த நியூசிலாந்து கிரிக்கட் அணியினர் இதே ஹோட்டலில் தங்கியிருந்தனர். அவர்கள் விளையாட்டை நிறுத்தி விட்டு தங்கள் நாடு திரும்பியதுடன் எக்ஸ்போ 92வுக்கு என இலங்கை வரவிருந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலர் வரவில்லை.

மூன்றாவது ஈழ யுத்தம் ஆரம்பமானதும் 1995 யூன் 5ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தின் அருகில் மீண்டும் குண்டு வெடித்தது. 1996 ஜனவரி 31ஆம் திகதி மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பவம் நடந்த இடத்தைச் சுற்றி பல ஹோட்டல்கள் அமைந்திருந்ததும். அவற்றில் இன்டர்கொன்டினென்டல், ஹில்டன், கலதாரி என்பவை சேதமுற்றதும் அறிந்ததே.

### ஜயசிக்குறு: வெற்றி நிச்சயமா?

ஜயசிக்குறு வெற்றியென அரசாங்கம் மிகைப்படுத்தி பிரச்சாரம் செய்து வந்தவேளை இததாக்குதல் நடத்தப்பட்டது "வெற்றி நிச்சய"த்துக்கும் பலத்த அடியே. மே. மாதம் ஆரம்பமான ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை 5 மாதங்கள் கடந்து விட்டன. அரச தரப்பு செய்திகளின் படி இந்த ஐந்து மாதத்தில் அரசு தரப்பில் 800 பேர் பலியாகியுள்ளனர். 4500 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 1500 பேர் மீள இராணுவ நடவடிக்கையில் ஈடுபடமுடியாதவர்கள். ஆக ஜயசிக்குறுவுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள 20,000 பேரில் பத்தில் ஒரு பங்கினரை இழந்துள்ளது அரசு. இராணுவம் இன்னமும் 17 கிலோமீற்றர் வரையுமே முன்னேறியுள்ளது. இன்னும் மூன்றில் இரண்டு பகுதி வரை செல்ல வேண்டியிருக்கிறது. புலிகள் தரப்பில் 2,500 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 6,000 பேர் காயப்பட்டுள்ளனர். ஆனால் ஜயசிக்குறு ஆரம்பிக்குமுன்னர் அரசதரப்பில் கூறப்பட்டது புலிகளின் மொத்த எண்ணிக்கையே 4000 மட்டும் என்பதே. இந்த இராணுவ நடவடிக்கை சொல்லப்பட்ட காலத்துக்குள் முடிக்கப்படவுமில்லை. பல கோடிகள் பெறுமதியான இராணுவத் தளபாடங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் பெருமளவு ஆயுதங்கள் புலிகள் வசம் போயுள்ளது. ஜயசிக்குறுவுக்காக கிழக்கில் பல படைமுகாம்கள், காவலரண்கள் மூடப்பட்டுவிட்டன. இந்த லட்சனத்தில் 97-98ஆம் ஆண்டுக்கென 4500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன. யுத்தத்தை நடத்தவென மக்கள் மீது விலைவாசிச் சுமை ஏற்றப்பட்டு வெறுப்பை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இக்குண்டு வெடிப்பு அரசின் "வெற்றி" பற்றிய செய்திகளை கேலிக்குள்ளாக்கியுள்ளது.

கடைசியில் வெற்றியும் நிச்சயமில்லை, புலிகளையும் அழித்தபாடில்லை, பேரினவாதத்தையும் திருப்திபடுத்த முடியவில்லை., தமிழ் மக்களையும் திருப்திபடுத்த முடியவில்லை. பல்தேசியக் கம்பனிகளையும் திருப்திபடுத்தவில்லை.

எதிர்வரும் மாதம் கடன் வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு என பாரிஸ் செல்ல அரசாங்கம் தயாராகிக் கொண்டிருந்த நேரத்தில் இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. வெற்றிச் செய்திகளையும் தீர்வுப் பொதியையும் காட்டி கடன் வழங்கும் நாடுகளை திருப்தி படுத்த இருந்த சூழலிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நிச்சயமாக இது புலிகளின் இறுதியான கொழும்புத் தாக்குதலாக இருக்குமென்று சொல்ல முடியாது. எதிர்வரும் வருடம் 50வது சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடுவது, சார்க் மாநாட்டை நடத்துவது (ஒழுங்கின்படி இம்மாநாடு நோபாளிலும், அதற்கடுத்த மாநாடு பாகிஸ்தானிலும் அதற்கடுத்த மாநாடே இலங்கையிலும் நடத்தப்பட வேண்டும். ஆனால் இம்முறை மாலைதீவில் நடந்த சார்க் மாநாட்டில் "50 வருட சுதந்திர தின காலத்தில் "10வது சார்க்மாநாடு" இலங்கையில் நடத்துவதற்கு அனுமதி தருமாறு கோரியதைத். தொடர்ந்து இலங்கைக்கு அனுமதியளிக்கப்பட்டது. 1990இல் இலங்கையில் நடத்தப்படவிருந்த சார்க் மாநாட்டை பிரேமதாச இலங்கையின் இறைமைக்கு எதிரான வகையில் அனுமதியின்றி இந்தியப் படையினர் இருப்பதால் தான் இலங்கையில் நடத்த விரும்பவில்லையென கூறியதைத் தொடர்ந்து அது மாலைதீவில் நடந்ததும் இந்தியப் படையினர் போனபின்னர் சார்க் மாநாடும், சாப் விளையாட்டுப் போட்டியும்1991 இல் கோலாகலமாக இலங்கையில் பிரேமதாச நடத்திக் காட்டியதும் நினைவிருக்கலாம்.) மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என பல பொறுப்புகள் அரசிடம் உள்ள நிலையில் அரசுக்கு பெரும் தலையிடியாகத் தான் புலிகளின் இத்தாக்குதல்கள் இருக்கும்.

-கோமதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 41

### நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள்

பெருமளவு பாதிப்புக்குள்ளாகாத குழந்தைகள், மன அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளிலும், தமது உள் மனதில் ஏற்படும் போராட்டங்களின் போதும், தாறுமாறான கொந்தளிப்புகளுடன் தமது எதிர்வினையைக் காட்டுகிறார்கள். அவர்கள் பயப்படுவார்கள்; இரவுகளில் கனாக்கண்டு திடுக்கிட்டு எழுவார்கள்; தமது நகங்களைக் கடிப்பார்கள்; சகோதர சகோதரிகட்கு தூண்டில் போட்டு வம்புக்கு இழுப்பார்கள்; வலிப்பு நோய் அல்லது திடீரென வெறிவந்தது போல செயற்படும் நிலைக்குள்ளாவார்கள், இன்னும் இது போன்ற பல்வேறு விதமான குறியீட்டு வடிவிலான எதிர்வினைகளைக் காட்டுவார்கள். பெரும்பாலும் இவர்கள் நல்ல குடும்பங்களைச் சேர்ந்த நல்ல நோக்குடன் அவர்களை வளர்க்கின்ற பெற்றோர்களின் பிள்ளைகளாக இருப்பார்கள். இப்பெற்றோர்கள் தமது நல்ல நோக்கின் காரணமாக, அளவுக்கு மீறிய பாதுகாப்புணர்வைக் கொண்டு செயற்படுபவர்களாக, அல்லது அளவுக்கு மீறிய செல்லம் கொடுப்பவர்களாக, அல்லது அவர்களை அளவுக்கதிகமாக கட்டுப்பாடு செய்பவர்களாக இருப்பார்கள். இத்தகைய பிள்ளைகட்கும் பெற்றோர்க்கும் இத்துறைசார் நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. இவ்வுதவியால் இவர்கள் அதிக பயன் பெறுவார்கள்.

சில குழந்தைகள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகுகிறார்கள். அவர்கள் பொறாமை காரணமாக கொலைகாரத்தனம் கொண்டவர்களாகவும், தமது கையில் வன்முறையை வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். தமது பாலியல் சார்ந்த விடயங்களில் கருணையற்ற விதத்தில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

இதிலிருந்து நாம் குழந்தைகளை இரண்டு விதமாகப் பிரிக்கமுடியும். ஒன்று: உளவியல் மருத்துவம் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் குழந்தைகள். இரண்டு: உளவியல் மருத்துவ முறையால் உடனடியாக பலனைப் பெறக்கூடியவர்கள்.

### உடனடியாக உளவியல் மருத்துவம் தேவைப்படும் குழந்தைகள்

அடிக்கடி நடக்கும் சகோதரச் சண்டை: அடிக்கடி மிகவும் அதிகமாகச் சகோதர/சகோதரிகளுடன் சண்டையிடும் பிள்ளைகளுக்கு அவசியம் உதவி தேவைப்படுகிறது. இந்தக் குழந்தைகளின் பொறாமை உணர்வானது அவர்களது முழுவாழ்விலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர்களது ஆளுமை விருத்தியினை ஊறுபடுத்தி விடுகிறது. அவர்கள் அதிகப்படியான கவனம் கொண்டவர்களாகவும், தமது போட்டியாளர்களைக் காணும்போது அவர்களை அழித்துவிட வேண்டும் என்று விரும்பும் தன்மை கொண்டவர்களாகவும் காணப்படுவர். தமது சகோதரர்களையும், சகோதரிகளையும் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் புண்படுத்தும் விதத்தில் நடந்து கொள்கிறார்கள். அத்துடன் தமது பெற்றோரோ, ஆசிரியரோ, அல்லது சாரணர் இயக்கத் தலைவரோ யாராவது ஒரு பெரியவருடனான தமது அன்பினைத் தமது சகோதரர்களுடன் பங்கு போட்டுக் கொள்ளத் தயாரற்றவர்களாக உள்ளனர். அவர்கள் 'நல்லவைகள்' என்று கருதும் எவற்றையும் பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்க மாட்டார்கள். வீட்டிலோ, விருந்துகளின் போதோ, தமக்கு அதிகளவு ஐஸ்கிரீமை, கேக்கை, விளையாட்டுப் பொருட்களை எடுத்துக் கொள்ளத் தயங்க மாட்டார்கள். தாம் பாவிக்க முடியாதவைகளைக்கூடப் பகிர்ந்து கொள்வதற்குப் பதில் மறைத்து வைக்கவே விரும்புகிறார்கள்.

## பாலியல் பற்றி அறிதல்

மட்டுமீறிய போட்டியாளர்களாக இருக்கிறார்கள். தமக்கு வரும் போட்டிகளை எப்படியாவது இல்லாமல் செய்யும் வேகம் அவர்களுக்கு ஏற்படுகிறது. தமது போட்டிகளில் தம்மால் நேர்மையாக வெல்ல முடியாவிடில், நேர்மையீனமாகவேனும் வெல்லவே அவர்கள் விரும்புகிறார்கள். போட்டி போடுவதே அவர்களது வாழ்க்கை முறையாக மாறி விடுகிறது. அத்துடன் எப்போதும் மற்றவர்களை மிஞ்சி இருப்பதே அவர்களது வாழ்வின் குறிக்கோளாக மாறிவிடுகிறது. குழந்தைப் பராயத்திலிருக்கும் இந்தப் பொறாமை உணர்வு பிள்ளைப் பருவம் முடிகையில் மாறாவிட்டால் அவர்கள் தமது வாழ்க்கை முழுவதும் சந்திக்கும் ஒவ்வாருவரையும் சகோதரச் சண்டைகளானவர்களாகவே காணத் தலைப்படுவர். வாழ்வுக்கும், சாவுக்குமான போட்டியில் மூழ்கியிருக்கும் இவர்கள் விளையாட்டிலோ, வியாபாரத்திலோ ஏற்படும் ஒவ்வொரு தோல்வியிலும்



டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட், தமிழில்: அருண்

தமது தகுதிக்கு இழுக்கு ஏற்பட்டதாகவே கொள்வர். வாகனங்களை ஓட்டும்போது தாமே வெல்ல வேண்டும் என்று கருதுவார்கள். வெல்ல முடியாத போது தோல்வி மனோபாவத்திற்கும், மனவழுத்திற்கும் உள்ளாவார்கள். அவர்கள் தமது சகோதரர்களை மிகவும் தெளிவாகத் தெரிந்து கொண்டே வெறுப்பார்கள். அத்துடன் அவர்களை வாழ்நாள் முழுவதும் அவமானப் படுத்துவதில் ஈடுபடுவார்கள்.

சாதாரண சிறுவர்கள் கூட சகோதர சகோதரிகளிடம் பொறாமை கொள்வார்கள் தான். ஆனால் அந்தப் பொறாமை ஒரு மன நிலைப்பிறழ்வு சார்ந்ததாகவோ, அவர்களது வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாகவோ இருப்பதில்லை. அவர்கள், தமது சகோதரர்கள் அதிகளவு அன்பைப் பெறுவதாக உணரக்கூடும். இதனால் அவர்களுடன் அன்புக்காக போட்டியிடவும் கூடும். ஆனால் அன்பு கிடைத்ததும், அவர்கள் திருப்பதியடைந்து விடுவார்கள். அவர்களும் போட்டி போடுவதையும், போட்டியில்லாமல் இருக்கும் நிலையை உருவாக்கவும் விரும்பக்கூடும். ஆனால் அவர்கள் சந்தோசத்திற்காக விளையாடவும் விரும்புவார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக; அவர்கள் தோல்வியைப் பெரியளவு துயரமும் கஷ்டமும் இன்றி ஏற்றுக்கொள்ளவும் செய்கிறார்கள்.

பால் விடயங்களில் அதிக நாட்டம்: சில சிறுவர்கள் பாலியல் சார்ந்த முதிர்ச்சியுறாத விதத்தில ஆனால தொடர்ச்சியாக பாலியல் சார்ந்த விடயங்களில் தமது கவனத்தைக் குவித்திருப்பார்கள். அவர்கள் பாலியல் விடயங்கள் தொடர்பாகச் சிந்திக்கிறார்கள்; கனவு காண்கிறார்கள். இது பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் பகிரங்கமாகவோ, மறைவாகவோ கைமைதுனம் செய்கிறார்கள். அத்துடன் பாலியல் விடயங்கள் தொடர்பாக சகோதர சகோதரிகளுட்பட பிற சிறுவர்களுடன் 'ஆராய்ச்சி' செய்கிறார்கள் - அவர்கள் மறைந்திருந்து பார்க்க, துவாரங்கள் வழியாக ஒட்டுப் பார்க்க விரும்புவார்கள். தமது பெற்றோர்களின் பாலுறவு நடவடிக்கைகளையும் கூட 'கையும் மெய்யுமாகப் பிடிக்க' முயல்வார்கள்.

இத்தகைய சிறுவர்கள் பால்ரீதியான தூண்டுதலுக்கு உள்ளானவர்களாக உள்ளனர். இவர்கள் பெற்றோர்களது படுக்கையறையில் படுத்திருக்கக்கூடும், பெற்றோரின் படுக்கையைப் பகிர்ந்திருக்கக்கூடும். எப்படியோ பாலியல் விடயங்கள் அவர்களது மனதில் அதிவிரைவாகவும், அதிகப்படியாகவும் குடிபுகுந்திருக்கிறது. இத்தகைய முழுக் கவனமும் பாலியல் விடயங்களில் குவிக்கப்பட்டிருக்கும் தன்மையானது உளவியல் ரீதியான பிறழ்வு நிலை வளர்ச்சியடைவதையே காட்டுகின்றது. இவர்கள் உடனடியாக எந்தத் தாமதமும் இன்றி சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்களாவர்.

சாதாரண சிறுவர்கள் கூட பாலியல் விடயங்களில் ஆர்வம் காட்டுவார்கள். அவர்கள் எதிர்ப்பாலார்களை கிண்டல் செய்வார்கள். ஆண் நண்பர்கள், அல்லது பெண் நண்பர்கள் குறித்து கிளுகிளுப்படைவார்கள். அல்லது திருமணம் செய்வது பற்றி, குழந்தைகள் பெறுவது பற்றிப் பேசுவார்கள். அவர்கள் தமது பாலுணர்வு பற்றிச் சந்தோசமாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் தம்மை தொட்டுப் பார்க்கவும், எப்பவாவது கைமைதுனமும் செய்வார்கள். ஆயினும், பாலியல் நடவடிக்கை அவர்களது வாழ்வின் ஒரு அம்சம் மட்டுமாகவே இருக்கும்.

அளவுக்கதிகமாக அடக்கமாக இருக்கும் குழந்தைகளுக்கும் நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. இந்தச் சிறுவர்கள் தாம் நிர்வாணமாக இருப்பதை மற்றவர்கள் பார்க்கிறார்கள் என்பதை அறியும் போது கலவரமடைகிறார்கள். அவர்கள் தமது உடல்பற்றி மிகவும் அதிகளவு சுய அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உடற்பயிற்சி வகுப்புகளிலும் சரி, மருத்துவப் பரிசோதனை வேளைகளிலும் சரி, வைத்தியர் அதே பாலைச் சேர்ந்தவராக இருப்பினும் கூட - மிகவும் அசௌகரியப் படுகிறார்கள்.

சாதாரண சிறுவர்கள் கூட, உடைகளையப்படுவதை - ஒரு உடற்பரிசோதனையின் போது விரும்புவதில்லை. அவர்கள் மறுக்கவோ, தயங்கவோ கூடும். ஆனால் அவர்கள் கலவரமடைவதில்லை.

*அடுத்த இதழில்: அதி தீவிரமான குழந்தைகள்*

---

## சந்தி விளக்குகள்

ஒரு காலமிருந்தது. புலம்பெயர் சஞ்சிகைகளில் எம்பசியினைத் தீர்த்துக்கொண்டிருந்தோம். எங்காவது எவருக்காவது ஒன்று, இரண்டு வந்திருந்தாலும் தேடிப்பெற்று வாசித்து, பிரதிபண்ணி... வைத்திருப்போம். முத்திரைச் செலவுகள் பாராது 'ஈழத்திற்கு இலவசம்' என்ற வரிகள் பார்த்து கடிதங்களை அனுப்பிப்பெற்றோம். உள்ளூரில் வருபவைகளை விட ஒழுங்காய்க் கிடைத்துக்கொண்டிருக்கும் புலம்பெயர் வெளியீடுகள். எனக்குத் தெரிந்த பலர் மிகமிகக் கவனமாய் 'பைண்ட்' பண்ணி பாதுகாத்து வைத்திருந்தார்கள். யாருக்கு இல்லாவிட்டாலும் எனக்கு நல்ல இலக்கியப் பரிச்சயமும், அறிமுகமும் ஏற்பட்டது இந்த வெளியீடுகளால்தான்.

பிறகு ஓர் அஸ்தமனம். ஒன்றன்பின் ஒன்றாய், ஒவ்வொன்றாய் நின்று போனது. சிலது தன் வட்டத்தைச் சுருக்கிக்கொண்டது. பொருளாதாரம் ஆர்வலர்களைக் கட்டிப்போட்டது. ஒரு ஸ்தம்பிதம் ஏற்பட்டது. இடைக்கிடை எங்கிருந்தாவது ஏதாவதொன்று ஒரு 'பீனிக்ஸ்'ஸாய்ப் புறப்படும்.

இந்தத்தொண்ணுற்றேழாம் ஆண்டில் மீண்டும் ஓர் புலம்பெயர் வெளியீட்டலை ஏற்பட்டிருக்கிறது. அம்மா, வெளி, ழகரம் என்று புதிய களமிறங்கியிருக்கின்றன. (கிடைக்கப்பெற்றவை மட்டுமே குறிப்பிடப்படுகின்றன.)

அம்மா சிறுகதைகளுக்கென்றே வருகிறது. எல்லாநாட்டுச் சிறுகதையாளர்களாயும் பல்வேறு தளங்களில் தரிசிக்க முடிகிறது. இதுவரை மூன்று இதழ்கள் ஒவ்வொன்றை விட ஒவ்வொன்று சிறப்பாய் வந்திருக்கின்றன. 'வெளி' சிறுபத்திரிகை வடிவில் திருப்தியான வாசிப்புக்கேற்றவாறு வருகிறது.

''ழகரம்'' மூன்று இதழ்கள் கிடைக்கப்பெற்றன. கனடாவிலிருந்து வருகிறது. அழகான இலக்கிய மாதஇதழ். முதலாவது இதழில் 'கரிச்சான் குஞ்சன்', 'ழ' பற்றி அதிகம் சொல்லப்போய் ஓரிடத்தில் நழுவி விட்டிருக்கிறார்.

''தமிழ் மொழியிலே மட்டும் இருக்கக்கூடிய இந்த ழகர உச்சரிப்பு வேறெந்த உலகமொழிகளிலும் இல்லாதிருப்பதே இச்சிறப்பிற்கு காரணமாகின்றது'' என்கிறார்.

இந்த ''ழகர'' உச்சரிப்பு அரபுமொழியிலும் இருக்கிறது. தவிரவும் தமிழின் மூன்று 'ழ/ள/ல'க்களின் உச்சரிப்புக்கேற்ற அரபு ழக்களும் உண்டு. கூடவே இந்த 'ழ' உச்சரிப்பு மலையாளத்திலும் உண்டென்று அறியமுடிகிறது.

இவைதவிர புலம்பெயர் நாடுகளில் இன்னும் பல புதிய சஞ்சிகைகள் வருவதாக அறிய முடிகிறது. எனினும் முன்பு போல் கிடைப்பதில்லை.

மேற்குறிப்பிட்ட இதழ்களின் முகவரிகள்:

- அம்மா: **S.Manoharan, (Esc - E13) 210, Ave du 8 Mai 1945, 93150, Le Blanc Mesnil, France.**
- ழகரம்: **25, Dowswell Dr, Scarborough, Ontario, (Canada.)**
- வெளி: **P.O. Box 14936, London NW g o W B**

பொதுவாக சிற்றிலக்கிய இதழ்களின் இன்றைய நிலைபற்றிய 'ழகரம்' குழுவினர் கூறுவதைப்போல் இவ்வாறுதான் கூறவேண்டியிருக்கிறது.

**''மன்பதையின் (மனுக்குலம் என்று அர்த்தமாம்) நேற்றைய தேவைகளின் வடிகாலாய் இன்றைய தேடல். தொடரும் தேடல்கள் சந்தி விளக்குகளாய் ஆங்காங்கே...''**

## மீராநாயரின் சூத்ரம்

இந்தியாவிலே திரையிடத் தடைவிதிக்கப்பட்ட மீராநாயரின் 'காமசூத்ரா' திரைப்படம் கொழும்பு 'சவோய்' திரையரங்கில் 'ஜனத்திரள் காட்சியாக' ஓடிக்கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு சாதாரண முறையில் 'டிக்கெட்' பெற நெருங்க முடியாது. 'இந்தியா டுடே'யின் காமசூத்ரா ஆணுறை விளம்பரப் பக்கமே ஐந்து, பத்து நிமிஷம் பார்க்கவைக்குமென்றால் இப்படத்திற்கான 'கியூ'வைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. சரிநிகரில் யமுனா ராஜேந்திரனின் கட்டுரை கூட பலரை மிக ஆர்வமாய் பார்க்கத் தூண்டிக்கொண்டிருந்தாலும் மணிக்கணக்காக நிற்பதற்கு யாரும் தயாரில்லை. ஏதோ, அந்தப்படத்தில் இலங்கை ரசிகர்களை கவர்கிற சூத்ரம் இருக்கிறதென்பது தெரிகிறது.

வெளிநாட்டில் இப்படத்தைப் பார்த்து வந்த நண்பர் ஒருவர் சொன்னார். 'அந்தப்படத்தில் காமமும் இல்லை. சூத்திரமும் இல்லை' என்று.

மீராவே, உன் நாமம், உன் பட நாமம் உலகெங்கும் வியாபித்து ஜெயிக்கட்டும்!

## பெண் உரிமைகளின் கண்காணிப்பு

'பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு (The Women and Media Collective) 'பெண் உரிமைகளின் கண்காணிப்பு' எனும் மாதாந்த வெளியீடொன்றை மும்மொழிகளிலும் வெளியிடத் தொடங்கியுள்ளது. ஜூலைமாதத்திலிருந்து (ஜூலை தமிழ் இதழ் இம்மாதமே வெளிவந்துள்ளது.) வருகிற இவ்விதழில் பத்திரிகைகளில் இடம்பெறும் பெண்கள் தொடர்பான சம்பவங்கள் திகதிவாரியாக அட்டவணைப் படுத்தப்பட்டு தொகுக்கப்படுகின்றன.

பெண்களுக்கெதிரான வன்முறைகள், அரசியல், யுத்தத்தால் ஏற்படும் பாதிப்புக்கள், இடம்பெயர் அவலங்கள், இனவிருத்தி, சுகாதார உரிமைகள் போன்ற விடயங்கள் குறிப்பாக நோக்கப்படுகின்றன.

தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் வெளிவரும் சுமார் 21 பத்திரிகைகளில் இருந்து இவ்விடயங்கள் தொகுக்கப்படுகின்றன. முதலில் ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டபின்பே தமிழ், சிங்கள மொழிகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ் மொழிபெயர்ப்பு செம்மைப்பட வேண்டிய அவசியத்திலிருக்கின்றது. இதன் ஆசிரியை குமுதினி சாமுவேல். இலங்கையின் பெண்ணிலைவாதிகளில் குறிப்பிடத்தக்கவர்.

தொடர்புகளுக்கு

***'பெண் உரிமைகளின் கண்காணிப்பு'***

**The Women and Media Collective, 12,1/1, Ascot Avenue, Colombo - 05**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 9வது இலக்கியச் சந்திப்பு: இனியும் சூல் கொள்

- ஜீவிதன் -

ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்கள் இலக்கிய ஆர்வலர்களின் ஒன்று கூடலான இலக்கியச் சந்திப்பு, இம்முறை பிரான்சிலுள்ள கார்ஜ்லே கொனஸ் எனும் இடத்தில் நிகழ்ந்தது. இது 23வது இலக்கியச் சந்திப்பாகும்.

தலித்தியம், சிங்கள நாவல்களும் உலக இலக்கியமும், காலம் பற்றிய சுருக்க வரலாறு ஆகிய தலைப்புகளில் அரங்குகள் இடம் பெற்றன. ''இனியும் சூல் கொள்'' எனும் இலக்கியச் சந்திப்பு மலரும் வெளியிடப்பட்டது.

நிகழ்வின் ஆரம்ப உரையை நிகழ்த்தியவர் விழா ஒழுங்கமைப்பாளர் சி. புஷ்பராஜா அவர்கள். அவருடைய உரையின் சாராம்சம்;

''புகலிட சஞ்சிகைகளில் வெளியான ஆக்கங்களை விமர்சிப்பதற்காகவே இலக்கியச் சந்திப்பு என்ற இந்த அமைப்பு உருவாகி வளர்ந்தது. இன்று பத்தாண்டு கால இலக்கியச் சந்திப்பின் வளர்ச்சியை நிதானித்து மதிப்பீடு செய்யும் போது தன் எல்லைப் பரப்புகளை விரிந்த அளவில் பேணி வந்திருக்கின்றதென்பதை நாம் காணலாம். பெண்ணியம், தலித்தியம், சுற்றுச்சூழல், சமூகவியல், நவீன தொழிநுட்பங்கள், அரசியல் ஆய்வுகள், பிறமொழி இலக்கியங்கள், நாடகவியல், ஓவியம்; புதியநூல் அறிமுகங்கள் என்று இலக்கியச் சந்திப்பு பன்முகப்பட்ட வகையில் வளர்ச்சியடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.


புகலிடச் சூழலில் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கும் எதிர்எதிர் கருத்துக்களுக்கும் ஒரு திறந்த விவாதக் களமாக இலக்கியச்சந்திப்பு திகழ்ந்திருக்கிறது. தமது அபிப்பிராயங்களை அச்சமின்றித் தெரிவிக்கவும், மாற்றபிப்பிராயங்களை மனம்–திறந்து கேட்கவும் இலக்கியச் சந்திப்பு வழிவகுத்திருக்கின்றது. கருத்துச் சுதந்திரத்தைப் பேணுவதென்பது இலக்கியச் சந்திப்பின் ஒரு அடிப்படை அம்சமாக இருந்திருக்கிறது. தான் பேசுவது மட்டுமல்ல, மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை பொறுமையுடன் கிரகிப்பதும் இந்த சுதந்திரத்தின் முக்கிய அம்சமாகும்.

ஐரோப்பாவின் புகலிடத் தமிழர்கள் மத்தியில் இலக்கியச் சந்திப்பு உறுதியான தடங்களைப் பதித்திருக்கிறது; மனித உரிமை மீறல்கள் குறித்த எதிர்ப்புகளை இது எதிரொலித்திருக்கிறது. திறந்த மனத்தோடு சமூக, அரசியல் பிரச்சினைகளை ஆராயும் பக்குவத்தை இது வளர்த்திருக்கிறது. எந்த சமரசத்திற்கும், எளிதில் விலையாகிவிடக் கூடிய எழுத்தாளர்களை இது இனம்கண்டு கொண்டிருக்கிறது. அராஜகத்துக்கெதிரான குரலை உரத்து முழங்கியிருக்கிறது. புகலிடத் தமிழர்களின் அரசியல் நோக்கே இந்த இலக்கியச் சந்திப்பின் ஆதார சுருதியாகும். சந்தர்ப்பவாதிகள், சமரசக்காரர்கள் ஆகியோருக்கு எதிரான தீவிர கருத்து நிலைப்பாட்டினை **''இலக்கியச்சந்திப்பு நிகழ்ச்சி''** என்றும் வலியுறுத்தியிருக்கிறது'' என்றார்.

''இனியும் சூல்கொள்'' என்ற இலக்கியச் சந்திப்பு மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றிய மு. நித்தியானந்தன் பேசுகையில், ''பிரபல்யங்களைத் தேடிப் போகாமல் ஆற்றல்களைத்தேடி இம்மலர்க் குழுவினர் அரிய தொகுப்பை வெளிக்கொண்டு வந்திருக்கின்றனர். புகலிடத்தின் எழுத்தாற்றல்களை வெளிக்கொணர்வதில் இம்மலர் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. தமிழன், சிங்களவன் என்ற இனத்துவக் கூறுகளை மீறி மல்லிகா, ரெஜி சிறிவர்தன போன்ற சிங்கள எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கியிருப்பது மலரின் விரிந்த அகவுலகக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகிறது.

புகலிடத்தில் வாழும் தமிழர்கள் விசித்திரக் கிரகங்களிலிருந்து உருவான மனிதர்கள் என்ற வியாக்கியானங்கள் பொய்யானவை. ஒழுங்காய் மாதாமாதம் சீட்டுக்கட்டிக் கொண்டு, தமிழ் சினிமா, வீடியோக்களின் முன் உட்கார்ந்தவாறு, தங்களின் சாதி பார்த்துக் கலியாணம் செய்து கொண்டு, குழந்தைகள் பெற்று வாழும் மனிதனும் இவன்தான். இவனை விசித்திரப் பிறவியாக நினைத்து கவலைப்பட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இந்தச் சாதாரண மனிதர்களின் பிரச்சினைகளை, மன உலக மோதல்களைச் சித்திரிக்கும் சிறந்த ஆக்கங்களையும் இந்த மலர் வெளிக்கொணர்ந்து இருக்கின்றது'' என்று அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலக்கியச் சந்திப்பின் இரண்டாம் நாள் அமர்வில் தலித் அரங்குகியலுக்கு தலைமை வகித்துப் பேசிய கவிஞர் சுகன் உரையாற்றும் போது,




''எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்ற தனித்துவ அரசியல் போக்காக தலித்தியம் இன்றைய தமிழ்ச் சூழலில் தன்னை நிலைநிறுத்தியிருக்கிறது. ஆனால் யாழ்ப்பாணச் சூழலில் இன்றும் ஊறிப்போயிருக்கும் மேட்டுக்குடி வேளாள சாதித்துவத்திற்கு சவாலான ஓர் எதிர்ப்பியக்கத்தின் தேவை இன்றும் நம் சமூக சூழலில் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இந்த சாதித்துவத் திமிரை வெளிப்படுத்த இவர்கள் வெட்கப்படுவதில்லை. அருவருக்கத்தக்க இழிந்த இந்தப் போக்கு சமுதாயத் தளத்தில் இருந்து அகற்றப்படும் வரை தொடர்ந்த நீடித்த போராட்டம் நம்முன் உள்ளது. இந்த ஒடுக்குமுறைக்கெதிராக தம்மைத் தலித்துகளாக இனம் காணும் ஒவ்வொருவரும் இந்த இயக்கப் போக்கில் அணி சேருவது ஒரு வரலாற்றுத் தேவையின் முடிவு'' என்று குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் தலித் அரங்கியல் குறித்து உரையாற்றிய சோர்போன் பல்கலைக்கழக கலாநிதிப் பட்ட ஆய்வாளர் அரவிந் அப்பாத்துரை தனது சிறப்புரையில், ''இந்தியாவில் தலித்துக்கள் தமது போராட்டங்களை முன்னெடுத்த போது தமக்கு முன்னுதாரணமாக கொள்ளத்தக்க நிகழ்வுகள் இந்திய சரித்திரத்தில் இல்லையென்று கருதினார்கள். இந்தியாவின் சரித்திரம் நூற்றாண்டுக் கணக்கில் தலித்களை அடக்கி ஒடுக்கிய ஒரு சரித்திரமே ஆகும். எனவே தான் இந்திய தலித்துகள் தாங்கள் பின்பற்றக்கூடிய உதாரணங்கள் இந்திய சரித்திரத்தில் இல்லையென்று கருதினார்கள். தங்களின் போராட்ட முன்னுதாரணங்களை அவர்கள் அமெரிக்க கறுப்பு இனப் போராட்ட வரலாற்றில் இருந்து கற்றுக் கொண்டனர்.

அமெரிக்காவின் கறுப்புச்சிறுத்தைகள் எனப்படும் அமெரிக்கக் கறுப்பு இன மக்களின் போராட்டங்களை அவர்கள் முன்னுதாரணமாகக் கொண்டார்கள். ஒடுக்கப்பட்ட இனம் தங்களின் எழுச்சிக்கு பிறிதொரு ஒடுக்கப்பட்ட இனத்தின் வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வதில் புதுமை ஏதுமில்லை.

விலங்குகளைத் தவிர இழப்பதற்கு எதுவுமில்லாத ஒரு சனக்கூட்டம் உலகில் எந்த மூலையில் இருந்தும் தனது போராட்டத்திற்கான மூலங்களைத்தேட முடியும் என்று குறிப்பிட்டார்.

''தலித் அரங்கியல்'' அமர்வு ஆரம்பித்த போது மேடையில் தும்புத்தடியும் செருப்பும் வைத்து அதனைத் தொடங்கியது, குத்துவிளக்குப் பாரம் பரியத்துக்கு ஒரு அடியாக இருந்தது.

தொடர்ந்து **''காலம் பற்றிய வரலாறு''** எனும் விஞ்ஞான ஆய்வுப்பட்டறை இடம் பெற்றது. ''பிரபஞ்சத்தின் தோற்றம் விஞ்ஞான சிந்தனையில் ''பெருவெடிப்புகோட்பாடு'' (Big Bang Theory) மகத்தான ஒரு திருப்பு முனையை தொட்டுக் காட்டுகிறது. நவீன விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சி விண்வெளியியலில் நாம் நினைத்துப் பார்க்க முடியாத தகவல்களையும் விபரங்களையும் தேடிக் கொடுத்திருக்கிறது. ஐன்ஸ்ரைனின் ''சார்பு நிலைக்கோட்பாடு'' மேலும் ஸ்திரம் பெறுவதோடு விஞ்ஞான சிந்தனையைச்சரியான திசையிலும் வழிநடத்தியிருக்கிறது. சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் விஞ்ஞான சிந்தனையின் வளர்ச்சியில் பாதிப்புச் செலுத்திய தனி மேதையாக ஐன்ஸ்ரைன் விளங்குகிறார்.''

''காலம் பற்றிய சுருக்கவரலாறு'' (A Brief History of Time) எனும் பொருளில் உரையாற்றிய விஞ்ஞான ஆய்வாளர் மணி சுப்பராயன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விஞ்ஞான ஆய்வுப் பட்டறை மாதிரியில் அமைந்த இவரது விஞ்ஞான உரைக்கு .நா. கண்ணனின் பங்களிப்பும் சிறப்பாக அமைந்தது.

**''சிங்கள நாவல்களும் உலக இலக்கியமும்''** எனும் பொருளில் அடுத்த அரங்கு இடம் பெற்றது.

''ஆங்கிலேய, பிரெஞ்சு, ரஷ்ய நாவல்களே இதுகாலவரை சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வந்திருக்கிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் எழுந்த நாவல்களோடு நமக்கு எந்த விதப் பரிச்சயமும் இருக்கவில்லை. ஆனால் இந்த லத்தீன் அமெரிக்க நாவல்களே நமக்கு நெருக்கமாகவும், அதே சமயத்தில் புதுமையானதாயும் உள்ளன. நான் மொழிபெயர்த்த காப்ரியல் கார்ஸியா மார்க்ஸேயின் லத்தீன் அமெரிக்க நாவல்கள் சிங்கள இலக்கிய உலகில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. மெஜிக்கல் றியலிசம் (Magical Realism) என்ற லத்தீன் அமெரிக்க நாவல்களின் உத்தி, யதார்த்தத்தை புதியதொரு கோணத்தில் அணுக முயன்று பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது'' என்று 'சிங்கள நாவல்களும் உலக இலக்கியமும்' என்ற பொருளில் உரையாற்றிய சிங்கள எழுத்தாளர் காமினி வியங்கொட குறிப்பிட்டார்.

காப்ரியல் கார்ஸியா மார்க்ஸேயின் "Love in the time of cholera" என்ற நாவலை 'கொலரா காலய ஆலே' என்ற தலைப்பில் இவர் மேற்கொண்ட சிங்கள மொழிபெயர்ப்புக்காக காமினி வியங்கொட சிறந்த மொழி பெயர்ப்புக்கான இலங்கை அரசின் விருதினை பெற்றவர். சந்துஷ், மல்லிகா, நாராயணன் ஆகியோர் தமிழ்ப்படுத்திய இவரது தொடர்ந்த உரையில் ஏகாதிபத்தியப் பின்னணியே ஐரோப்பிய நாடுகளில் எழுகின்ற இலக்கியங்களுக்கு உலகளாவிய பிரபல்யத்தைத் தேடித் தருகிறது. ஷேக்ஸ்பியரும் டால்ஸ்டாயும் உன்னதமான எழுத்துலக மேதைகள் என்பதில் இரண்டாவது கருத்து இல்லை. ஆனால், ஷேக்ஸ்பியர் யாழ்ப்பாணத்திலோ, டால்ஸ்டாய் மாத்தறையிலோ பிறந்திருந்தால் அவர்கள் இத்தகைய புகழையும் உலகளாவிய அங்கீகாரத்தையும் பெற்றிருக்க முடியாது. ஆனால் இன்றைய பின்நவீனத்துவ சூழலும், உலகப் பொருளாதார அமைப்பின் நிலைமையும் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் எழுதும் எழுத்தாளர்களுக்குப் புதிய சில வாயில்களைத் திறந்து வைத்திருக்கிறது. அந்த வழி சிறியதானாலும் அதை நாம் பாவித்து விஸ்தரித்துக் கொள்ள முயல வேண்டும் என்று அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

'' இஸபெல்லா அயந்தே'' என்ற சிலி நாட்டுப் பெண் எழுத்தாளர் எழுதிய ''இவா லுனா'' (Eva Luna) என்ற நாவலின் என் சிங்கள மொழி பெயர்ப்பு இலங்கையில் சிங்கள இலக்கிய உலகில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருக்கிறது. லத்தீன் அமெரிக்க நாவல்களின் இந்த சிங்கள மொழியிலான அறிமுகம் சிங்கள இலக்கியப் பரப்பினை விசாலித்திருக்கிறது என்று காமினி வியங்கொட பேசினார். இலக்கியச் சந்திப்பினர் எழுப்பிய கேள்விகளுக்கு காமினி வியங்கொட விரிவாகப் பதிலளித்துப் பேசினார். சல்மான்ருஷ்டி, குந்தர் கிராஸ் ஆகிய இலக்கிய ஆசிரியர்களின் படைப்புகள் பற்றியும் தனது உரையாடல்களில் காமினி விரிவாகப் பேசினார். மேலும் இவ்விலக்கிய சந்திப்பின் 'முஸ்லிம், மலையக மக்கள்: ஒரு சமூகவியல் நோக்கு' எனும் பொருளில் வ.ஐ.ச ஜெயபாலன்,

'கிழக்கும் மேற்கும்' தொகுப் பிற்கான விமர்சன உரையை ந. சுசீந்திரன், நாவலாசிரியை ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'நாளைக்கு இன்னொருத்தன்' எனும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டு வைத்து நா. சுசீந்திரன், ழகரம் சஞ்சிகையை வெளியிட்டு ப.வி.ஸ்ரீரங்கன், 'கதலி' சஞ்சிகையை வெளியிட்டு ஞானம், ''அம்மா'' சஞ்சிகையை வெளியிட்டு கவிஞர் இரா. ரஜீன்குமார், 'செல்வி-சிவரமணி' கவிதைத் தொகுப்பை வெளியிட்டு தேவா, ரஞ்சினி, விஜி, 'தமிழ் இலக்கியங்களில் அரசியல் உதாசீனம்' என்ற தலைப்பில் வ. அழகலிங்கம், 'கணினி யுகம், இன்ரநெற் (இணையம்) இவைகளின் தற்போதைய வளர்ச்சி', மற்றும் 'ஜே.கிருஷ்ணமூர்த்தி ஓர் அறிமுகம்' ஆகிய வெவ்வேறு தலைப்புக்களில் உரை நிகழ்த்திய ஜேர்மன் கீல் பல்கலைக்கழக ஆய்வாளர் நா. கண்ணன், 'தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலை' பற்றி நாவலன், இலங்கையில் இருந்து வருகை தந்த டி. சிவராம், அ. சிவானந்தன் எழுதிய 'நினைவுகள் மரணிக்கும் போது' (When Memories Dies) என்ற ஆங்கில நாவலை விமர்சித்து மல்லிகா, ஆகியோர் உரையாற்றினர். விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் நித்தி சுசீந்திரன், உமா, பாரதிதாசன், பரா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், மீரா, லக்ஷ்மி, ஜெபா, கலைச் செல்வன், தேவி கணேசன், இன்பா, அசோக், ராகவன், வாணி தாசன், நாதன், உதயசேனன், உமாகாந்தன், குகன், றயாகரன், கதிர், நிர்மலன், குகநாதன், (ஈழநாடு), தேவன் (சுவிஸ்), செல்வநாயகம், கைலைநாதன், கலாமோகன், சின்ரா, வனஜா, பாஸ்கரன், மனோ (ஓசை, அம்மா) ஷோபா சக்தி, கிருஜ்ணராஜா, ராமதாஸ், தில்லை நடேசன், மணிவண்ணன், வின்ஸ்டன், அந்தோனிப் பிள்ளை, ரஞ்சி, முத்துகுமார் ஆகியோர் பங்கேற்றனர். நகரசபைத் துணைமேயர், அலுவலர் மற்றும் கார்ஜ் தமிழர் நலன்புரிச்சங்கத்தவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய நெஞ்சங்களின் கடின உழைப்பாலும் ஈகையாலும் கருத்துரைகளாலும் சிறப்பே நிகழ்ந்து முடிந்த -விமர்சனங்கள் இன்னும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற- இவ்விலக்கிய சந்திபபு அடுத்த ஆண்டில் தனது 10வது வருடத்தைப் பூர்த்தி செய்கிறது.

இவ்விலக்கிய சந்திப்பின் மேலதிக விபரங்களை வேண்டுவோர் செ. புஷ்பராஜாவுடன் தொடர்பு கொள்ளலாம்.

S.Pushparajah
7, Rue Racine
95140, Garges Les Gonesse,
France.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆடு புலி ஆட்டம்

சக்கரவர்த்தி



சடசடத்த ஒலியுடன் கிளைகள் ஒடிந்து விழும். ஐந்நூறு ஆண்டுகால போதிமரம் உடைந்து சிதறும். பசும் கிளிகளும் குயில்களும் மைனாக்களும் இன்னபிற பட்சிசாதிகளும் உடல் கருகியும் பொசுங்கியும் இறக்கைகள் சிதறியும் செத்துச் சிதறும்.

வெள்ளைவெளேரென அழகாய் அமைதியாய் இருக்கும் இந்த ''போஹா'' சிதறிய கற்குவியலாய் சின்னாபின்னமாய் உதிர்ந்து குவியும். தேரோக்களையும், பிக்குகளையும் இடிபாட்டுக்குள் இருந்து கை, கால், தலை இதயம் என்று தனித்தனியாய் மீட்டெடுக்க மூன்று நாட்கள் வரை செல்லலாம்.

அதிஸ்டலாப சீட்டுக்காரன் - ரம்புட்டான் காரன்

பிக்பாக்கட்காரன் - நடைபாதை வியாபாரி

பிச்சைக்காரன் - பயணி இன்னபிறமக்கள்

4.15

பஸ் நிலையம் நிரம்பி நெரிசலில் பிதுங்கும். குறைந்தது மூவாயிரம் நான்காயிரம் பேராவது கூடியிருக்கும் நேரம்! திட்டம் இட்டபடி - கட்டளைப்படி நாளை இதே நேரம்...

இந்த வழமை நாளை ஏது? எங்கெங்கோ மூலைக் கிராமத்தில் - மூலை வீட்டில் எல்லாம் மார்பில் அடித்து அடித்து ஒப்பாரி வைப்பார்கள்.

அப்பனை இழந்த குழந்தை - கணவனை இழந்த மனைவி, கையும் காலும் தலையும் ஈரலும் இதயமும் தனித்தனியாய் கிடக்க சிதைந்து சாவார்கள்.

சிதறி - சிறுகோடாய் ஓடி - ஓடையாய் மாறி சாக்கடையில் கலக்கும் மனித இரத்தம். தெரு நாய் மனித இரத்தம் நக்கி சுவைத்துப் பார்க்கும்.

பேயும் நரியும் இடுகாட்டுக்குள்ளும் சுடுகாட்டுக்குள்ளும் ''கூய்...'' போட்டுக்கொள்ளும்.

இறந்தவன் இறந்து போக - அரையும் குறையுமாய் இழுத்துக்கோ பறிச்சுக்கோ என கிடப்பவனும் - கையையோ கண்ணையோ அல்லது இதயத்தையோ ஈரலையோ இழந்தவனும் குடல் மட்டும் வயிறு பிளந்து வெளித்தள்ள - உயிருடன் உள்ளவனும்...

ஓலம் இவ்விடத்தே ஈனசுரமாய் கசிந்து... எதிர் ஒலிக்கும்.

ஊழித் தீ போன்றதொரு பிரளயம். எழுநூற்றி ஐம்பது பேர் முதற்கொண்டு ஆயிரம் பேர்வரைக்கும் கொல்லப்பட வேண்டும். கும்பல் கும்பலாய் உயிர் பறிக்கப்பட வேண்டும். பலவந்தமாய் இயற்கைக்கு புறம்பாய் மனித தர்மங்களுக்கு விரோதமாய் உயிர்த் திருட்டு செய்யவேண்டும்.

இது கொடுமையல்லவா? மகாபாவம் அல்லவா? எத்தனை கோடி ஜென்மங்கள் எடுத்து பாவத்தை தொலைப்பது? இக்கொடும்பாவ கட்டளைக்கு எப்படி நான் உடன் பட்டேன்? கடவுளே... பகவானே... எனைக் காப்பாய். இப்பாவக் கட்டளைக்கு என்னை உட்படுத்தாது எனைத் தடுத்தாட்கொள்ளாயோ... தெய்வமே தெய்வமே... எனைத் தடுத்தாட் கொள்ளாயோ... தடுத்தா...

***அர்ஜுனா***

***போர் புரிதலும் நாட்டை காப்பதும் மீட்பதும் சத்திரியன் கடமை. நீ உன் கடமையை செய்யாது ஒதுங்கும் பட்சத்தில் பழியுன்னை வந்தடையும். யுத்தம் இடல் உன் கடமை. பலனைப் பற்றி கவலை கொள்ளாதே. பலன் என்னும் அழிவுக்கு நானே பொறுப்பானவன்.***

'கிணீர்...' ரென ஒலியை உண்டாக்கிக் கொண்டு நெளிந்த அலுமினிய பாத்திரத்தில் ரூபாய் நாணயம் உருண்டோடியது. சிந்தனை மெல்லக் கலைய - எதிர்க்க அவள் தெரிந்தாள். எனைப் பார்த்து புன்னகைத்து விட்டு நகர்ந்தாள்.

எல்லா நாளும் இதே நேரம் போஹாவுக்கு வரும் சிறுமி. புத்தரை கும்பிட வரும் இச்சிறுமிக்கு என் வேசம் புரியாது எத்தனை இரக்கம் தான் என் மீது.

*''பிறவி ஊமையான இவனுக்கு எத்தொழில் செய்து பிழைப்பதற்கும் முடியாதகாரணத்தால் - இவனுக்கு தான தருமங்கள் பண்ணுங்கள்''*

செந்தலபிட்டிய விதானையானின் கை ஒப்பத்துடன் என் கழுத்தில் தொங்கும் பிச்சைக்கார அட்டையைப் பார்த்து - என் வேசம் தெரியாது முதன் முதலாய் தானம் பண்ணிய சிறுமி. நாள்தோறும் பொய்யனுக்கு ஈகையிடும் சிறுமியைக் கூட கொன்று விடுவேன். நாளை இதே நேரம் இந்த இடத்தில் தான் எங்கேனும் நிற்பாள்.

இவள் எனக்கோ என் இனத்துக்கோ என்ன துரோகம் பண்ணியிருக்கக் கூடும்? வேற்றினம் என்கின்ற ஒன்றைத் தவிர இவளது பாவம் தான் என்ன? பருவ வயதைக் கூட எட்டாத இந்தச் சிறுமியும் கொல்லப்பட வேண்டிய தேவையோ அதில் உள்ள நியாய தர்மங்கள் தான் என்ன? இவளைக் குறி வைத்துத் தாக்கவில்லை. தாக்கப்படும் இடத்தில் இவளும் இருக்கப் போகிறாள். ஆதலால் இவளும் சிதைந்து சாவது என்பது தவிர்க்க முடியாது.

''மஹோ... அம்மே...'' அவள் தான் சத்தமிட்டு குப்புற விழுந்தாள். அதிர்ந்து பார்த்தேன். இடைவெளி விட்டு ஒருத்தன் வேகமாய் ஓடி மறைந்தான். சங்கிலித் திருடன்.

பாத்திரத்தினுள் கிடந்த காசைப் பொறுக்கி பையுள் போட்டுக் கொண்டே சிறுமியை வேகமாய் நெருங்கினேன். செயின் இறுக்கி அறுபட்டதில் கழுத்தோரமாய் இரத்தம் கசிந்தது. முழங்கால் முழங்கையிலும் கூட சிராய்ப்பும் இரத்தமும். கீழே கிடந்தவளை நிமிர்த்தி தடவி தூசி தட்டி விட லேசாய் கிறுகிறுப்பு வந்தது. இரத்தம் பார்க்க பயம் வந்தது. படபடப்புடன் கூடிய மயக்கம் வந்தது. மண்டையின் உட்புறமாய் வியர்த்தது. அவ்விடத்தே நான் மெல்ல அமர்ந்தேன்.

என்னால் எப்படி முடியப் போகிறது? இல்லை, என்னால் முடியவே முடியாது...

***அர்ஜுனா!***

***இரத்தம் பார்த்து மயங்காத மனமும் - சாவு பார்த்து கலங்காத கண்களும் கொலைகளுக் கஞ்சாத நெஞ்சமும் உடையோனே எழுந்திரு சத்திரிய இலக்கணத்தை இழிவுநிலைக்கு உள்ளாக்காது - எழுந்து போர் செய்!***

தலையை நிமிர்த்தி கண்ணை கசக்கிவிட்டுப் பார்த்தேன்...

சன நெரிசலுக்கும் - வாகன விரைதலுக்கும் அப்பால் - ஓரமாய் குமார் நின்று கொண்டு இருந்தான். நெருங்கிப் போனேன். நான் வருவது கண்டு முன்னோக்கி நடக்கத் தொடங்கினான்.

குமார் சாமர்த்தியசாலி. அசாத்திய ஒற்றன் பத்துவருடங்களுக்கு மேலாய் யாராலும் இன்னாரென அடையாளம் காணப்படாது சூழலுடன் ஒன்றிப் போன போகும் சாணக்கியன்.

முதலில் அவனை பார்த்த அன்றே விபரீதமாய் இருந்தான். கோட்டையில் ரெயின் நின்றதும் - கரியமிலக்காற்று முகத்தில் லேசாய் அப்பிற்று. கசகசத்த முகத்தை துடைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தேன். விறைப்பாய் மெலிந்த தேகத்துடன் எதிர்க்க ஒருத்தன் நிற்பது கண்டு சி.ஐ.டி யோவென நினைத்து திகைக்க-

'சைனைட்' நினைப்பு மனசுக்கு போனது.

''அர்ச்ஜுன்'' என்றான்.

மனசு லேசாகி சொல்லப்பட்ட குமார் இவன் என புரிந்து சிரித்தேன். அவன் சிரிக்க மறுத்தான். மறுபடி சைனைட் எண்ணம் மூளைக்குப் போனது.

'நான் குமார்' எனக்கு முதுகாட்டி சொல்லிக் கொண்டே நடக்கத் தொடங்கினான். நம்பிக்கை வந்தது. அவனைப் பின் தொடர்ந்து இடை வெளிவிட்டு நானும் நடந்தேன். அவனைப் பின் தொடர்வது என் கடமை. கேள்விகள் எதுவும் இன்றி அவன் பின் இரண்டு மணிநேரம் தொடர்ந்தேன்.

மூளை இடங்களைப் பதிவு செய்யத்தொடங்கியது. போஹா சந்தி, விகாரை... பஸ் நிலையம், இண்டிகா போஸ்டாபிஸ், பீப்பள்ஸ் பார்க், ஐந்து லாம்படிச் சந்தி... ஆறுமுறை இவ்விடத்தே சுற்றி முடிய - நெருங்கி வந்து விலாசம் கொடுத்தான். 'நாலு பெடியள் சுவிஸ் போக நிக்கிறாங்கள். பார்த்து....'' கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டுத் தொலைந்து போனான்.

முன்னோக்கிப் போகும் குமாரை பின் தொடர்ந்தேன்...

போஹா சந்தியில் இருந்து ஐந்துலாம்பு சந்திவரை முன்னோக்கி நகர்ந்தவன் ஆட்டுப்பட்டித் தெருவுக்குள் புகுந்து மூத்திர முக்கில் ஒதுங்கி நின்றான். என் கழுத்தில் கிடந்த பிச்சக்கார அடையாள மட்டையை கழட்டி அவனிடம் கொடுத்தேன். தோள்பையுள் புகுத்திக் கொண்டான் குமார்.

''நேற்று இரவு மண்டி வந்திது... நாளைக்கு கட்டாயம் முடிச்சிட வேணும்.'' நடந்து கொண்டே சொன்னான். நான் சுரத்தில்லாமல் பின் நடந்தேன்.

''எந்த பிரச்சினையும் இல்லத்தான''

''இல்ல''

''லொறி எடுக்கிறதில''

''இல்ல முதலயே சொல்லிற்றன். பிரச்சின இல்ல. லொறி கிடைக்கும்.'' குமார் முன்னேயும் நான் பின்னேயும் தொடர்ந்து நடந்தோம்.

சிலாபுத்தல இருந்து ''காருண்'ன ''கெந்தல'யில கொண்டு வந்து வைச்சிருக்கான். களனிப் பாலத்தால கொண்டு வர ஏலாது. பாலத்தில ரெண்டு பக்கமும் செக்கிங். மட்டக்குளி காக்காத்தீவில கொண்டு வந்து வைக்க வேணும். அதால முகத்துவார பக்கம் தோணியில வைச்சித்தான் கொண்டுவர வேணும்.

நாளைக்கு பதினொரு மணிக்கு முகத்துவாரம் மாரியம்மன் கோவிலடியுல நிக்கிறன். அந்த இடத்துக்கு லொறியோட வந்தாச்சரி... மூத்திர முக்கால் திரும்பி - செக்கடித்தெரு போய் மைலன் தியேட்டர் மூலையில் இருக்கும் தேனீர்க் கடைக்குள் போய் ''பை''யை கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விட்டு தொலைந்து போனான் குமார். கொச்சிக்கடை சத்திரம் தாண்டி இருக்கும் வாளிக்கிணற்றில் குளிக்க நடந்தேன்.

''என்ன அண்ண, எப்ப பிளைட்டாம்?''

நாள் தோறும் அறைக்குப் போனதும் இதே கேள்வி.

யாராச்சும் ஒருத்தர் கேட்பார்கள். இன்று வசந்தன் கேட்டான்.

''நாளைக்கு'' பொய் சொன்னேன்.

''நாளைக்கா?'' வசந்தனுக்கு அதிர்ச்சியா சந்தோசமா தெரியவில்லை.

''ம்.. சிங்கப்பூருக்கு''

''அண்ண குமார நம்பாதீங்கோ... நாங்க எல்லோரும் சிங்கப்பூர் மலேசியா எண்டு ஆறுமாதம் அலைஞ்சு போட்டு வந்தனாங்கள்''

''பாப்பம் இந்தா சாப்பாடு. செக்கடித்தெருவில எடுத்த நான். எங்க மத்தவங்கள்?''

''எதுக்கண்ண நீங்க வாங்கி வந்தனியள். அவங்கள் லிபட்டி பிளாசாவுக்கு கீதா குமாரசிங்கவோட சலூனுக்கு போட்டாங்கள்.

''எதுக்கு அங்க?''

''வேற எதுக்கு சரக்கடிக்கத் தான்! சுதனோட அக்கா சுவிஸ்ல இருந்து காசு அனுப்பினவ. அத எடுத்துக் கொண்டு போட்டாங்கள்''

''நீ ஏன் போகையில்லை...''

''போக விருப்பம்தான். என்னவோ உறுத்தலா இருந்திச்சி.

ஏலா எண்டு சொல்லிப்போட்டு படுத்திட்டன்.'' தெளிவாய் இருந்தான் வசந்தன்.

சோற்றுப் பார்சல்களை அறை மூலையில் வைத்து விட்டு ஆடைகளைக் கூட மாற்றாது மல்லாக்கப்படுத்து முகட்டை வெறித்தேன் மனசு இருட்டிற்று.

பாவம் இந்த பையன்கள். வசந்தன், ரவி, இளங்கோ, சுதன் எத்தனையோ கனவுகளையும் லட்சியங்களையும் சுமந்து திரிவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து தப்பி வந்ததே பெரும்பாடு. இவையெல்லாவற்றையும் விட நாளை இவர்கள எதிர் நோக்கப் போகும் பிரச்சினைகள் சொல்லி மாளாதவைகளாக இருக்கும்.

நான் தவறவிட்ட தடயங்களை வைத்து - நான் யார் - எந்த இடத்தைச் சேர்ந்தவன் எங்கே தங்கியிருந்தேன் என்பவற்றை எப்படியும் கண்டு பிடித்து விடுவார்கள்.

எதுவுமே அறியாது விழிவிழியென விழிக்கும் இவர்கள் நாலாம் மாடியில் இரத்தப் பூச்சு அறையில் இரத்தம் சொட்டச் சொட்ட ''கனடா போகவந்தவன் இப்ப சிங்கப்பூர் போட்டான்'' என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும் இவர்களால் என்னைப்பற்றி.

நேற்று ராசன் கேட்டான் ஏன் அண்ண... உங்க குடும்பத்தில்தான் ஒருத்தரும் இல்ல எண்டு சொல்லுறியள்.

பேசாம இயக்கத்தில சேந்திருக்கலாம் தானே...

'எதுக்கண்ண வெளிநாடெல்லாம் போய்... நீங்கள் யாருக்கு உழைச்சிக் குடுக்கப் போறியள்? அவங்களுக்குத் தான் அக்கா, தங்கச்சி எண்டு ஏகப்பட்ட பிரச்சினைகள். உங்களுக்கு அப்படியே...''

சிரித்துவிட்டு அவனது சாறனுக்கு சோப்புப போட்டேன். ஓடிவந்து பறித்தெடுத்தான்.

''வேண்டாம் அண்ண... உங்க உடுப்பு மட்டும் தோய்ங்க... டீ போட்டுத் தாறியல் சரி... இந்த வேலையளும் செய்ய வேணுமே.. நேற்று இளங்கோ குடிச்சிப் போட்டு சத்தி எடுக்க நீங்க தானாமே அள்ளினது எண்டு சொன்னார்கள்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏன் அண்ண இப்படியெல்லாம் செய்யிறியள்?''

புன்னகைத்தேன்! என்னால் என்னென்னவோ கொடுமையெல்லாம் அனுபவிக்கப்போகும் இவர்களுக்கு என்னால் என்ன செய்ய முடியும் இவைகளைத் தவிர. உறுத்தும் என் மனது எப்படிப் புரியும் இவர்களுக்கு.

''இல்ல என்ட தம்பிமார் மாதிரி இருக்கியள்.. அதுதான்''

''உங்களுக்கு எத்தின தம்பி? ரெண்டல்லே...''

''ம்.. ரெண்டு தம்பியும், ஒரு அண்ணனும் ஒரு அக்காவும்''

''எல்லாரையும் தான் கொண்டவங்கள்?''

ராசன் கேட்க நான் இறுகிப்போனேன்.

அந்த நாள்!

அந்த நாளுக்கு அப்புறம் தான் நான் இறுகிப்போனேன். பள்ளிவிட்டு தோணியில் ஏறி ஆற்றைக் கடந்து ஓடி என் ஊருக்கு போனபோது - கொக்கட்டிச் சோலை இரத்தம் கொட்டிய சோலையாகியல்லவா கிடந்தது.

வெள்ளைக்காரன் கூட இடிக்காது திரும்பிப் போனதான் தோன்றி ஈஸ்வரர் கோவில் தடயம் கூட இல்லாது தரைமட்டமாகிக் கிடந்தது. நான் தவழ்ந்து ஆடி, பாடி வளர்ந்த தெருக்கள்.. அம்மா அப்பா கூடப் பிறந்தவர்கள். மாமன், மச்சான், சித்தப்பா உட்பட முப்பத்தி ஏழு பேர்கள் என் ஊரவர்கள். அயலவர்கள் எண்ணூற்றி பதின்மூன்று பேர். ஆயிரத்தி இருநூறுபேர் மட்டுமே வாழுகின்ற கொக்கட்டிச் சோலையில எண்ணூற்றி ஐம்பது பேரை வெட்டியும், சுட்டும் - எப்படியோ கொன்று குவித்துவிட்டார்கள். அடையாளம் தெரியாது ஊர் சிவந்து கிடந்தது. அன்றுதான் அன்று தான் இறுகிப்போனேன். அதற்கு அப்புறம்தான் மரத்தது மனது.

பாளம்பாளமாய் பிளந்த நிலத்தில் இன்று லேசாய் தூறல் விழ லேசாய் சிலிர்த்தது மனசு. அமோனிய வாடை குப்பென்று அடித்தது.

கபூர்காக்காவுக்கு என்னைப் பார்த்த உடனேயே கண்கலங்கத் தொடங்கிற்று. என் தலை தடவி தோளோடு அணைத்துக் கொண்டார்.

''இசுமயிலு டெலிபோன் செஞ்சாந்தம்பி காத்தான்குடியில இருந்து ... நீங்க கொழும்புக்கு வாறயளாம் எண்டும் ஒங்களுக்கு ஐநூறு மூட்ட யூரியாவும், லொறியும் வேணும் எண்டு... ஆயத்தமா வெச்சிருக்கன் தம்பி...''

சொல்லிக் கொண்டே லொறித் திறப்பை நீட்டினார். வாங்கிக் கொண்டேன். ''றைவர் இல்லாம எப்பிடித் தம்பி ஊருக்கு கொண்டு போகப் போறயள்... வேணும் எண்டா நம்மட றைவர கூட்டித்து போங்க தம்பி.''

கபூர் காக்க ரொம்பவும் அக்கறையோட கேட்க - நான் மறுத்தேன்.

''இல்ல காக்கா நான் கொண்டு போவன். காசு எவ்வளவு எண்டு சொன்னா...?''

காக்கா என்கை பிடித்து கண்கலங்கினார்.

''இந்த வாழ்க்க போடியார் போட்ட பிச்சதம்பி. ஒங்க வாப்பா இல்லாட்டி நான் இப்பயும் முட்டாசி தான் தம்பி யாவாரம் செஞ்சித்து இரிந்திரிப்பன். ரெண்டு பொஞ்சாதி பதினொரு புள்ள ஒங்க வாப்பாட்ட ஒரு நாள் சொல்லிக் கொளறுனன் தம்பி. அறுநூறு மூட்ட நெல்ல நம்பி குடுத்தாரு. எனக்கு விசுவாசம் இரிக்கி தம்பி. என்ன கயித்த காலமோ... கறாமுல பொறந்ததுகள் குடும்பத்தோட அழிச்சிப் போட்டானுகள். நீங்க கொண்டு போங்க தம்பி. வெள்ளாம வெளஞ்ச ஒடன யூரியாவுக்கு பதிலா நெல்லா குடுங்க தம்பி. லொறிய காத்தான்குடியில ஊட்ட கொண்டு உட்டயல் எண்டா போதும்.''

கபூர் காக்காவை நினைவு தெரிந்த காலம் தொட்டே எனக்கு தெரியும். காத்தான் குடியில் இருந்து கலர்கலராய் மிட்டாய் கொண்டு வந்து வியாபாரம் செய்தவர். அப்பாவின் உதவியால் நெல் வியாபாரியாகி கொழும்பில கடை, ஐந்து லொறி காத்தான் குடியில் சொத்து என்று ஏகப்பட்டவைகள்.

அப்பா சாகின்ற வரை - ஊரில் பிரச்சினை ஆரம்பிக்கும் வரை வீட்டுக்கு அடிக்கடி வந்து தனது நன்றியை தெரிவித்துச் செல்பவர். அப்பாவால் வாழ்வு பெற்றவர். இன்று என்னால் அழிந்து உருக்குலைந்து போகப் போகின்றார். அப்பாவுக்கும் எனக்கும் இடையில் எத்தனை வேறுபாடு.

நன்றி விசுவாசத்திற்காய் ஐநூறு சாக்கு யூரியாவையும் லொறியையும் தந்தனுப்பும் மனிதனுக்கு நான் செலுத்தப் போகும் பிரதி உபகாரம் தான் என்ன?

சித்திரவதை-
சொத்து பறிமுதல்
சிறை அல்லது மரணம்.

சிதைந்து சிதறிக்கிடக்கும் லொறியின் இலக்கத்தை வைத்து இது இன்னாருடையது என்பதை ஆறு மணிக்கு முன்பாய் பிடித்து விடுவார்கள். அப்புறம் என்ன? முதலில் இரத்த மூட்டையாக்குவார்கள். பின்னர்தான் கேள்வி கேட்பார்கள். விழிவிழியென விழிக்கும் கபூர்காக்கா என்ன சொல்வார்?

உனக்கும் இத்தனை பேரின் கொடிய சாவுக்கும் என்ன சம்பந்தம் என்றால் என்ன சொல்வார். என் மேல் சாபம் இடுவதைத் தவிர அவரால் என்ன சொல்ல முடியும்?

பாவம் கபூர்காக்க மிட்டாய் வியாபாரியாகவே அவர் இருந்திருக்கலாம். இப்போது கூட இது எதுவுமே நடக்காமல் தடுக்கலாம். குமார் மட்டுமே இடையில் இருப்பவன். குமாரைக் கொன்று விட்டால்...? கொன்று விட்டு நாள் தோறும் போடும் பிச்சைக்கார வேசத்தையே வழமையாக்கி விட்டால்?

குமார் இறுதிய முகத்துடன் நின்றான். முகத்து வாரம் மாரியம்மன் கோவில் முன் நின்றான். அவன் முகம் எப்போதுமே அப்படித்தான். வேற்றுக்கிரகவாசியின் இயல்புடையயோன் போல் அவன் செயற்பாடுகள். சிரித்தால் உணர்ச்சி என்பதே இல்லாது இருப்பவன். எத்தனை கொடுமைகளை அனுபவித்தானோ.

லொறியை அவன் அருகே நிறுத்த ஏறிக் கொண்டு சைகை காட்டினான். அதன்படி ஓட்டினேன்.

''ஏன் லேட் நான் பயந்திட்டன். இரவும் போன் வந்தது. கட்டாயம் இண்டைக்கு முடிச்சிடச் சொல்லி''

''காக்கா நல்லா தெரிந்தவரு. குடும்பக்கதை கதைக்கத் தொடங்கித்தாரு. சரி... காருண்' எங்க?''

''மட்டக்குளி போறவழியில சந்தியில திரும்பி நேரா''

ஓட்டினேன்.

''இனித்தான் கேன்ல வைக்க வேணுமா? இல்லாட்டி வச்சே இருக்கா?''

''இல்ல இரவே நான் இறுக்கிட்டேன். மொத்தம் பதின்மூணு கிலோவுக்கு மேல... கண்போடம் மட்டும் எட்டுக் கிலோ. ஜல்டின் ஐஞ்சு கிலோ தான். டாலுவினும் கொஞ்சம் லேசா மிக்ஸ் பண்ணியிருக்கன் ஒண்டுக்கு ஆறா டிக்னேட்டர் வச்சிருக்கன்'' பேசுவதை நிறுத்தி விட்டு மெதுவாக ஓட்டும்படி குமார் சைகை காட்டினான்.

பிரதீபா மண்டபம் தாண்டி தெருவோரமாய் மீன் விற்பவர்களைத் தாண்டி ஓரமாய் லொறியை விட்டு இறங்கிக் கொண்டே என்னை இறங்க வேண்டாம் என்று விட்டு மீன் வியாபாரி களுடன் சிங்களத்தில் பேரம் பேசினான். ஐந்து நிமிட பேரத்தின் முடிவில் இரண்டு கூடை மீன் லொறியின் பின்புறம் யூரியா மூட்டையின் மேல் ஏற்றிவிட்டு பெருவிரலை உயர்த்திக் காட்டினான். அப்புறம் தொலைந்து போனான் பாவி.

ஆயிரம் பேரின் வாழ்க்கை இப்போது என்கையில். நான் நினைத்தால் போதும் - பாழ்வெளியில் கடல் முற்றத்தில் ஆற்றின் கரையில் - புல் கூட கருகாவண்ணம் என்னால் முடியும்.

***அர்ஜுனா!***

***நீ உன் போர் கருவியை நழுவ விட்டாலும், இவர்களை நீ கொல்லாது போனாலும், வேறு ஏதேனும் வழியில் நான் இவர்களை கொன்றே தீர்வேன். இவர்கள் எல்லோரையும் நான் ஏற்கெனவே கொன்றாகி விட்டது. உடலை கீழே விழுத்த மட்டுமே நீ போ. போய் அவர்கள் உடல்களை கீழே விழுத்து.***

லொறியை ஸ்ராட் பண்ணி ஓட்டத் தொடங்கினேன். ●

நன்றி: ஞ்சரம்



# மாறிவிடு

காற்றில் அசைந்தாடுகிறது காண்
அந்த நாணல் புல்.
இயல்பாய்
அதன் நளினம் காண்
ரசனை வெளி நிரப்ப.
குழந்தையொன்று
அள்ளிவரும் இயல்பெல்லாம்
நாளும் பொழுதுமாய் தேய்கிறது காண்
என் பயிற்சிக் களத்தில்.
ஓ என் குழந்தையே
நீ இப்படி நட
இப்படிப் பேசு
இப்படி சாப்பிடு
இப்படி உடை அணி
---
வந்து இதற்குள் இருந்துவிடு.
சமூகம் ஒதுக்கித் தந்த வெளிக்குள்
குழந்தையை தேய்த்துத் தேய்த்து
பக்குவமாய்
திணித்துக் கொள்கிறேன் காண்
தந்தைப் பணி தீர்க்க.

கற்களையும் தடிகளையும்
முட்களையும்கூட
குழந்தை
சேர்த்துவந்து விளையாடுகிறது காண்
தன் ரசனைவெளி எறிந்து.
சீ! இதென்ன வீட்டிற்குள் கஞ்சல் குப்பை
ஆஹா! பார் இந்தப் பூவை
அதன் அழகை!'
தேய்த்துத் தேய்த்து சரிக்கட்டிவிடுகிறேன் காண்
குழந்தையின் ரசனையை.
அதுவே இயல்பானதாய்
இயற்கையானதாய்
பிறப்போடு வந்ததுவாய்
...
ஓ என் பெண் குழந்தையே
இன்னுமொன்று.
எமது ரசனை மோந்து
இயற்கை மாறுவதில்லை.
ஆனால்
மற்றவர் ரசனைக்கு
நீ
மாறவேண்டும் காண்
மாறிவிடு!
அன்றேல்
நீ அழகே இல்லாதவள்!

O பாலமோகன்
6ம 1997

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கு கிழக்கு இணைப்பினை பொதுவாக சிங்கள இனவாத சக்திகள் மட்டுமல்லாமல், ஒரு சில இடதுசாரிப் புத்திஜீவிகளும் எதிர்த்து வருகின்றனர். வடக்கு கிழக்கு இணைப்பு சிங்கள மக்களுக்கே வாய்ப்பானது என்று வாதிடுகின்றார் இக்கட்டுரையாளர். சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கிடையே ஒரு பல சம நிலையை பேணுவதற்கான தனது ஆலோசனைகளை இவரது இக் கட்டுரை தருகிறது. வாசகர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக சிங்கள புத்திஜீவிகள் மத்தியில் நிலவும் அபிப்பிராயங்களை அறியத்தரும் நோக்குடன் இக் கட்டுரை இங்கு தமிழில் தரப்படுகிறது. லக்பிம பத்திரிகையிலிருந்து (28/09/1997) இக்கட்டுரையை தமிழில் தந்தவர் சி.செ.ராஜா.

ஆ-ர்.

# வடக்கு கிழக்கு இணைப்பு: சிங்கள மக்களுக்கே நல்லது!

— ரெனிசன் எதிரிசூரிய

இலங்கைக்கு உகந்த அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பது தொடர்பாகக் கடந்த மூன்று வருடங்களாகப் பேசப்பட்டு வருகிறது. இதுவரை இதுதொடர்பாக வெளிவந்துள்ள பல்வேறு கருத்துக்களிலும் பொதுவாக மூன்று நோக்கங்கள் தெளிவாக வெளிப்படுகின்றன.

1. இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக அதிகாரத்தைப் பகிர்வது.

2. இப்போதுள்ள தேர்தல் முறையை மாற்றியமைப்பது.

3. நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றியமைப்பது.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவது குறித்த யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனாலும், கவனத்திற்குட்படுத்தப்பட வேண்டிய, இதுவரை கவனிக்கப்படாத இன்னொரு நோக்கமொன்றும் இருக்கிறது. ''வரிச் சுமையுடன் தொடர்பான அரச பராமரிப்புச் செலவை குறைக்கக்கூடிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பது'' என்ற நோக்கமும் இவற்றுடன் சேர்க்கப்படவேண்டும். இக்கட்டுரை இந்த நோக்கம் குறித்தே பேச முயல்கிறது. ஏனைய மூன்று நோக்கங்கள் குறித்து விவரிப்பது இதன் நோக்கம் அல்ல.


1978ஆம் ஆண்டு அரசியலமைப்பினால் பதவியுயர்வு செய்யப்பட்டதும், அவ் அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தின் படி உருவான மாகாண சபை முறையும் அரச பராமரிப்புச் செலவு அதிகரிக்கப் பெரிதும் காரணமாகியுள்ளன. மாகாண சபையென்பது வெள்ளை யானை ஒன்றை பராமரிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாகவே பொது மக்கள் கருதப்பட்டுள்ளனர். இனச் சிக்கல் மேலோங்கியுள்ள வட - கிழக்குப் பிரதேசங்களில் அது செயற்படவில்லை. அதேபோன்று அதனால் இன முரண்பாடு தீரவுமில்லை. இவ்வாறான நிலைமையின் கீழ் பாரிய அளவில் செலவு செய்து மாகாண சபைகளை நடத்திச் செல்வது அவசியமானதா? அரசியலமைப்புத் திருத்தத்திலும் அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பது தொடர்பான உடன்பாடு ஒன்று இருந்தாலும் அவ் அலகு எது? அலகுக்குக்கிடைக்கும் அதிகாரங்கள் என்ன? என்பன பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உள்ளதாகத் தெரிகிறது. எவ்வாறெனினும் அரசியலமைப்புத்திருத்தத்தின் அரச செலவைக் குறைப்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதும் முக்கிய விடயமாகும்.

### வடக்கு, கிழக்கை ஒரே அலகுக்குள் மட்டுப்படுத்துவது

13வது திருத்தச்சட்டத்தினால் 8 அலகுகள் அமைக்கப்பட்டதனால் மேலதிக அரச பராமரிப்புச் சுமையொன்று மக்களிடம் சுமத்தப்பட்டது. ஜனநாயகம் மிகவும் விரிவாக்கம் செய்யப்படுகையில் செலவு பற்றிக் கருத முடியாது எனவும், உறுப்பினர் தொகை அதிகரிக்கும் போது ஜனநாயகமும் பரவலடையும் என்று கூறப்படும் கருத்துக்களும் தவிர்க்கப்பட முடியாததுதான். விருப்பமின்றியேனும் இனப்பிரச்சினைக்கான செலவைத் தாங்குவது நியாயமானதுதான். ஆனால் ஏனைய பிரதேசங்களுக்கும் இவ்வாறு அலகுகளை அமைப்பது செலவுகளை அதிகரிக்கும் ஒரு விடயம் என்ற உண்மையையும் உள்ளடக்கியே உள்ளது. இதேவேளை வட -கிழக்குக்கான ஒரு அலகுக்குப் பதிலாக இனங்களின் அடிப்படையான வெவ்வேறு அலகுகளை அமைப்பதற்காகவும் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான தீர்வுயோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால், காலப் போக்கில் தமிழ், முஸ்லிம், சிங்கள என்பன போன்ற அலகுகள் உருவாவதைத் தவிர்க்க முடியாது. காலப் போக்கில் அவ் அலகுகள் இனவாதப் போக்கொன்றினுள் திரும்புவதைத் தடுக்கத்தான் முடியுமா? தமிழ் இனவாதத்துக்குப் புறம்பாக முஸ்லிம் இனவாதப் போராட்டமொன்றும் தோன்றக்கூடும். அப்போது இப்போது நிலவும் போராட்டத்துக்கு பதிலாக ஒரு முக்கோணப் போராட்டம் தோன்றவும் இடமுண்டு.

வட-கிழக்குக்கு அலகொன்றை அமைப்பது, போராடிக்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நோக்குக்குப் பொருந்தும். பெரும் நிலப்பரப்பொன்றின் அதிகாரத்துக்குப் பதிலாகக் குறைந்த நிலப்பரப்பொன்றின் அதிகாரத்தைத் தமிழ் மக்களுக்கு வழங்குவது பொருத்தமானது என்ற கருத்தில் சிலர் உள்ளனர். சிங்கள, முஸ்லிம் மக்களைத் தமிழர்களிடமிருந்து பிரிப்பது நல்லதென்பது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் நபர்களின் மட்டத்தில் சரியானதாக இருக்கலாம். ஆனால் யாதார்த்த ரீதியில் பகுத்தாராய்ந்தால், வட- கிழக்கு இணைவதே மிகவும் உகந்ததென்று புரியும். ஏனெனில், வடமாகாணத்தின் சனத்தொகையில் நூற்றுக்கு 90% தமிழர்களாவார். கிழக்கு மாகாணத்தில் நூற்றுக்கு 40% தமிழர்களாவர். 33%மட்டில் முஸ்லிம்களாவர். 27% சிங்களவர்களுமாவர். வடக்கில் தமிழ்ச் சனத்தொகையின் வீதம் மிகவும் அதிகமாகும்போது இனவாதப்போக்கும் அதிகமாகும். ஏனைய இனங்களுடன் கலக்கும் போது அந்நிலைமை பலவீனமடையும். வடமாகாணத்தில் நூற்றுக்கு 90% ஆன தமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தில் நூற்றுக்கு 40% ஆன தமிழ் மக்களுடன் ஒன்று சேரும்போது தமிழ் மக்கள் தொகை நூற்றுக்கு 65%வரை குறைவடையும். கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம்கள் நூற்றுக்கு 60%அளவும் வடக்கிலுள்ள நூற்றுக்கும் 10% ஆன சிங்கள முஸ்லிம் மக்களும் ஒன்று சேரும் போது நூற்றுக்கு 35%ஆன சிங்கள, முஸ்லிம் சக்தியொன்றும் கட்டியெழுப்பப்படும். இந்நிலைமையின் கீழ் அந்நியோன்னியம் நிலவுதலுக்காக இனவாதமாதலுக்குப் பதிலாக ஒத்துழைப்பு மனநிலையொன்று ஏற்படக்கூடும். நூற்றுக்கு 35%ஆன சிங்கள, முஸ்லிம் மக்களின் வாக்குகளும் முக்கியமானதாக விருக்கும். வடக்குத் தமிழ் மக்களுக்கும், கிழக்குத் தமிழ் மக்களுக்குமிடையேயுள்ள முரண்பாடும் இதில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இப்போது நிலவும் அரசியலமைப்பின் படி அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கும் சக்திவாய்ந்த நிலைமையில் சிறு




குழுக்கள் உள்ளன. தொண்டமான் போன்ற பெருந்தோட்டப்புற இந்திய வம்சாவளித் தமிழ் இனப்பிரிவினரின் முக்கியத்துவம் அரசாங்கங்களின் இருப்புக்கும், பலத்துக்கும் அவசியமான காரணிகளாக உள்ளதுபோல வட - கிழக்கை இணைப்பதனூடாக அதனையும் விட சிறப்பாக அரசியல் நிர்ப்பந்தத்தைச் செய்யச் சிங்கள, முஸ்லிம் இனப்பிரிவுகளுக்கு சாத்தியமேற்பட வாய்ப்புண்டு.

வட- கிழக்கு என்ற ஒரே அலகை உருவாக்குவதினூடாக அவ்வலகினுள் வாழும் நூற்றுக்கு 35% ஆன சிங்கள முஸ்லிம் மக்களை அவ் அலகிலிருந்து துரத்தியடிக்க நூற்றுக்கு 65% ஆன பிரிவுகளுக்கு உள்ள சாத்தியப்பாடு பற்றி ஒருவர் பயப்படக்கூடும். ஆனால் அலகொன்று உருவாவது நிலப் பிரதேசமொன்றிலேயாவதால், அவ் அலகில் வாழும் சிறுபான்மை இனப்பிரிவுகளை அதிலிருந்து வெளியேற்ற முடியாது.. இந்த அலகு வடக்குக்கு மட்டுமான ஒரு அலகாக வரையறுக்கப்படும் பட்சத்தில், அதனுள் வாழும் சொற்பளவான சிங்கள முஸ்லிம் மக்கள் சிதறுண்டவர்களாக (எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாதவராய்) வாழவே முடியும்.

வித்தியாசம் அவர்களின் தொகை குறைவதிலேயே தங்கியிருக்கிறது. 35%ஆனவர்களின் உரிமைகளை இல்லாது செய்வதை விடச் சிறு அளவில் சிதறுண்டிருப்பவர்கள் தம் உரிமையை இழப்பதற்கான வாய்ப்பே அதிகமாகும். 10%மான மக்கள் செய்யும் போரை விட 35%மான மக்கள் செய்யும் போராட்டம் வலிமையானது. சிறுஅளவிலானவர்களை தனிமைப்படுத்தி, அவர்களைக் கடும் துன்பத்துக்குள்ளாக்குவது ஒரு பெரிய அநியாயமாக் கொள்ளப்படாமல் போக வாய்ப்புண்டு அல்லவா?

வட - கிழக்குக்கு மட்டும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் ஒரு அலகொன்றை வழங்குவதினூடாக வேறு அலகுகளுக்குச் செல்லும் பராமரிப்புச் செலவை இல்லாமல் செய்ய முடியும். அதனால் இப்போதே மக்களது வரிகளில் இயங்கும் மாகாண சபை உறுப்பினர்கள் சுமார் 400பேருக்குச் செல்லும் செலவும் வெறும் 60 பேரிற்கு மட்டுமாக குறைக்கப்படும். இவ் 60பேருக்குச் செல்லும் செலவுகளும் நான் கீழே தரும்யோசனைகளின்படி இல்லாது செய்யப்படலாம். பல்வேறு மாகாண அலகுகளினால் சட்டமாக்கப்படும் சமத்துவமற்ற சட்டங்கள் குறைக்கப்படும். மத்திய அலகினது பராமரிப்பு, பிரதேச அமைச்சுக்கள் பராமரிப்பு மற்றும் அமைச்சர் பராமரிப்பு, அதிகாரிகள் பராமரிப்பு என்பனவும் குறைவடையக்கூடும்.

### வட-கிழக்கு பா.உக்கள் வடகிழக்கு அலகினை பிரதிநிதித்துவப்படுத்துவது...

வட - கிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கு மேலதிகமாக மாகாண அலகையும் பிரதிநிதித்துவப்படுத்துவது என்று கொள்ளப்படலாம். இதனால் வட -'கிழக்கு அலகுக்கு விஷேட உறுப்பினர்கள் தேவைப்பட மாட்டார்கள். இதனால் அரச பராமரிப்பு நிதி (செலவு) குறையும். பாராளுமன்றம் மற்றும் மாகாண சபை கூடும் நாட்கள் தொடர்பாக முரண்படாத விதத்தில் தினங்களைத் தயாரிப்பது மட்டும் அவசியமாக இருக்கும்.

மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களாகவோ, அல்லது அரச தலைவர்களுடனோ தனியாகக் கூடும் அமைச்சர்கள் என்போரை மாகாண அலுவல்களுக்கு மட்டும் வரையறுத்தால் அவர்களுக்கு அரசாங்கத்தின் அமைச்சரவையொன்றில் கருத்துத் தெரிவிப்பதை விட வேறும் அதிகாரம் இருக்காது. அவர்களுக்கு மத்திய அரசாங்கத்தின் அதிகாரமும் வழங்கபபடும் போது முழுமையான மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களாவர். இவ்வாறான நிலைமையின் கீழ் மாகாண அலகுக்கும், மத்திய அரசாங்கத்துக்குமிடையே நிலவும் முரண்பாடு குறைவடையச் சந்தர்ப்பம் கிடைக்கும். உறுப்பினர்களின் தன்னிச்சையான போக்கும் இல்லாமலாகிவிடும். தனி நாடொன்று உருவாகும் நிலைமை குறைவடையும். மாகாண அலகின் ஆளும் குழு, மத்திய அரசாங்கத்துக்கு எதிரான குழுவாக இருக்கும் போது முரண்பாடு எழக்கூடும். அங்கு மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவை தனியான கூட்டங்களை நடத்துவதற்கும் மாகாண அமைச்சர்கள், அரச தலைவருடன் தனியான கூட்டங்களை நடத்துவதற்கும் அரசியலமைப்பினால் ஆயத்தங்கள் தயாரிக்கப்படலாம்.

மேற்கூறப்பட்ட யோசனைகளின் படி நிச்சயமாக நாட்டினுள் நிலவும் மாகாண அலகுத்தேர்தல் வட - கிழக்குக்கு மட்டும் வரைய்றுக்கப்படுவதால், நிச்சயமாக அதற்கான செலவு குறையும். தேர்தல் நடத்தும் வசதியும் ஏற்படும்.

செலவைக்குறைத்துத் தேர்தல் வாக்கு மோசடிகளையும் இல்லாதொழிக்க ஆட்களைப் பதிவு செய்யும் அடையாள அட்டைகளை உபயோகிப்பது சரியானதாகும். அடையாள அட்டையில் பிறந்த திகதி உள்ளது. பிறந்த் திகதிக்கும், தேர்தல் நடத்தப்படும் தினத்துக்கும் இடையேயான காலம் 18 வருடங்களைத் தாண்டியிருப்பின் அவருக்கு வாக்குரிமையுண்டு. அடையாள அட்டையிலுள்ள முகவரி உள்ளடக்கப்பட்டுள்ள தேர்தல் நிலையத்தில் அவருக்கு வாக்களிக்க முடியும். ஏதாவது விதத்தில் தமது இருப்பிடம் மாறியிருந்தால் தேர்தல் ஆணைக்குழுவிடம் தெரிவித்துத் தாம் இருக்கும் புதிய இடத்திலிருந்து வாக்கைப் பாவிக்க அவகாசத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். எல்லாத் தேர்தல் நிலையங்களுக்கும் நூற்றுக்கு 5% மட்டிலான மேலதிக வாக்குச் சீட்டுக்களை வழங்குவதால் சீட்டுக்களின் குறையைத் தீர்த்துக்கொள்ள முடியும். வாக்குகளைப் பாவிப்பதில் அடையாள அட்டையில் ஏதாவது நிலையான (Permanent) அடையாள மிடுவதால், கள்ள வாக்குகள் போடுவதைத் தவிர்த்து(தடுத்து)க் கொள்ள முடியும். தேர்தல் அதிகாரிகள் எண்ணிக்கையைக் குறைக்கவும் இம்முறை அதிகம் பயன்தரும்.

(முன்னாள் திஸ்ஸமஹாராம பாராளுமன்ற உறுப்பினர் ரெனிசன் எதிரிசூரிய)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காமசூத்ரா

## மதம், அந்நியர்கள் மற்றும் அரசியல்

பகுதி – II

யமுனா ராஜேந்திரன்



பல்வேறு வகை விலைமாதர்கள் வருமாறு:

1. பரத்தைத் தரகி
2. பெண் ஊழியை
3. ஒழுக்கமற்றபெண்
4. நடனமாது
5. பெண் கைவினைஞர்
6. குடும்பத்திலிருந்து வெளியேறிய பெண்
7. அழகை ஆதாரமாகக் கொண்டு வாழும் பெண்
8. முறைப்படியான பரத்தை

*வாத்ஸாயனா அத்தியாயம் ஆறு/ காமசூத்ரா*

கதை பதினாறாம் நூற்றாண்டு இந்தியாவில் இடம் பெறுகிறது.

ராஜ் சிங், நாட்டை பரிபாலனம் செய்வதை விடவும் சுகபோகங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவன். மல்யுத்தம், வேட்டை, கணக்கற்ற பெண்கள் என திளைப்பவன்.

தாரா ராஜவம்சத்தைச் சேர்ந்தவள். ராஜ்சிங்கை மணமுடிக்க இருப்பவள். மாயா அவளது தோழி. பொருளாதார ரீதியில் கீழ் நிலையிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு தாய் மட்டுமே இருக்கிறாள். சகோதரர்கள் எவரும் காட்டப் படுவதில்லை.

தாராவும் மாயாவும் பால்ய காலத் தோழிகள். மாயா உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் பாவிக்கும் பொருட்கள் அனைத்துமே தாரா பாவித்தவைதான். மிஞ்சியவை மட்டுமே மாயாவுக்கு கிடைக்கும்.

தாராவின் மீது மாயாவுக்கு இதையிட்டு ஒரு வன்மமும், பழிவாங்கும் உணர்ச்சியும் மனத்திற்குள் இருக்கிறது. மாயா பாலுறவுச் சாகசங்களில் ஈடுபாடு கொண்டவள். தாராவுக்கும் ராஜ்சிங்குக்கும் திருமணம் நடக்கவிருந்த அன்றிரவில், ராஜ்சிங்கை தனது மயக்கும் சாகசத்தால் மயக்கி அவனோடு உடலுறவு கொள்கிறாள் மாயா. உன் வாழ்வில் என்றென்றும் ஞாபகமிருக்குமாறு, நான் உபயோகப்படுத்திய ஒன்றை உனக்கு விட்டுச் செல்கிறேன் என தாராவிடம் சொல்கிறாள் மாயா. தாராவின் சகோதரனுக்கு/ உடல் ஊனமுற்றவனுக்கு மாயாவின் மீது ஈடுபாடு இருக்கிறது. மாயாவின் இச்செயல் தெரிய வருகிறபோது அவள் அரண்மனையினின்று வெளியே வீசப்பட்டு விரட்டப் படுகிறாள்.

வீட்டை விட்டு வெளியேறி எங்கெல்லாமோ அலைந்து திரியும் மாயா, ஜெய் எனும் சிற்பியைச் சந்திக்கிறாள். அவனது வேண்டுகோளுக்கு இணங்க காமரசம் ததும்பும் ஒரு சிலைக்கான மாடலாக இருக்கிறாள் மாயா. மாயாவும் ஜெய்யும் பரஸ்பரம் காதல் வயப்படுகிறார்கள். அங்கிருக்கும் ரஸாதேவியின் காம ஸாஸ்திரா பள்ளியில் காமக்கலைகளைப் பயில்கிறாள் மாயா. ஜெய்யும் மாயாவும் காம ஸாஸ்திரா நிலைகளிலிருந்து கலவியில் ஈடுபடுகிறார்கள். மனமும் உடலும் இணைந்த அந்த கலவிக்குப்பின் மாயா, ஜெய்யின் முழுமனதையும் சிந்தனையையும் ஆகர்சித்து விடுகிறாள்.

தனக்குள் எங்கெங்கும் நிறைந்திருக்கும் மாயாவை விடுத்து, தனது சிற்பக்கலை வேலையில் ஈடுபடமுடியாது தவிக்கிறான் ஜெய். தனது வேலையைக் குழப்பும் மாயாவின் நினைவையிட்டு அவளை வெறுக்கத் தலைப்படுகிறான் ஜெய். ஜெய்யின் நிராகரிப்பினால் கண்ணீர் வடிக்கும் மாயா, அவனை மறப்பதன் பொருட்டு ரஸா தேவியிடம் விடைபெற்றுக் கொண்டு விலைமகளாச நினைக்கிறாள்.

இந்தச் சூழலில் வேட்டையாடி விட்டு மலையொன்றுக்கு வரும் ராஜ்சிங், ஜெய்யின் சிற்பக்கூடத்துக்கு வந்து மாயாவின் சிலையைப் பார்த்தவுடனேயே அதை மாயா என்று அடையாளம் காண்கிறான். இவளது சருமத்தின் வெப்பமும், வாசனையும் தனக்குத் தெரியும் என்கிறான். அவளைத் தேடிக் கண்டு பிடித்து வர ஆட்களை அனுப்புகிறான்.

மாயா கண்டுபிடித்து வரப்பட்டு ராஜ்சிங்கின் அரண்மனைத் தாசியாக ஆகிறாள். காமஸாஸ்திர ஒழுக்கங்களின்படி காமலீலைகளை பாசாங்குக் கலை என்னும் அளவில் ராஜ்சிங்கின் மீது பாவிக்கிறாள். தாராவினால் ராஜ்சிங்கின் போக ரசனைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அவர்களுக்கிடையில் உடலுறவு என்பதே இடம் பெறுவதில்லை.

மாயாவின் சிலையொன்றை உருவாக்குவதன் பொருட்டு ராஜ்சிங், சிற்பி ஜெய்யை அரண்மனைக்கு வரவழைக்கிறான். மாயாவும் ஜெய்யும் சந்திக்கிறார்கள். ஜெய்யின் முன்பேயே மாயாவின் முலைகளைப் பிசைகிறான் ராஜ்சிங். மாயாவின் உடல் இன்னொருவரினால் ஆளப்படுவதை ஜெய்யினால் சகிக்க முடிவதில்லை. இச்சந்தர்ப்பத்தை ஜெய்யிக்கு பொறாமை ஏற்படுமாறு பாவிக்கிறாள் மாயா.

அரண்மனையில் கொஞ்ச நாட்கள் தங்கியிருக்கும் இடைவெளியில், ராஜ்சிங்குக்குத் தெரியாமல், ஜெய்யும் மாயாவும் கலவியில் ஈடுபடுகிறார்கள். மனமும் உடலும் இயைந்த காம ஸாஸ்திரா நிலைக் காட்சிகள் அவை. விசயம் அறிய வரும் ராஜ்சிங் கோபம் கொள்கிறான். மாயா ஜெய் தனித்திருக்கும் வேளையில் அறைக்குள் நுழைகிறான். நான் உன்னைக் கூப்பிடவில்லை. என் மீது உனக்கு அதிகாரம் ஏதுமில்லை. என் 'உடலை நீ ஆளலாம். என் காதலை நீ பெற முடியாது' என ராஜ்சிங்கைப் பார்த்து மாயா சொல்கிறாள்.

சிற்பி ஜெய்யை யானைக்காலில் வைத்து நசுக்கிக்கொல்ல உத்தரவிடுகிறான் ராஜ்சிங். ஜெய்யை விட்டுவிடு, நீ சொல்வதையெல்லாம் நான் செய்கிறேன் என்கிறாள் மாயா. ஜெய்யின் மீதான மாயாவின் காதலை ராஜ்சிங்கால் சகிக்க முடியவில்லை. மாயாவின் காதல் தனக்கு இல்லையென்பதை நினைத்து தீராத வேதனையில் வீழ்கிறான்.

தாரா மணிக்கட்டை அறுத்துக் கொண்டு தற்கொலை செய்ய முயல்கிறாள். மாயா காப்பாற்றுகிறாள். மாயாவிடம் காம ஸாஸ்திரா நிலைகளை கற்கும் தாரா, அதை ராஜ்சிங்கிடம் பாவித்து அவன் அவளை நெருங்கும்போது, தாரா விலகுகிறாள். வெவ்வேறு காரணங்களுக்காக மாயா, தாரா இருவருமே ராஜ்சிங்கை வெறுக்கிறார்கள். ராஜ்சிங் கஞ்சா போதையிலும், மனவேதனையிலும் மூழ்குகிறான்.

ஜெய் யானையின் கால்களில் நசுக்கப்படும் அந்நேரம், ராஜ்சிங்கின் மீது படையெடுத்து வருகிறான் தாராவின் அண்ணனும் மாயாவை விரும்பியவனுமான அரசன். சரியாகப் பரிபாலிக்கப் படாத நாட்டைக் கைப்பற்ற அவனுடன் உள்ளே நுழைகிறார்கள் முஸ்லிம் படையெடுப்பாளர்கள்.

ஜெய்யின் தலை நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையில் மாயா அரண்மனையை விட்டு நகர்ப்புறத்தைவிட்டு வெளியேறிப் போய்க்கொண்டிருக்கிறாள்.

புழுதி எறியும் காற்று. வெளிறிய ஆரஞ்சு நிற ஆகாயம். தொடுவானம் நோக்கிப்போகும் தாரா. உலகின் துக்கத்தையெல்லாம் புரட்டியபடி ஹோவென்று எழுகிறது நஸ்ரத்படே அலிகானின் பிரபஞ்ச சோகத்தை எழுப்பும் குரல்...

படம் இரண்டு வகைகளில் இயங்குகிறது.

1. புலன் நுகர் இன்பம் தரும் சந்தோஷத்தையும் - நிலவிய சமூகம் வலியுறுத்திய ஒழுக்கங்களை மீறிய சுதந்திரக் காதலையும் - படம் வலியுறுத்துகிறது. மாயாவுக்கும் ஜெய்யிற்கும் இடையிலான காதல் இவ்வகையில் காவியத் தன்மை மிக்க காதலாக இப்படத்தில் இடம்பெறுகிறது.
2. இதற்கு முற்றிலும் நேர்மாறாக- பாலுறவு உரிமைகளை உருவாக்கிய - பாலுறவு சுதந்திரத்தை 'சில கட்டு திட்டமான வரையறைகளுக்குள் அடக்கிய' காம ஸாஸ்திரா நூலை இப்படம் கொண்டாடுகிறது.

காமசூத்ரா எனும் நிறுவனத்தைப்பற்றிய விமர்சனங்கள் எதுவுமே காட்சிகளுக்குள் கொண்டு வரப்படவில்லை.

இப்படத்தில் வரும் சிற்பியான ஜெய், முன்னொரு காலத்தில் அரண்மனைத் தாசியாக இருந்தவளின் மகன். அரண்மனைத் தாசியின் மகனுக்கும் இன்றைய அரண்மனைத் தாசிக்கும் ஏற்படும் காதலை, தனது அதிகாரத்தின் மூலம் நிர்மூலமாக்கிய அரசாதிக்கத்தின் பிரதிநிதியான ராஜ்சிங்கின் வீழ்ச்சியை சரியாகவே மீரா நாயர் கையாண்டிருக்கிறார்.



ராஜ்சிங்கின் பிற நடவடிக்கைகள் மீதான விமர்சனங்கள் படத்தில் இல்லை. குறிப்பாக ஒரு பெண் குழந்தையை உடலுறவுக்கென தனியறைக்கு கொண்டு செல்லும் காட்சி பார்வையாளனுக்கு எந்த விதமான கோபத்தையும் ஏற்படுத்தாமல், அன்றாடம் நிகழும் யதேச்சையான காட்சியாக அமைக்கப் பட்டிருக்கிறது.

காமசூத்ரா பாடம் கற்பிக்கும் ரஸாதேவி தொடர்பான காட்சிகள் முற்றிலும் மோசமான காட்சிகள். லிங்கங்களுக்குப் பொருந்திப் போகும் பல்வகை யோனிகள் பற்றிய விளக்கங்களும், உடற்பயிற்சி மாதிரி முலைகளையும், கால்களையும், இடுப்பையும் வளைத்து தாசித்தொழிலுக்குப் பக்குவப்படுத்தும் செயல்முறை விளக்கங்களையும் விளையாட்டு மைதானம் மாதிரி இடங்களில் சொல்லித் தருகிறாள் ரஸாதேவி.

ரஸாதேவியின் பள்ளியின் சூழ்நிலை ஒரு ஆசிரமம் மாதிரி, பர்ணசாலைகளும், அமைதியும் மெல் ஒலியும், வெளிச்சமும் இசையும் நிறைந்ததாக படத்தில் சித்திரிக்கப்படுகிறது. ரஸாதேவிக்கும் அங்கு மார்பகங்கள் வெளித்த்தள்ள பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கும் ஆன உறவு தாய் மகள்கள் உறவு மாதிரி புனிதப் படுத்தப்பட்டிருக்கிறது.

'எந்த விதமான பிரக்ஞைபூர்வமான **சுதந்திரமான கலகத்தன்மையுள்ள பாலுறவுத் தேர்வுக்கும்'** வழிவிடாத கட்டுதிட்டங்களும், உடலுறவு நிலைகளுமே காம சூத்ரா நூலில் சொல்லப்படுகிறது. முழுக்க முழுக்க ஆணின் தேவைகளுக்கு தயார்ப்படுத்தும் பெண் உடல்கள் குறித்த நூலே காமசூத்ரா நூல். மேலும் பிராமணர்களின் பெண்களும், அரசர்களின் பெண்களும் விதிவிலக்கான புனிதர்களாகவும், கடைநிலையிலுள்ளோரும் விளிம்பு நிலையுள்ள பெண்களும் பரத்தையர்களாக நெறிப் படுத்தப்பட்ட கருத்தியல் சட்டகமே காமசூத்ரா பாடங்களில் செயல்படுகிறது.

ரஸாதேவியாக வரும் ரேகா தேவதைமாதிரி சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். உடம்பினை முழுக்கவும் மூடிப்போர்த்திய வெள்ளையாடை அணிந்த அன்பாகவும், மெதுவாகவும் பேசும் தேவதை. காமசூத்ரா பள்ளியில் பயிற்சியில் ஈடுபடும்பிறபெண்களும் சரி, படத்தில் சித்திரிக்கப்படும் மாயாவும் தாராவும் சரி, மார்பகங்களை முன்தள்ளிய, இடுப்புப் பிரதேசத்தை வெளிக்காட்டும் பெண்களாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஐரோப்பிய மன்னராட்சி (Monarchy) படங்களில்பெண்கள் சித்திரிக்கப்பட்டதுமாதிரியான சித்திரிப்பு இது. படத்தில் காமசூத்ரா பள்ளி மாணவிகள், மாயா, தாரா, தவிர்ந்த பிற பெண்கள் எவரும் இவ்வாறு சித்திரிக்கப்படவில்லை. மிக மோசமான இந்த அசமத்துவ சித்திரிப்பு வரலாற்று விரோதமானது மட்டுமல்ல, வியாபார தந்திரம் கொண்டதும் ஆகும்.

காமசூத்ரா சட்டகத்தின் அதிகாரத்தையும், பாலியல் சுரண்டலையும், விளிம்பு நிலைப் பெண்களை காம சாக்கடையாக்கும் அதன் அரசியலையும் மீரா நாயர் கண்டு கொண்டதற்கான சான்றுகள் படத்தில் இல்லை.

காமசூத்ரா எனும் கருத்தியல் நிறுவனத்திற்கும் சுதந்திரக் காதல் தேர்வுக்கும் இடையில் உள்ள இந்தப் பதட்டம் திரைக்கதையில் தீர்க்கப்படவில்லை. இதனாலேயே இப்படம் ஒரு தர்க்க பூர்வமான திரைக்கதையுள்ள திரைப்படமாக முடியாமல் போகிறது.

இந்தக் குறை, இந்த மாபெரும் தவறு இப்படத்தில் இருந்தாலும் கூட ஒரேஒரு காரணத்துக்காக இப்படம் முக்கியமான படமாக உலக சினிமாவில் பேசப்படும்.

இப்படம் புலன்நுகர் இன்பத்தின் சந்தோசத்தை, நிர்வாண உடல்களின் பரஸ்பரமான கலத்தலை அதனது மோன நிலையில் அதியற்புதமான கலையழகுடன் சித்திரித்திருக்கிறது.

ஜெய் மாயா தொடர்பான இரண்டு கலவிக் காட்சிகள் உணர்ச்சி பூர்வமான கவிதை போன்றவை.

பகுதி III அடுத்த இதழில்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கோணேஸ்வரிகள்... -தொடரும் விவாதம்

# கவிஞருக்கு சமூகப் பொறுப்புணர்வு அவசியம்!

சரிநிகர் பத்திரிகையில் வெளியான 'கோணேஸ்வரிகள்' கவிதையும் அக்கவிதை தொடர்பாக கடந்த சில இதழ்களில்வெளிப் படுத்தப்படும் கருத்துக்களும் எதை எடுத்துக் காட்டுகின்றனவெனில் இலங்கையில் தமிழரிடையே இன்றைக்குக் காத்திரமான விமர்சனச்சூழல் ஒன்று இல்லை என்பதைத் தான். அவ்வகையில் சரிநிகர் ஆசிரியபீடம் இவ்விடயத்தை விவாதத்திற்கு விடுகின்றோம் எனக்கூறி தொடர்ந்தும் அருவருப்பை வெளிப்படுத்தும் கருத்துக்களையே பிரசுரித்து வருகின்றது.

கவிதையை ஒரு வெளிப்பாட்டு வடிவமாக நாம் கொள்ளலாம். அதனூடாக எமது மன உணர்வுகளையும் சிந்தனைகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். இம்மன உணர்வுகளும் சிந்தனைகளும் சமூகம் பாற்பட்டவையாகவே பெரிதும் இருக்கின்றன. அல்லாது போனால் பகிரலில் எதுவித அர்த்தமும் இருக்கப் போவதில்லை. நாம் வாழ்கின்ற சமூகம் தொடர்பான தொடர்ச்சியான அனுபவத்தினூடாக நாம் எம்மை எவ்வாறு நெறிப்படுத்திக் கொள்கின்றோம்? அவ்வனுபவத்தை மற்றவர்களிடம் பகிர்வதனூடாக நாம் எம்மை எவ்வாறு அடையாளப்படுத்துகின்றோம் என்பதே ஒரு வெளிப்பாட்டு வடிவத்தின் பிரதான அம்சமாகும். அவ்வகையில் தனிப்பட்ட கருத்துக்கள் பகிரப்படும் போது சமூக விடயங்களாகின்றன.

ஒரு வெளிப்பாட்டு வடிவம் பூரணத்துவம் பெறாமல் மற்றவர்களுடன் பகிரப்படுமாயின் அப்பகிரலிற்கு அர்த்தமிராது. இங்கு பூரணத்துவம் என்பது நாங்கள் குறிப்பிட்ட கருத்தை மற்றவர்களுடன் பகிர்கின்றோம். அது சமூகத்தைச் சென்றடையப் போகின்றது என்பது தொடர்பாக எமக்கிருக்கும் பொறுப்புணர்வின் பாற்பட்டது. ஒரு கவிதையை எழுதுபவரின் சமூக நிலைப்பாடே கவிதையில் பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டியது. இந்த நிலைப்பாடானது வாழ்தலினூடாக நாங்கள் சமூகம் தொடர்பான சிந்தனையை எவ்வாறு வளர்த்துக் கொள்கின்றோம் என்பதில் தங்கியுள்ளது.

இன்றைக்கு சமூக சிந்தனை (குறிப்பிட்ட கவிதையை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளும் பொழுது) இனக்குழு என்றால் என்ன? இனத்துவம் என்றால் என்ன? இனவாதம் என்றால் என்ன? பால்மை என்றால் என்ன? பாலியல் வன்முறை என்றால் என்ன போன்ற கேள்விகள் சார்ந்த சிந்தனை வயப்பட்டதாக இருப்பது கட்டாயமானதாக இருக்கின்றது. இவை தொடர்பான வித்தியாசமான கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என்பதை கவிதை எழுதுபவர் அறிந்து வைத்திருக்க வேண்டிய தேவையும் அதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்ற தேவையும் இன்றைக்குத் தவிர்க்க முடியாததாகவேயுள்ளது.

சமூகம் தொடர்பான சிந்தனை முரண்பாடுகளினால் ஆனதாயினும் நாம் அவற்றை எவ்வாறு அணுகப் போகின்றோம் என்ற கேள்வி எமது பொறுப்புணர்வினை நோக்கியதாகவுள்ளது. இவையெல்லாம் பிரச்சினைக்குரியதாக இருப்பினும் நாம் எதனை நோக்கிப் போகின்றோம் என்ற கேள்வி சார்ந்தே அணுகுமுறைகளைத் தெரிந்து கொள்கின்றோம். இது எங்கு எம்மை இட்டுச்செல்லும் என்ற கேள்வி இல்லாத எந்தச் செயற்பாடும் சமூகத்தின் அழிவிற்கு வழிசமைக்கக் கூடியது. அதனால் கவிதை என்பது இச்சமூக சிந்தனை சாராமல், அவற்றிலிருந்து பிரிந்ததாக, ஒரு 'தூய்மை'யான வெளிப்பாட்டு வடிவமாக இருக்கும் என்பதை ஏற்க முடியாது.

அவ்வகையில் கோணேஸ்வரிகள் கவிதையில் எனக்கிருக்கும் பிரச்சினைகளைப் பின்வருமாறு கூறலாம். இக்கவிதை ஒரு பாலியல் வன்முறை சம்பந்தமான கவிதை என்பதை முதலில் எடுத்துக் கொள்வோம். கோணேஸ்வரியின் இறப்பு அல்லது அக்கொடூரம் பாலியல் வன்முறை சம்பந்தமான ஒரு விடயமாகவே முதலில் நோக்கப்படுகின்றது. பாலியல் வன்முறையானது ஆணாதிக்கக் கருத்தியலின் வெளிப்பாடாகும். ஒரு பெண்ணை ஆளாகக் கருதாமல் தனியே பௌதீகப் பிராணியாகக் கருதும் ஒரு செயற்பாடு என்பதுடன் பெண் பலயீனமானவள், அவள் கொடுமைப் படுத்தப்படக் கூடியவள், இச்சையைத் தீர்த்துக் கொள்ளப் பலவந்தமாக உபயோகிக்கப்படக் கூடியவள் போன்ற கருத்துக்கள் வழிப்பட்டது. இது மேலோங்கிய கருத்தாக இருக்கின்றமையால் சமூக நிலைகளும் இவ்வகைச் சிந்தனையை ஆதரிக்கின்றதாகவே இருக்கின்றதால் தொடர்ந்தும் இது ஒரு சாத்தியமான விடயமாக இருக்கின்றது. பாலியல் வன்முறை என்பது போர்க்காலங்களில் இவ்வகை வடிவத்தை (ஆயுதம் த்ரித்த இராணுவத்தினரால் பாதுகாப்பற்ற பெண்ணிற்கு இழைக்கப்படும்) எடுக்கின்றது. அதேபோல உலகில் எல்லாச் சமூகங்களிலும் மூலை முடுக்குகளிலும் வீடுகளில், குடும்பங்களில் நடைபெறும் போது அது வெவ்வேறு வடிவங்களை எடுக்கின்றது. சமயங்களில் கணவனால் கூட இழைக்கப்படலாம், தகாத பாலியல் உறவு வழிப்பட்டதான வன்முறையாக சகோதரர்களால், தகப்பனினால் இழைக்கப்படும் கொடுமையாகவும் உள்ளதை அறிவோம். இவையெல்லாம் ஆண் ஆதிக்கக் கருத்தியலின் வழிப்பட்டவையே. இனத்துவம் தான் அங்கு பிரதான காரணியாகின்றது எனக்கொள்ள முடியாது. பாலியல் வன்முறைக்கும் இனத்துவத்திற்குமான இணைவு ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதுபோல பாலியல் வன்முறைக்கும் வர்க்கம், சாதி போன்ற ஏனைய சமூகக் குணாம்சங்களிற்குமான இணைவும் ஏற்படுவதுண்டு. ஆயினும் இங்கு 'பெண்' என்னும் நோக்கே முனைப்புடையது, சாதி வர்க்கம் இனம் என்பன ஆணாதிக்கக் கருத்தியலை வலுப்படுத்த சில சமயங்களில் இணைக்கப்படுவதுண்டு. தனது இனப் பெண்ணை ஒரு ஆண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தமாட்டார் என்றில்லை. அவ்வாறான நிகழ்ச்சிகள் வரலாறு கண்ட உண்மை. அது போல குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த எல்லா ஆண்களும் அவ்வாறான செயலில் ஈடுபடுவர் எனக் கூறமுடியாது.

அதேபோல ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த ஆண் இன்னொரு இனத்தைச் சேர்ந்த பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவாராயின் கட்டாயமாக அது இனம் சார்ந்த செயற்பாடாக இருக்க வேண்டும் என்றில்லை. மாறாக, ஒரு இராணுவத்தினரால் இவ்வன்முறை நடத்தப்பட்டுள்ளது என்பது இங்கு கவனிக்கத்தக்கதே, ஆயுதபலமுள்ள ஒரு இராணுவத்தினருடன் அதற்கு சமானமான பலத்தினைக் கொண்டிராத பெண்ணிற்கு இழைக்கப்பட்ட கொடுமையாக இது நடந்துள்ளது. அதனால் இது தொடர்பான விசாரணையை அரசு முறையாக நடத்தாத பட்சத்தில், இது போர்க்காலக் குற்றமாக பிரகடனப்படுத்தப்படாத பட்சத்தில், குறிப்பிட்டவரிற்கு தண்டனை வழங்கப்படாத பட்சத்தில், இது போலான நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடம் பெறுவதைத் தவிர்ப்பதற்கான நிலைமையை ஏற்படுத்தாத பட்சத்தில், சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வராத பட்சத்தில் இது போலான வடிவத்தையுடைய வன்முறைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதால், பாராமுகமாக இருக்கும் அரசு எனும் நிறுவனம் விமர்சனத்திற்குரியதொன்றாகின்றது.

இவ்இராணுவத்தினருக்கு ஆயுதபலத்தை வழங்கிய நிறுவனமாக குறிப்பிட்ட இடத்திற்கு அவ்விராணுவத்தினை அனுப்பியவர்கள் என்ற முறையிலும் இவ்விடயம் பிரதானமாகின்றது.

அதனால் இக்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாங்கள் எவ்வகையான ஒரு செயற்பாட்டை முன்வைக்கப்போகின்றோம் என்பதும் இன்று சமூக செயற்பாட்டாளர்கள் எல்லோரையும் நோக்கியுள்ள கேள்வியாகும்.

இங்கு இவ்விடயம் தொடர்பான விமர்சனம் பிரதானமாக முதலாவதாக தந்தைவழி தலைமை சமூக அமைப்பையும், இரண்டாவதாக அதனைப் பேணுகின்ற அரசையும் நோக்கியதாக அமையும்.

இக்கேள்விக்கு இக்கவிதை வைக்கும் அணுகுமுறை என்னவென்று பார்த்தால் வெறும் 'ஏச்சு' என்பதாக மட்டுமே உள்ளது. உணர்ச்சி வசப்பட்ட, கோபப்பட்ட ஒரு ஏச்சாக மட்டும் அது வெளிப்படுகின்றது. ஒரு பெண்ணாக சிறுபராயம் முதல் இன்றை வரை இச்சமூகத்தில் பல சொற்களை நான் கேட்டிருக்கிறேன். சந்திகளில் பொதுவாக ஆண்களால் உதிர்க்கப்படும் சொற்களை தூசணம் எனக்கூறி நாங்கள் உதறிச் சென்றதுண்டு. இவை போதையில் கூடுதலாக உதிர்க்கப்படுவதாக உள்ளன. தூசணம் என்பதால் இங்கு நான் அவற்றைப் பட்டியலிடமாட்டேன். ஆனால் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த எல்லாப் பெண்களுமே மனதிற்குள் இலகுவாக அவற்றைப் பட்டியல் இட்டுக் கொள்ளலாம். அவற்றை எல்லாம் தொகுத்து அழகாக்கி ஒரு பத்திரிகையில் பிரசுரித்து விட்டு, சந்தியில் பெண்களைக் கண்டதால் உணர்ச்சி வசத்தில் நான் எழுதிய கவிதை இது என்று ஒருவர் கூறலாம். எனக்கு அந்தக் கணத்தில் இவ்வாறு தான் எழுத வேண்டும் போல் இருந்தது எழுதினேன் எனக் கூறலாம். ஆனால் அப்படியான ஒன்றை பிரசுரத்திற்கும் பகிரலிற்கும் அனுப்பலாமா? அதனைக் கவிதை என்று சொல்லலாமா? உணர்ச்சிவசப்பட்ட ஒரு ஏச்சு என்ற விடயம் ஒருபுறம் இருக்க, இங்கு கவிதையை எழுதியவரின் சமூக நிலைப்பாடு என்ன? இக்கவிதைக்குப் பின்னால் உள்ள கருத்தியல் என்ன என்பதை நோக்குதல் அவசியமானதாகும்.

எவ்வாறு ஒரு இராணுவத்தினருக்கு ஒரு பெண்ணுடைய பாலியல் உறுப்பு பிரதானமானதாகத் தெரிகிறதோ, பெண் பாலியல் உறுப்பினை மட்டும் உடையவளாகத் தென்பட்டாளோ (ஒரு சிந்தனை செய்யும், ஆற்றலுடைய ஆளாக அல்லாமல்) அதே போலத் தான் கவிதையை எழுதியவரும் ஆயுதமாக எடுத்துக்கொண்ட விடயம் பெண்ணுடைய பாலியல் உறுப்பு என்பதே. கவிதையை எழுதியவரின் கருத்தில் இராணுவத்தினருக்கு பிரதானமாகத் தெரிந்தது தமிழ்ப் பெண்ணுடைய பாலியல் உறுப்பு. அதனால் தான் அதற்கு எதிராக சிங்களப் பெண்களுடைய பாலியல் உறுப்பை கவிதைக்குப் பயன்படுத்தலாம் என்ற எதிர்வினையை அவர் இந்தக் கவிதையில் காட்டுகின்றார். கவிஞரின் கருத்திலும் சிங்களப் பெண்கள் அனைவரும் பாலியல் உறுப்புக்களையுடைய பௌதீகப் பண்டங்களே. இராணுவத்தினர் எதனைச் செய்தனரோ அதனையே கவிஞரும் செய்கின்றார். குறிப்பிட்ட பாலியல் வன்முறை நிகழ்ச்சியை அறிந்ததும் ஏற்பட்ட அதிர்ச்சி இக்கவிதையை வாசித்ததும் ஏற்பட்டது. கவிஞர் ஒட்டுமொத்தமாக அந்த வட்டத்திற்குள் நிற்பதையே அவர் கவிதையில் பாவிக்கும் சொற்கள் எடுத்துக் காட்டுகின்றன. பாலியல் வன்முறை என்ற செயற்பாட்டினூடாக இராணுவம் பெண்ணைப் பாலியல் உறுப்புக்களை உடைய பௌதீகப்பண்டமாக வரையறை செய்ததை கவிஞரும் ஏற்றுக் கொள்கின்றார். தமிழ்ப் பெண்ணாயினும் சரி, சிங்களப் பெண்ணாயினும் சரி, அதற்கு அப்பால் அவர்களிடம் ஒன்றும் இல்லை என்ற கருத்தையே கவிஞரும் வலியுறுத்துகின்றார். மேலும் தமிழிச்சிகள் சிங்களத்திகள் என்ற பதங்கள் இனவாதம் மையப்பட்ட கருத்துக்கள் என்பதே எனது கருத்து. ஒரு வெளிப்பாட்டு வடிவத்தில் நாங்கள் இவற்றை பயன்படுத்துவது விமர்சனத்திற்குரியதே. காத்திரமான ஒரு விவாதத்தில் தமிழர்கள் சிங்களவர்கள் போன்ற பதங்களே பயன்படுத்தப்படுகின்றன. அதுபோல் தமிழ்ப்பெண் சிங்களப்பெண் என்ற பதங்கள் நமக்குப் போதுமானவை.

இவ்வாறு பல விடயங்களில் இக்கவிதை அருவருப்பை ஊட்டுகின்றதாகவே இருக்கின்றது. அவ்வகையில் இக்கவிதை நிச்சயமாக விமர்சிக்கப்பட வேண்டிய் ஒன்றே. இக்கவிதையைப் பிரசுரித்த பத்திரிகை தொடர்பான கேள்விகளும் இதனுடன் எழத்தான் செய்கின்றது. ஏனெனில் ஒரு பத்திரிகை தனது தரத்தைப் பேணாமல் யாரும் எதையும் எழுதலாம் என்ற கருத்தைத் தொடர்ந்து பேணமுடியாது. தரம் என்பது எவ்வகையில் குறிப்பிட்ட பத்திரிகை மனித முகவர்த்தன்மைக்கு மதிப்புக் கொடுக்கின்றது என்பதிலேயே தங்கியுள்ளது. அதனால் ஒரு குழுவை மேன்மைப்படுத்தி ஏனைய குழுக்களை சிறுமைப்படுத்தும் கருத்துக்களையும் ஒரு குழுமயப்பட்ட கருத்துக்களினூடாக மற்றைய குழுக்களை அவமதிக்கும் மனப்பாங்கினையும் ஒரு பத்திரிகை ஆதரிக்க முடியாது.

இக்கட்டுரை தொடர்பாக பிரசுரிக்கப்பட்டு வருகின்ற கடிதங்கள் கூட அருவருப்பை ஊட்டுவனவாகவே இருக்கின்றன. ஒருவர் எழுதுகின்றார் இக்கவிதை குறிப்பிட்ட நிகழ்ச்சியை தத்ரூபமாக படம்பிடித்துக் காட்டுகின்றது என, இன்னொருவர் இக்கருத்தியலை உடனடியாக உள்வாங்கியவராய் இன்னொரு கவிதை எழுதுகின்றார். இவை எல்லாம் இன்றைக்கு விமர்சனம் தொடர்பாக இருக்கின்ற பிரச்சினைகளே. குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாங்கள் யாரை விமர்சிக்கப் போகின்றோம் என்பது தொடர்பான தெளிவு எமக்கு இல்லாததாலேயே புத்தரையும், ஒட்டுமொத்தமாக சிங்களப் பெண்கள் எல்லோரையும் இங்கு இழுத்துக் கொள்கின்றோம். குறிப்பிட்ட பாலியல் வன்முறை நிகழ்ச்சிக்கும் புத்தரிற்கும் என்ன சம்பந்தம் என்பது இங்கு விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றே.

மேலும் தினமும் நடக்கின்ற பாலியல் வன்முறைகள் தொடர்பாக அதன் எதிர் விளைவாக கவிதை எழுதுபவர்கள் இலங்கைச் சூழலில் மிகவும் குறைவு. அப்படி ஒரு விடயத்தைக் கவிதையில் கொண்டு வருவது பிரச்சினைக்குரியதே. பாலியல் வன்முறை எனும் செயற்பாடு தொடர்ச்சியானதாக இருக்கின்ற போது அதன் பிரதிபலிப்பு கவிதை வடிவத்திற்குத் திடீரென அறிமுகமாகியுள்ளது. அதனால் தான் இங்கு பாலியல் வன்முறையின் பிரதான காரணியாக தந்தைவழி / ஆண் தலைமைத்துவ ஆட்சியுடைய சமூகத்தின் கருத்தியல் தான் அதற்குப் பிரதான காரணி என்பதை கவிஞர் வெளிப்படுத்தத் தவறுகின்றார்.

குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நட்சத்திரன் செவ்விந்தியன் தனது நீண்டநாள் ஆத்திரம் ஒன்றை செல்வி மீது தீர்த்துக் கொள்ள வழி கிடைத்தது போல சம்பந்தா சம்பந்தமில்லால், செல்வி சுட்டிக் காட்டியது ஒரு விடயமாக இருக்க, இன்னொரு விடயத்தை அலசி ஆராய்ந்திருக்கின்றார். ஒட்டுமொத்தமாக இது ஒரு விவாதமாகவே தோற்றமளிக்கவில்லை. குறிப்பிட்ட விடயத்தை மேலும் கொச்சைப்படுத்துகின்ற தன்மை வெளிப்படுவதுடன் தனிப்பட்ட கோபாவேஷங்களைத் தீர்த்துக் கட்டிக் கொள்ள கிடைத்த தருணமாகவும் இவ்விடயம் பயன்படுத்தப்படுகின்றது.

என்னுடைய நண்பர் ஒருவர் கூறினார்; 'பெண்ணிலைவாதிகள் என்ன செய்தார்கள்? அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. அதனுடன் ஒப்பிடும் போது சரியோ பிழையோ இந்தக் கவிதை நிறையச் செய்திருக்கின்றது' என.

பெண்ணிலைவாதிகள் இது தொடர்பாக ஏதும் செய்தார்களா இல்லையா என்பது ஒரு புறத்தில் இருக்க, அவர்கள் செய்யவில்லை என்பதற்காக இக்கவிதையை நியாயப்படுத்த முடியாது. இவ்விடயம் ஆண் தலைமைத்துவ சமூகக் கருத்தியலின் அருவருப்புத்தன்மையை வளர்த்தெடுக்கும் விடயமாகவே சரிநிகரினால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

சரிநிகர் தொடர்பான ஏமாற்றமே இதனை எழுதத் தூண்டியதே தவிர சரிநிகரைத் தாக்க வேண்டும் என்ற நோக்கமல்ல என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

**கமலினி.க, மட்டக்களப்பு**

---

# [illegible] பெண்ணியம்

கோணேஸ்வரி பற்றிய கவிதை தொடர்பான விவாதத்தில் ஒரு சில அம்சங்கள் பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது.

**1. கவிதையில் ஆபாசமான மொழி:**

இக்கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களைப் போல பாலுறுப்புக்களைக் குறிக்கும் சொற்கள் முன்னர் சண்முகம் சிவலிங்கம், ஜெயபாலன் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்கவிதைகள் அவர்களது தொகுதிகளிலும் இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியம் முதல், சென்ற சில நூற்றாண்டு கால, கட்டுப்பெட்டித்தனம் இறுக்கம் பெறும் வரை பாலுறுப்புக்கள் பற்றிய குறிப்புக்கள் சமய இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளன. இவற்றுக்கும் பாலியல் நிந்தனைச் சொற்கள் எனப்படுவனவற்றுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

**2. பெண்களை அவமதிப்பது:**

பெண்களை அவமதிக்கும் முறையில் அமைந்தவை, தொடராக நிகழ்ந்து வந்த வன்கலவி நிகழ்வுகளல்லாமல், அவை பற்றிய கண்டனக் கூற்றுக்கள் அல்ல. இந்நிகழ்வுகள் பற்றிய பத்திரிகை அறிக்கைகள் பற்றி எவரும் தெரிவிக்காத ஆட்சேபம், ஏன் அது தொடர்பான கவிதைக் கூற்றுப் பற்றி எழுகிறது? இக்கவிதை அதிர்ச்சி தருகிறதாகக் கூறி அதன் பிரசுரத்தைக் கண்டனம் செய்யும் பெண்ணுரிமையாளர்களும் மரபு சார்ந்த ஒழுக்கவாதிகளும் தொலைக்காட்சியில் வருகிற தமிழ், இந்தித் திரைப்பட ஆபாசக் காட்சிகள் பற்றி என்ன நினைக்கிறார்கள்? அவை நமக்கு அதிர்ச்சி தருவதில்லையா? அன்றாடச் செய்தியாகி விட்ட பாலியல் வன்செயல்கள் அதிர்ச்சி தரவில்லையா? அவை பற்றிய செய்தி அறிக்கைகள் அதிர்ச்சி தரவில்லையா? அவை பற்றிய கண்டனங்களை நாம் கேள்விப்படாததற்குக் காரணம் அத்தகைய நிகழ்ச்சிகளுக்கும் அவை பற்றிய செய்திகட்கும் நாம் பழக்கப்பட்டு விட்டோம் என்பதாக இருக்குமா? எத்தனையோ நடந்த பிறகு முதல் முறையாக இப்படி ஒரு கவிதை வருவது தான் நம்மை அதிர்ச்சிக்கு ஆளாக்குகிறதா? ('கற்புக்கனலே, கனல் நெருப்பே' என்ற விதமாகக் கவிதை பண்ணினால் யாருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டிராது.)

'திரும்பிப்பார்' திரைப்பட வசனங்களில் பண்டரிபாய், தன் தம்பியாக ஒரு காமுகன் பாத்திரத்தில் வரும் சிவாஜி கணேசனிடம் கேட்கிற கேள்வி ஒன்று; 'உனக்கு பெண் தானே வேண்டும், இதோ நானிருக்கிறேன்' என்ற விதமாக வருகிறது. இன்று வரை இந்த வரிகளை எத்தனையோ தரம் வானொலியில் கேட்டு மகிழ்ந்திருக்கிற நமக்குப் படையினரை நோக்கிக் கேட்கப்படும் கேள்வி மட்டும் பெண்களை அவமதிக்கிற ஒன்றாகத் தெரிவது புதுமை தான்.

**3. இனவாதம்:**

சிங்களப் பெண்களை விளித்து வரும் சொற்களில் இனவாதம் தொனிப்பது பற்றிய முறைப்பாட்டில் ஓரளவு நியாயம் இருந்தாலும், இந்தப் பாலியல் வன்முறையின் இனவாதப் பரிமாணத்தையும் நாம் மறக்கக் கூடாது. கவிஞர் 1971, 1989 கிளர்ச்சிகளின் போது சிங்களப் பெண்களுக்குப் படையினரின் கைகளில் நடந்ததை ஏனோ கவனிக்கவில்லை என்று தான் எனக்குத் தோன்றுகிறது. (ஒரு வேளை, அவற்றைக் கருதித்தான் எழுதினாரோ தெரியவில்லை. ஆயினும், அந்த உணர்வு கவிதையில் ஏற்படவில்லை.)

நாங்கள் பலர் சொல்ல வேண்டியதை, சொல்லத் தவறியதை, இக்கவிதை சொல்லுகிறது. இதைவிடக் கவித்துவமாகவும், செறிவாகவும், பண்பாகவும் வேறு எவரும் எழுதக்கூடும் என்று யாரும் விவாதிக்கலாம். ஆயினும் யாருமே எழுதாதது ஏன் என்ற கேள்விக்கு முகங்கொடுக்கும் போது கவிஞர் முன்பு நான் தலைகுனிகிறேன்.

கணிசமான விமர்சனங்கள், கவிஞர் ஒரு பெண் என அறியாமல் வந்தவை. அந்த உண்மை தெரிய வந்த பின்பு, சில அபிப்பிராயங்கள் மாறலாம்.


பெண்ணியமும், பெண்ணுரிமையும் பற்றிக் கூவுகிற சிலர், அவமதிப்புக்கு ஆளான ஒரு பெண் அதை மறுத்துக் குரல் எழுப்பும் போது, அதன் உண்மையை விட அதன் மொழி பற்றிக் கூடிய கவனம் காட்டுவதும் கருத்துக் கூறத் தயங்குவதும் தட்டிக் கழிப்பதும், அவர்களது பெண்ணியத்திற் பொதிந்துள்ள கட்டுப்பெட்டித்தனத்தை நமக்கு உணர்த்துகிறதா, அல்லது வேறு ஐயங்களை எழுப்புகிறதா?

**சிவசேகரம், கொழும்பு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## தன்னார்வக்குழுக்களின் வருகை;
## யார் முகத்தில் புன்னகை?

சரிநிகர் 131இன் குறிப்பேட்டில் World Vision அமைப்பு பற்றி சத்யா அவர்களின் உணர்ச்சி பொங்கிய உள்ளக் கிளர்ச்சியைக் கண்டேன். குழந்தைகளின் நலன்பால் World Vision கொண்டுள்ள அக்கறை பற்றி அறிந்து எழுதிய சத்யா, இவ்வமைப்புக்குப் பின்னால் உள்ள ''மறைமுக் அக்கறைகளையும்'' தேடி அறிந்து எழுதி இருந்தால் இன்னும் ''சிறப்பாகவும்'' பிரயோசனமாகவும் அமைந்திருக்கும். எதிர்வரும் காலங்களில் முயல்க!

எனினும் என் சில வார்த்தைகள். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னை காப்பாற்றிக் கொள்ளவும், பலப்படுத்திக் கொள்ளவும் ''உலகை சிவப்பு அபாயத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளல்'' எனும் தனது நவகாலனிய சுரண்டலுக்கு ''அமெரிக்க அமைதிப் பேரரசு'' திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டதே இந்த World Vision அமைப்பாகும். இதனோடு இக் காலங்களில் தான் Ford Foundation, Care போன்ற அமைப்புக்களும் உருவாக்கப்பட்டன.

இத் தன்னார்வக் குழுக்களின், அரசு சாரா நிறுவனங்களின் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களையும் அதன் செயற்பாடுகளையும் நாம் அறிய முடிந்தால், இதன் பின்னால் உள்ள அபாயம் எமக்குப் புரியும். இவ்வமைப்புகளின் பரிவு கொண்ட வள்ளல் தனங்களையும், மனிதாபிமானங்களையும் தர்ம சிந்தைகளையும் நாம் கண்டு மதி மயங்கி விடுவதனால், இதன் பின்னால் உள்ள 'அயோக்கியத்தன அரசியல்', அதன் பேரழிவு வடிவம் எமக்குப் புரிவதில்லை. கடந்த காலங்களில் ஜேர்மனிய தன்னார்வக் குழுவான ''எபெர்ட்'' எனும் அமைப்பு ஜேர்மன் அரசின் நேரடி உளவுப் பிரிவாக கியூபாவில் சதி, சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தெரிய வந்து, இவ்வமைப்பின் பிரதிநிதி ரிச்சர்ட் கிப்லெர் என்பவர் கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று ஜேர்மன் ''கான்ராட் அடினார்'' சி.ஐ.ஏவின் உளவுத் துறைக்காக நிகரகுவாவிலும் வேலை செய்தது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சிலமாதங்களுக்கு முன்னர் Christian Aid எனும் அமைப்பு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டு அவற்றை மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்ற அயோக்கியத் தனமான நடவடிக்கையும் தெரிய வந்தது: இவ்வமைப்புகள் அனைத்தும் ஆப்ரிக்கா, லத்தின் அமெரிக்கா, ஆசிய நாடுகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும், மக்களின் நோய்களையும், வறுமைகளையும் போக்குவதற்கு ''தியாகம்'' பண்ணுவதாகவும் கூறிக் கொண்டே தான், தம் ஊடுருவலைச் செய்கின்றன. அத்தோடு இவை சித்தாந்த ரீதியிலும் கல்விக்கழகங்களையும் புதிய சிந்தனையாளர்களையும், உருவாக்கி மார்க்சியத்திற்கெதிரான கருத்தாக்கத்தையும், செயல்முறையையும் வகுப்பதில் பெரும்பங்காற்றுகின்றன. இதன் எதிரொலிகளைப் பல ''குரல்களில்'' இன்றைய காலங்களில் நாம் தமிழகத்திலும் ஏனைய இடங்களிலும் கேட்கக் கூடியதாகவுள்ளது. இந்தியாவில் இதன் வலைப்பின்னலில் சிக்குண்ட 'மார்க்சியவாதிகள்' அனேகர். ஏன் கொழும்பிலும் கூடவே தான்.

உதாரணமாக, நமது கடந்த கால ''தோழர்கள்'' இத்தன்னார்வக்குழுக்களின் போதனைகளில் கட்டுண்டு ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களிலிருந்து தடம்புரளச் செய்யும் ''வர்க்க சித்தாந்தத்தின் சகாப்தம் முடிந்து விட்டது'' என்ற 'காஷத்தோடு மீண்டும் எங்களிடம் வருவதன் அபாயத்தை என்னவென்று சொல்வது? இப்போதெல்லாம் கொழும்பில் வேர் விட்டுக்கிளம்பும் தன்னார்வக்குழுக்களின் தோற்றங்கள் அதன் செயற்பாடுகள் எமக்கு பெருத்த பயத்தையே கொடுக்கின்றன.

தன்னார்வக்குழுக்கள், அரசு சாரா நிறுவனங்கள் தொடர்பாக இன்று பல்வேறு ஆவணங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக பேராசிரியர் பி.ஜே.ஜேம்ஸ் "Red Star" எனும் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின் தமிழ்வடிவம் ''வஞ்சக வலை விரிக்கும் தன்னார்வக் குழுக்கள்'' எனும் தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது. தயவு செய்து சத்யா அவர்கள் இந்நூலை அறிவதும், இப்புத்தகத்தைக் குறிப்பேட்டில் அறிமுகப் படுத்துவதும் சாலச்சிறந்தது.

மீண்டும் அந்த அழகிய சுவரொட்டி வாசகங்களை நினைவு கொள்வோம். ''அவர்களின் முகங்களில் ஒரு புன்னகையைத் தவழ விடுவதற்காக நாங்கள் எதனையும் செய்வோம்'' எவ்வளவு ஆழமான பொருள் பொதிந்த வார்த்தைகள்? யார் சொல்வது? World Vision. யாருடைய முகத்தில் புன்னகை என்பதுதான் பிரச்சினை! நாம் புரிந்து கொள்ள முயல்வோம்!

**துடைப்பான்,** பாரிஸ்

## மட்டு. கல்வித் திணைக்களம் :
## அப்பாவிகள் பாதிக்கப்படுகிறார்களா?

மட்டக்களப்பு மாவட்டக் கல்வித் திணைக்களம் கல்விப் பணிப்பாளரதும் இன்னும் ஒரு சிலரதும் தனிப்பட்ட சொத்தாக செயற்படுகின்றது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அநேகர். இவற்றினை முறையீடு செய்தால், மேலும் பழிவாங்கல் நடைபெறுகின்றது. இதன் காரணமாக அநேகர் மனம் வெதும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இங்கு உதாரணத்திற்கு ஒரு கல்லூரியின் சம்பவங்களை மாத்திரம் சுட்டிக்காட்டினால் போதுமானது என நினைக்கின்றேன்.

மட்டக்களப்பு கல்வித் திணைக்கள பணிப்பாளர் ஒரு குட்டிராஜா போல் செயற்படுகின்றார். இவருக்கு பிரத்தியேக ஆலோசகராகவும், நிழல் கல்விப் பணிப்பாளர் போலவும் செயற்படுகின்றவர் இன்னொருவர். அதாவது மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து கடந்தவாரமே ஓய்வு பெற்ற சௌந்தரராஜா என்பவர்.

மட்டு. பாலமீன்மடு வித்தியாலயத்தின் அதிபர் பதவி வெற்றிடமானது, இதற்கு தாம் விரும்பிய ஒருவரை அதிபராக நியமிப்பதற்காக, அங்கு உப - அதிபராக இருந்த நரேந்திரன் என்பவரிடம் ஒரு கடிதம் வாங்கப்பட்டது. அதாவது நரேந்திரனை அச்சுறுத்தி அக்கடிதம் வாங்கப்பட்டது. தான் அதிபர் பதவியை விரும்பவில்லையென எழுதிக் கேட்கப் பட்டது. இடமாற்றத்திற்குப் பயந்து அப்பாவியான நரேந்திரன் கடிதத்தை கொடுத்தார். அந்தக் கடிதத்தை தந்திரமாக வாங்கியவர் சௌந்தரராஜா ஆவார். இவர் இப்படிப் பலரிடம் கடிதங்கள் வாங்கிக் கொடுத்துள்ளார். ஆனால் நரேந்திரன் தொலைதூரமான விளாவெட்டுவான் அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இவர் மீள் முறைப்பாடு செய்ததன் காரணமாக மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையில், கல்விப்பணிப்பாளர் இருக்கத் தக்கதாக சௌந்தரராஜாவே கல்விப்பணிப்பாளர் போல் செயற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

சௌந்தரராஜா அதிபராகக் கடமையாற்றிய பாடசாலை ஒரு 1ஏபி பாடசாலையாகும். இங்கு 6ம் ஆண்டுகள் தொடக்கமே வகுப்புகள் உண்டு. ஆனால் ஆரம்பக் கல்வி பயிற்சி மாத்திரம் பெற்ற, ஆரம்பக் கல்வி பாடசாலையொன்றில் கற்பிக்க வேண்டிய நடேசானந்தம் என்கிற ஆசிரியையும் இங்கு கல்வி கற்பிக்கின்றார். பணிப்பாளரும் அதிபரதும் செல்வாக்கே இதற்குக் காரணம். கல்வி அமைச்சின் சுற்று நிரூபத்தின்படி இவர் இங்கு கல்வி கற்பிக்க முடியாது.

இதேபோல் இப்பாடசாலையில் தற்போது அதிபர் தரம் பெற்ற ஸ்ரனிலோய் என்பவர் இருக்கும் போது உதவி ஆசிரியரான பஞ்சலிங்கம் என்பவர் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவும் சௌந்தரராஜா என்பவரது கைங்கரியமே. சிரேஷ்ட தன்மையும் அனுபவமும் மிக்க பலர் இருக்கும் போது க.பொ.த. (சா/த) பரீட்சைக்கும் பஞ்சலிங்கமே பிரதம மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டுள்ளார். எந்த அனுபவமும் இல்லாத சாதாரண உதவி ஆசிரியர் ஒருவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டமை பலருக்கு ஆச்சரியத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அதிகாரத் தோரணை நடவடிக்கைகள் பற்றி மக்கள் விமர்சிக்கத் தொடங்கவே சௌந்தரராஜா திடீரென ஓய்வு பெற்றுள்ளார்.

**எஸ்.எஸ்.ரூபன்,** மட்டக்களப்பு

## தமிழ் ஆசிரியர் சங்கம் :
## வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை?

பயங்கரவாதப் பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளிருக்கும் பாடசாலைகள், திணைக்களங்களில் கடமையாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் அடிப்படைச் சம்பளத்தில் 25 வீதத்தை இடர்கால கொடுப்பனவாக வழங்குமாறு பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டு மாதங்கள் பல மறைந்து விட்டன. முன்னைய ஐ.தே.க அரசாங்கத்தினால் 50 வீதமாக வழங்கப்பட்ட இக் கொடுப்பனவு தற்போதைய அரசாங்கத்தினால் அரைவாசியாகக் குறைக்கப்பட்டும் அதைக் கூட வழங்க முடியாமல் இழுத்தடிக்கப்படுகிறது.

ஏனைய திணைக்களங்கள் சுற்று நிருபம் கிடைத்தவுடன், தங்களுக்குரிய ஆபத்துக் கொடுப்பனவை முழுமையாகப் பெற்றுக் கொண்ட நிலையில், ஆசிரியர்கள் மாத்திரம் ஆபத்துக்கால அலவன்சைப் பெறுவதில் அலைக்கழிக்கப்படுகிறார்கள். வருடாந்தம் அரசாங்கத்தினால் நடத்தப்படும் க.பொ.த.(உ/த), க.பொ.த.(சா/த), 5ம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சை என்பன நடைபெறுவதற்கு முன் துளிர் விடும் இக்கொடுப்பனவு தொடர்பான கோரிக்கைகளும், பத்திரிகை அறிக்கைகளும், போராட்ட முனைப்புக்களும், பரீட்சை முடிந்தவுடன் முடங்கி விடுகின்றன. முன்னறிவித்தல்களை முன்னெடுத்துச் சென்று தங்களது நியாயமான கோரிக்கைகளில் கூட வெற்றி பெற முடியாத நிலையில் இன்றைய ஆசிரியர் சமூகம் உள்ளது!

1996ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சை கடமைகளை பகிஷ்கரிக்க திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர் சங்கங்கள் (சிங்கள) முயற்சித்து செயற்பட்ட போது தமிழ் ஆசிரியர் சங்கம் மாத்திரம் வானொலி, பத்திரிகை, அறிக்கைகளின் வாயிலாக போராட்டத்தைத் தனிமைப்படுத்தி முறியடிக்க முயற்சித்தமை வேதனைக்குரிய விடயமாகும். ஆசிரியர்கள் இன்று போராடத் தயங்கும் சூழ்நிலையிலும், திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் தான், நான்கு மாத கொடுப்பனவை உடன் வழங்குவதற்கும் ஏனைய மாதங்களுக்குரியவற்றை படிப்படியாக வழங்குவதற்கும் உறுதி மொழி அளிக்கவும் வைத்தது. ஆனாலும் ஆசிரியர்கள் இணைந்து போராடிய போது அதைக் கொச்சைப்படுத்தி அதிலிருந்து தன்னைப் பிரித்தெடுத்து விட்டு மீண்டும் பத்திரிகைகளின் வாயிலாக அறிக்கைகளை விட்டு அலவன்ஸ் பாக்கியை வழங்குமாறு தமிழ் ஆசிரியர் சங்கம் கோருவது வேடிக்கையாக உள்ளது.

ஆசிரியர்களுக்கென்று பலவேறுபட்ட ஆசிரியர் சங்கங்கள் இருந்த போதும் ஏனைய தொழிலாளர் அமைப்புகள் ஒன்றுபட்டுப் போராடுவதைப் போன்று ஆசிரியர்களுக்கு திட உறுதியுள்ள ஒரு சங்கமும் இல்லாதது கவலைக்குரியதாகும். ஆசிரியர்களின் நலன் பேண உருவாக்கப்பட்டுள்ள ஆசிரியர் சங்கங்கள் மாவட்டக் கல்விப் பணிப்பாளரினதும், அதிகாரிகளினதும், கால்களில் சரணடைந்து கிடப்பது வியப்பைத் தருகின்றது.

மாகாண கல்விச் செயலாளரும், மாவட்டக் கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களின் ஆபத்துக்கால கொடுப்பனவு விடயத்தில் ''மௌன விரதம்'' காக்கின்றார்கள். பாடசாலைகளையும், பரீட்சைகளையும் பகிஷ்கரிப்போம் என்று ஆசிரியர் சங்கங்கள் அறிக்கை விட்டால், பதவிகளை பாதுகாக்கும் நோக்குடன் அதை முளையிலேயே கிள்ளி எறிய முயற்சிக்கும் மாவட்ட கல்விப்பணிப்பாளர்கள், மாகாணக் கல்விச் செயலாளரின் கவனத்தை ஈர்த்து இவ்வலவன்ஸ் பணத்தைப் பெற்றுக் கொடுக்க ஏன் முன்வரக் கூடாது? பாடசாலைகளை திறக்கவும், மூடவும், உத்தரவிடுவது மட்டும் தான் தங்கள் கடமையென்று இவர்கள் கருதுகின்றார்களா?

கல்வித் திணைக்களத்திலுள்ள அடிமட்ட ஊழியர் முதல் அதிகாரிகள் வரை அறிவிக்கப்பட்ட அலவன்ஸ் பணத்தைப் பெற்று விட்டு அடுத்த அறிவிப்பையும் எதிர் பார்த்துக் கொண்டு இருப்பதாக தெரிய வருகின்றது. இந்நிலையில் பத்து மாதக் கடன் உட்பட எவ்வித கடன் வசதிகளையும் ஆபத்துக்கும், அவசரத்துக்கும் பெற்றுக் கொள்ள முடியாது. ஆசிரியர்கள் திண்டாடுகின்ற போது தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்ட இதையும் இழுத்தடிப்புச் செய்வது விசனத்தை ஏற்படுத்துகின்றன.

ஆபத்துக்கால அலவன்ஸை பெற்றுக் கொள்ளக் கூடிய கால கட்டத்துக்குள் ஆசிரியர்கள் இன்று இருக்கின்றார்கள். இச்சந்தர்ப்பத்தையும் தவற விட்டால், ''வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய'' கதையாக ஆசிரியர்களின் போராட்டம் அமைந்து விடும். அதிலும் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொறுப்பு இவ் விடயத்தில் அளப்பரியது. கைகட்டி, வாய் பொத்தி கல்விக் காரியாலய அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்காது நன்னோக்குடன் செயற்பட முன்வர வேண்டும். அதுவே ஆசிரியர்களுக்கு மத்தியில் நற்பெயரை அச்சங்கத்துக்குப் பெற்றுக் கொடுக்கும். தன்னால் தனித்து நின்று சாதிக்க முடியாது என்றால், ஏனைய இனச்சங்கங்களுடன் இணைந்தாவது போராடலாம் தானே! எனவே தமிழ் ஆசிரியர் சங்கம் இச்சந்தர்ப்பத்தில் சிங்கமாக மாறுமா? இழுத்தடிக்கப்படும் இடர்கால கொடுப்பனவை விரைவில் பெற வழி வகுக்குமா?

**குணா,** ஏறாவூர்

2→

## லைசென்ஸ்..

வேண்டும். இதனால் அப்போது மதுபானச் சாலைகளை ஆரம்பித்தவர்கள் நூறு ரூபா செலுத்தி அனுமதிபெற்ற பின்னர் மதுபானச் சாலையை ஆரம்பித்தனர்.

ஆனால் தற்போது எதுவும் தேவையில்லை. யாரும் நினைத்தவுடன் நினைத்த இடத்தில் மதுபானச் சாலையை ஆரம்பிக்கலாம் என்ற நிலையே யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது. அத்துடன் பல சரக்குக்கடைகளிலும் சாராய விற்பனைத் தாராளமாக இடம்பெற்று வருகிறது.

இதேபோல் மருந்து விற்பனை செய்வோர் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர் ஒருவரை (Pharmacist) தமது நிறுவனத்தில் பணியில் அமர்த்தியிருக்க வேண்டும். டாக்டரின் மருந்துச் சீட்டு இன்றி மருந்து விற்பனை செய்யக்கூடாது என்பது சட்டம். ஆனால் யாழ்ப்பாணத்தில் சந்திக்குச் சந்தி மருந்து விற்பனை நிலையங்கள் திறக்கப்படுகின்றன. அத்துடன் இவர்கள் சில சமயங்களில் வைத்தியர்கள் போலவும் செயற்பட்டு வருகின்றனர்.

**பரமர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka


# தீராதோ தொல்லை!

ஒக்டோபர் 15ந் திகதி புதன் காலை கொழும்பு கோட்டை ஹலதாரி ஹோட்டேல் உலக மத்தியஸ்த்தானம் பகுதியில் வெடித்த குண்டு அரசையும் உல்லாசப் பயணத்துறையையும் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் மட்டுமல்ல கொழும்பிலுள்ள தமிழ் மக்களையும் தான் ஆட்டங் காண வைத்து விட்டது.

முகத்துவாரம், மட்டக்குளி, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, மருதானை, கிராண்பாஸ், தெமட்டக்கொட ஆகிய பகுதிகள் படையினரின் தீவிர வேட்டைக்குட்பட்ட பகுதிகளாகும்.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து 600க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர். இக் கைது நடவடிக்கையில் வயோதிபர்களும் வைக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

வெள்ளிக் கிழமை காலை பம்பலப்பிட்டி குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் முன்னால் திடீர் சோதனை மேற்கொண்ட பொலிசார் கடவுச் சீட்டு பெறுவதற்காக வந்திருந்த 65க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளை கைது செய்து அழைத்துச் சென்றனர்.



குண்டு வெடிப்பு நடந்த நேரத்தில் இருந்து மாலை வரை லேக் ஹவுஸ் கட்டிடத்துக்குள்ளும் வெளியேயும் படையினர் துப்பாக்கி வேட்டுகளை தீர்த்துக் கொண்டிருக்க மறுபுறம் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுயை இலக்கு வைத்து பொலிசாரும் படையினரும் தேடுதலை முடுக்கி விடத் தொடங்கினர். என்ன நடக்கப் போகிறது என்று தெரியாமல் புறக்கோட்டை வீதிகளில் வந்த தமிழ் இளைஞர் பலர் அங்கு நின்ற படையினரால் கைது செய்யப்பட்டு சேட்டைக் கழற்றி பின் பக்கம் கைகளை இணைத்துக் கட்டி புலியென கூட்டிச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தை அறிக்கையிடச் சென்ற அசோசியேற்றட் பிறஸ்ஸைச் சேர்ந்த நரேஸ் இளையதம்பி அவர்களையும் படையினர் விட்டு வைக்கவில்லை. அவர் தான் பத்திரிகையாளர் என்பதை நிரூபித்தும் அவர் தமிழர் என்ற காரணத்திற்காகவே அவரது கடமையை செய்ய விடாது தடுக்கப்பட்டு படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அவர் தாகத்திற்கு தண்ணீர் கேட்ட போதும் படையினர் வழங்க மறுத்து விட்டனர்.

விதிவிலக்காக விடப்படவில்லை.

பொலிஸ் நிலையங்களின் வாயில்களில் கைது செய்யப்பட்டோரின் பெற்றோரும், உறவினர்களும் அவர்களைப் பார்வையிட காத்துக் கிடந்ததை காணக்கூடியதாக இருந்தது.

இதை விட தெமட்டக்கொட பகுதியில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் அடையாள அணிவகுப்புக்கு கோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், பின்னர் அங்கு பலர் தடுத்து வைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

ஹெட்டியாவத்தையில் உள்ள துறைமுக கரையோரப் பொலிஸ் நிலையத்திற்கு ஏனைய பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்திருந்தவர்களை விசாரணைக்கென கொண்டு வந்து குவித்திருந்ததை சனி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் காணக்கூடியதாக இருந்தது.

கோட்டை, வவுனியா புகையிரத நிலையங்களிலும் வந்திறங்கிய பயணிகள் கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வவுனியா பொலிசாராலும் கோட்டைப் பொலிசாராலும் முப்பது பேரளவில் கைது செய்யப்பட்டு தடுத்து

புறக்கோட்டை, டாம் வீதி, பழைய சோனகத்தெரு, புதிய சோனகத் தெரு, மெசெஞ்சர் வீதி, ஆமர் வீதி, விவேகானந்தா மேடு, கதிரேசன் வீதி, கொச்சிக்கடை ஆகிய இடங்களில் உள்ள எல்லா லொட்ஜ்களும் பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டனர்.

விவேகானந்தா மேட்டில் உள்ள லொட்ஜ்களில் வைத்து இளைஞர்களும், யுவதிகளும் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சில லொட்ஜ்களில் தங்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களைச் சென்று பார்வையிடுவதற்குக் கூட எவரும் இல்லாமல் இருப்பதாகவும் நாம் தொடர்பு கொண்ட லொட்ஜ்களின் நிர்வாகம் தெரிவித்தது.

பொலிஸ் நிலையங்களில் வைத்து விசாரணையின் பின்னர் விடுவிக்கப் பட்டவர்களைத் தவிர ஏனையோர் சீ. ஆர். பி. , வெலிக்கடை சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# நீக்கப்படாத பெயர்ப்பலகை

கொழும்புபுளூமெண்டால் அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் பெயர்ப் பலகைக்கு மேலாக நாட்டப்பட்ட சிங்களப் பாடசாலையின் பெயர்ப் பலகையை அகற்றுவதற்கு இற்றைவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இவ்விடயம் தொடர்பாகக் கொழும்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்ப் பாடசாலைகள்) இ. சண்முக சர்மா,

மேல் மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். நல்லையா, கல்வி அமைச்சின் கல்விப்பணிப்பாளர் நாயகம் வாகீசமூர்த்தி ஆகியோரிடமும். கொழும்பு மாவட்ட இ.தொ.கா பராளுமன்ற உறுப்பினர் இரா.யோக ராஜன், முன்னாள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி ஆகியோரிடமும் முறையிட்டும் இதுரை எந்த உருப்படியான நடவடிக்கையும் மெற்கொள்ளப்படவில்லை.

கல்வியமைச்சில் உயர் பதவி வக்கிக்கும்தமிழ் அதிகாரிகளோ, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களோ இப் பாடசாலைப் பக்கம் தலை காட்டவேயில்லை. தவிரவும், இவ்விடயம் பற்றி அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை.

இதைவிட இப்பாடசாலை விடயமாகத் தான் மேல்மாகாண முதலமைச்சருடன் பேசியுள்ளதாகவும், அவர் அடுத்த நாள் நண்பகல் 12 மணிக்குள் சிங்களப்பெயர்ப் பலகை அகற்றப்படாவிட்டால் தான் பொலிசாருடன் வந்து நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்ததாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமியின் அறிக்கை கூட ஒக்டோபர் 13ம் திகதி தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்தது.

இப்பாடசாலையின் முழு விபரங்களும் முன்னைய சரிநிகரில் வெளியாகியது. வாசகர்கள் அறிந்ததே. 61 வருட பழமை வாய்ந்த தமிழ்ப்பாடசாலை ஒன்றின் மீதான சிங்கள ஆக்கிரமிப்பைக் கூடத் தடுத்து நிறுத்த முடியாத நிலையில் தான் அரசுடன் கைகோர்த்து நிற்கும் தமிழ் அதிகாரிகளதும், அரசியல்வாதிகளதும், பாராளுமன்ற உறுப்பினர்களினதும் நிலையுள்ளது.

## அ.செ.மு. காலமானார்

நவீன தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடிகளில் ஒருவரான அ.செ.மு. (அளவெட்டி செல்லக்கண்ணு முருகானந்தம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

1940களில் ''மறுமலர்ச்சி'' இலக்கிய சஞ்சிகையூடாக வெளிக்கிளம்பிய ஈழத்து நவீன த்மிழிலக்கியத்தின் அக்கால கட்டப்பகுதி மறுமலர்ச்சிக் காலம் எனப் பொதுவாக அழைக்கப்படுகிறது. அ.செ.மு, அ.ந.க, மஹாகவி, சாரதா, சோதி போன்ற பலர் இக்காலகட்டத்திற்குரியவர்கள்.

அ.செ.மு. நீண்ட காலப் பத்திரிகைத்துறை அனுபவம் உள்ளவர். எரிமலை என்ற பத்திரிகையையும் நடாத்தியுள்ளார். நூற்றுக் கணக்கான சிறுகதைகளையம் விமர்சனக் கட்டுரைகளையும் எழுதியிருக்கும் அ.செ.மு.வின் நாவல் ''புகையில் தெரிந்த முகம்''.இது இப்போது பதிப்பில் இல்லை. அ.செ.மு.வின் தெரிந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளின் தொகுதி ஒன்று ''மனித மாடு'' என்ற பெயரில் வெளியாகியிருந்தது.

''காளிமுத்துவின் பிரஜா உரிமை '' என்னும் அ.செ.மு.வினுடைய கதை ஒன்று எஸ். பொன்னுத்துரையும் இந்திரா பார்த்தசாரதியும் தொகுத்த பனியும் பனையும் தொகுதியில் இடம் பெற்றிருக்கிறது. இறுதி வரையும் தனியாகவே வாழ்ந்து மடிந்த அ.செ.முவுடன் ஈழத்திலக்கிய வரலாற்றில் ஒரு அத்தியாயம் முடிவு பெறுகிறது.

தனது இறுதிக் காலங்களைப் பலவிதமான அனர்த்தங்களுக்கு மத்தியில் கைதடி வயோதிபர் இல்லத்திலேயே கழிக்க நேர்ந்தது. அஸ்த்மா நோயுடனும் பொருளாதாரக் கஷ்டங்களுடனும் இறுதி வரை விடாது சமர் புரிந்து வந்த அ.செ.மு. இறக்கும் போது வயது 73.

## சர்வசன வாக்கெடுப்பு மூலம் அரசியலமைப்பை மாற்ற முடியுமா?

*மக்கள் கல்விக் கருத்தாடல்-3*

1997 ஒக்.
23
வியாழன்
4.30

**விரிவுரையாளர்கள்:**

**பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா**
அரசியல் பீடம்
பேராதனைப் பல்கலைக் கழகம்

**என்.ஐ. கீதபொன்கலன்**
விரிவுரையாளர்
வரலாறு அரசியல் பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

**இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில்**

ஏற்பாடு:
* இலங்கை மன்றம்
* இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்

ஒக்டோபர் 16ம் திகதியன்று நடை பெறவிருந்து பிற்போடப்பட்ட பாதயாத்திரை, கூட்டம் மற்றும் இசை நிகழ்ச்சி ஆகியனவற்றை மீண்டும் நடாத்துவதற்கான முதல் நடவடிக்கையாக

இனப் பிரச்சினை
தொடர்பாக.....,

- **அரசியல் தீர்வுக்கான வழியைப் பாதுகாப்போம் !**
- **பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்துக் கொள்ள வற்புறுத்துவோம் !!**
- **சிங்கள - தமிழ் தீவிரவாதத்தை நிராகரிப்போம் !!!**

# பொது மக்கள் ஆர்ப்பாட்டம்

ஒக்டோபர் **23** ஆம் திகதி
மாலை 4.00 மணிக்கு
லிப்டன் சந்தியில்
நடைபெறும்.

உங்களுக்கு / உங்கள் அமைப்புக்குச்
செய்யப்படும் தோழமையான அழைப்பே இது...

''சமாதானம்! ஜனநாயகத்துடன்'' இயக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2, அலோ சாலை, கொழும்பு-0[illegible]. அச்சுப் பதிப்பு [illegible] இல 67, ஹைறத்திய பிரேஸ் சிறிமல் உயன, இரத்மலானை. 1997.10.21